விலை ரூபா 20.00

www.onlineuthayan.com



உள்ளூராட்சி மன்றின் பணி 7



போய் விடுங்கள் அசாத் 9

எச்சரிக்கிறது ரஷ்யா 10



அப்ரிடிக்கு அதிகவிலை 20



பக்கங்கள்: 32

# உதயன்

சுடர் 27
கதிர் 56

வள்ளுவர் ஆண்டு 2043 தை 07 சனிக்கிழமை (21/01/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# வடக்கில் அனைத்திலும் இராணுவத்தின் தலையீடு

## சிவில் நிர்வாகம் வெறும் வாய்ப்பேச்சே அமெ. குழுவிடம் இணையம் கருத்து

யாழ்ப்பாணம்,ஜனவரி.21

வடக்கு மாகாணத்தில் அனைத்து விடயங்களிலும் இராணுவத்தின் தலையீடு அளவு கடந்து அதிகரித்துள்ளது. இதனால் எந்த ஒரு விடயத்தையும் இராணுவப் பிரசன்னம் இல்லாமல் நடத்த முடியாத நிலை உருவாகியுள்ளது. எந்த நிகழ்வாக இருந்தாலும் அதற்கு இராணுவத்தைக் கட்டாயம் அழைக்க வேண்டும் என்ற வாய்மூல உத்தரவு அரச அதிகாரிகள் முதல் அனைத்துத் தரப்புக்கும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. மக்கள் தாம் சுயமாகச் சிந்தித்து தமது விருப்பத்துக்கு ஏற்ப எந்தவொரு செயலிலும் ஈடுபட முடியாத நிலையில் உள்ளனர். இது வடக்கில் அரசு இராணுவ ஆட்சியையே தொடர்ந்தும் வைத்திருக்க விரும்புகிறது என்பதை வெளிப்படுத்துகிறது.

இவ்வாறு நேற்று யாழ்ப்பாணத்துக்கு வந்த அமெரிக்க தூதுக்குழுவிடம் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் சுட்டிக்காட்டியிருக்கிறது.

இந்த இராணுவப் பிரசன்னம் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது எனவும் இவ்வாறான நிலை தொடர்ந்தால் அது மீண்டும் வேண்டத்தகாத பிரச்சினைகளுக்கு வழி வகுக்கும் எனவும் இணையம் அமெரிக்கக் குழுவிடம் தெரிவித்திருக்கிறது.

அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் ஆலோசகர் போல் எம்.கார்டர், ஜனநாயக மற்றும் மனித உரிமை, தொழிலாளர் விவ

» 23

# சு.கவாலேயே முடியாதது உறுமயவால் சரிவருமா?

## கேட்கிறது கூட்டமைப்பு

கொழும்பு, ஜன. 21

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் நடத்தி வரும் பேச்சுக்களின் மூலமே ஒரு முடிவை - தீர்மானத்தை - எட்ட முடியாத நிலை இருக்கும் போது, கடும்போக்குவாதிகளான ஹெல உறுமய போன்றனவும் இடம்பெற்றுள்ள தெரிவுக் குழு மூலம் எப்படித் தீர்வை எட்டிவிட முடியும்?

இவ்வாறு கேள்வி எழுப்பினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

அரசு -கூட்டமைப்பு இடையிலான பேச்சு எந்தவித அறிவித்தல்களும் இன்றித் தடைப்பட்டுப்போயுள்ள நிலையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு தனது பெயர்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தராத வரையில் பேச்சுக்குத் செல்லப்போவதில்லை என்று அரச தரப்பு ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தது. அதன் பின்னர் எந்த அறிவித்தலும் வழங்கப் படாமலேயே 17,18,19ஆம்

» 23

# அதிகாரப் பகிர்வு அவசியம்

## விமானத்தில் ஏறியபின் கிருஷ்ணா



கொழும்பு, ஜன.21

இலங்கையில் ஆட்சி அதிகாரத்தில் தமிழர்களுக்கும் வாய்ப்புகளை வழங்கும் வகையில் அதிகாரப்பகிர்வு வழங்கவேண்டியது அவசியமென இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா வலியுறுத்தித் தெரிவித்திருக்கிறார்.

கொழும்புப் பயணத்தை நிறைவுசெய்து நேற்றுமுன்தினம் நாடு திரும்பிய அமைச்சர் கிருஷ்ணா, விமானத்தில் வைத்து இந்திய செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கைக்கு மேற்கொண்ட பயணத்தின்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட பலருடன் நடத்திய பேச்சுகள் திருப்தி

» 23

## பயங்கரவாத நடவடிக்கைகளின்போது

# காணாமற்போனோர் தொடர்பில் அரசு பொறுப்புக்கூறாது-கோத்தபாய

கொழும்பு, ஜன.21

பயங்கரவாத நடவடிக்கைகளில் காணாமல் போனோர் தொடர்பில் அரசோ அல்லது இராணுவமோ பொறுப்பு கூறாது என்று பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட போதும், சில அரசியல் கட்சிகளின் பின்னால் ஒழிந்துகொண்டுள்ள பயங்கரவாதிகள், பிரச்சினைகளை ஏற்படுத்துவதற்கான விஷத்தைக் கக்கிக்கொண்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

அத்துடன், அவ்வாறான பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவோருக்கான ஆதரவினை சர்வதேச அமைப்புக்கள் வழங்கி வருவதாகவும் பாதுகாப்பு செயலாளர் சுட்டிக்காட்டினார்.

போர்க் காலத்தின் போது உயிரிழந்த மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரத்து 217 இராணுவ சிப்பாய்களின் குடும்பங்களுக்கு 'உத்தம பூஜா' பதக்கங்களை வழங்கும் நிகழ்வு நேற்று மாத்தளை, கொஹொலந்தவெல பிரதேசத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பாதுகாப்பு செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (உ-சி)

# செனட் சபை யோசனையை நிராகரித்தது கூட்டமைப்பு

கொழும்பு, ஜன.21

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் செனட்சபை ஒன்று அமைக்கப்படும் என்ற இலங்கை அரசின் யோசனையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று முற்றாக நிராகரித்துள்ளது.

செனட்சபை என்பது இனப்பிரச்சினைக்கான முழுமையான தீர்வு அல்ல. அது முழுமையான அதிகாரப்பகிர்வின் ஓர் அங்கமே எனச் சுட்டிக் காட்டியுள்ள தமிழ்த் தேசி

» 23

# திடீர் டெங்குச் சோதனை நேற்று 776 வீடுகளில்

## திருநெல்வேலிப் பகுதியில் நடந்தது

யாழ்ப்பாணம், ஜன.21

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள திருநெல்வேலிப் பகுதியில் தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு நேற்று 776 வீடுகளில் திடீர் சோதனை நடத்தப்பட்டது.

நுளம்புக் குடம்பி காணப்பட்ட 7 வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராக இதன்போது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கோப்பாய்ப் பொலிஸாரால் இந்த வழக்குப் பதிவு

» 23

# கடத்தல்களுக்கு அரசே பொறுப்பு

## பொன்சேகாவின் கருத்து இது



கொழும்பு, ஜன. 21

வடக்கில் அண்மைக் காலங்களில் நடந்த கடத்தல்கள் மற்றும் காணாமல் போதல்களுக்கு அரசே பொறுப்பு என்று இராணுவத்தின் முன்னாள் தளபதி சரத் பொன்சேகா குற்றஞ்சாட்டினார்.

இராணுவத் தளபதியாக இருந்தபோது முறைகேட்டில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டு மீதான விசாரணைக்கு நீதிமன்றத்துக் அழைத்து வரப்பட்டபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னதாக, யாழ்ப்பாணத்தில் டிசெம்பர் 9ஆம் திகதி காணாமல்போன ஜே.வி.பி. கிளர்ச்சிக் குழுவைச் சேர்ந்த லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் பற்றிய தகவல் எதுவும் தெரியவில்லை என்று அரசு வியாழக்கிழமை அறிவித்திருந்தது.

» 23

## 8 பேருக்கு ஆயுள் சிறை

ஹெரோயின் போதைப் பொருள் கடத்திய குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட 8 பேருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று ஆயுள் சிறைத் தண்டனை வழங்கியது. வெல்லம்பட்டியவில் 2001ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 37.4 கிலோகிராம் ஹெரோயினுடன் இந்த 8 பேரும் கைது செய்யப்பட்டிருந்தார்கள். அபேசிறி குணவர்தன காமினி, நாகரட்ணம் ரத்நாயகம், மொஹமட் ஜலீல் மொஹமட் நாசர், உதயா ராமநாதன், கே.வி.சிவானந்தன், ஏக்கநாயக்க முதியான் சலாகே சமரவீர, மொஹமட் ஹுஸைன் ரிஸ்மி, விமல் சந்தன ஆகியோருக்கே ஆயுள் சிறை விதிக்கப்பட்டுள்ளது.

## அதிகாரப் பகிர்வில் பொலிஸ் அதிகாரம் ஒருபோதும் இல்லை

தமிழர்களுடனான அதிகாரப் பகிர்வின்போது பொலிஸ் அதிகாரத்தை வழங்க முடியாது என்று இந்திய அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவிடம் நான் அறுதியாகக் கூறிவிட்டேன் என்று மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் இரண்டாவது சபை ஒன்றை அமைப்பது போன்ற நடவடிக்கைகள் மூலம் 13ஆவது திருத்தத்தையும் தாண்டிச் செல்லத் தயாராக இருப்பதாகக் கிருஷ்ணாவிடம் தான் கூறினேன் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜெயசூரியவிடம் ஜனாதிபதி கூறினார் என்று கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## இந்தியர் இருவர் நாடு கடத்தல்

கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு வந்து சேர்ந்த இந்திய இளைஞர்கள் இருவர் நேற்றுத் திருப்பி அனுப்பப்பட்டனர். இவர்கள் இருவரும் விஸா காலாவதியான பின்னரும் இலங்கையில் தங்கியிருந்ததற்காக ஒரு வருடத்திற்கு முன் நாடுகடத்தப்பட்டவர்கள் என்று அதிகாரிகள் கூறினர். 27 மற்றும் 29 வயதான இந்த இளைஞர்கள் சென்னையிலிருந்து எயார் இந்தியா விமானமொன்றின் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சஜித்தை ஒதுக்கிய ரணில்

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தியா சென்றுள்ள நிலையில் அவரது கட்சிப் பொறுப்புக்கள் யாவும் எதிர்க்கட்சிப் பிரதம கொறடா வான ஜோன் அமரதுங்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளன. கட்சியின் பதில் தலைவராக சஜித் பிரேமதாஸ இருந்த போதும் அவரிடம் கையளிக்காமல் அமரதுங்கவிடம் பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டிருப்பது, ரணிலின் பழிவாங்கும் படலம் தொடர்வதையே காட்டுகின்றது என்று எதிர்ப்பாளர்கள் கூறுகின்றனர்.

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி இன்று இரண்டாம் நாள்

3rd Edition

ரூபா 10,000/= விலைக் குறைப்பு

இச்சலுகை யாழ்.வர்த்தகக் கண்காட்சியில் ஜப்பான் ரேடர்ஸ் நிறுவனத்திடம் கொள்வனவு செய்யும் மோட்டார் சைக்கிள் ஒவ்வொன்றுக்கும்

காட்சிக் கூட இல:- 195

Stall No.:- 195

மேலதிக தொடர்புகளுக்கு:
ஜப்பான் ரேடர்ஸ்
10-14, ஸ்ரான்லி வீதி, யாழ்.
Hot Line: 077-0868079

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.வர்த்தகக் கண்காட்சி நேற்று கோலாகலமாக ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜன.21

யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நேற்று யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் கோலாகலமாக ஆரம்பமாகியது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரி வி.மகாலிங்கம் ஆகியோர் இணைந்து சம்பிரதாயபூர்வமாக நாடாவை வெட்டிக் காண்காட்சியைத் திறந்து வைத்தனர்.

கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வு நேற்றுக்காலை 9.30 மணியளவில் யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் யாழ்ப்பாண வர்த்தக கைத்தொழில் மன்றத் தலைவர் எஸ்.பூரணச்சந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த ஆரம்ப நிகழ்வில் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, இந்தியத் தூதரக அதிகாரி வி.மகாலிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

வங்கிக் கடன் அடிப்படையில் இந்தியாவில் இருந்து இயந்திர சாதனங்களை இறக்குமதி செய்வதற்கான வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவது தொடர்பாகப் பரிசீலணை செய்யப்படும் என்று அங்கு உரை நிகழ்த்தும்போது இந்தியத் துணைத் தூதரக அதிகாரி வி.மகாலிங்கம் தெரிவித்தார்.

கடந்த வரவு - செலவுத் திட்டத்தின் போது ஒதுக்கப்பட்ட தொகையை விட மேலும் ஆயிரம் கோடி ரூபா மேலதிகமாக வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்காக ஜனாதிபதி ஒதுக்கியுள்ளார் என்று அமைச்சர் டக்ளஸ் உரை நிகழ்த்தும்போது கூறினார்.

நூலகக் கேட்போர் கூடத்தில் ஆரம்ப நிகழ்வுகளை முடித்துக் கொண்டு விருந்தினர்கள் மங்கல இசை முழங்க கண்காட்சி இடம்பெறும் துரையப்பா விளையாட்டு மைதானத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு நாடாவை வெட்டி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

வரையறுக்கப்பட்ட இலங்கை கண்காட்சிகள் மற்றும் மாநாடுகள் சேவைகள் நிறுவனமும் யாழ்ப்பாணம் வர்த்தக கைத்தொழில் மன்றமும் இணைந்து இந்தக் கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளன.

சுமார் 250இற்கும் மேற்பட்ட கண்காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் 40இற்கும் மேற்பட்டவை இந்தியன் கம்பனிகளின் காட்சிக் கூடங்கள் ஆகும். இதில் உள்ளூர் உற்பத்திகள் தென்னிலங்கை மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் பொருள்கள் சேவைகள் என்பன காட்சிப் படுத்தப்பட்டிருந்தன.

பெருந்திரளான மக்கள் நேற்றைய தினம் கண்காட்சியைப் பார்வையிட்டனர். இன்று கண்காட்சியின் இரண்டாம் நாளாகும். (ஒ-14)

# கண்ணன் வந்தான் கதை சொன்னான்!

## கிருஷ்ணாவின் வருகையைச் சாடுகிறார் மனோ

''பதின்மூன்றாம் திருத்தத்துக்கு அப்பால் ஜனாதிபதி போவார் என இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா சொல்லிவிட்டுப் போய்விட்டார். ஆனால், அவர் நாட்டில் இருந்த அன்றே அரசு, கூட்டமைப்புடன் பேச்சை நடத்தாமல் புறக்கணித்தது.

இதைவிட பதின்மூன்றாம் திருத்தம் என்பதற்கு அப்பால் என்றால் 'செனட் சபை' என்பதுதான் அர்த்தம் என அமைச்சர் கெஹெலிய ரம்புக்வல புதிய கதை சொல்கிறார்.

இந்நிலையில் இந்தியாவிலிருந்து 'கண்ணன் வந்து கதை சொன்னான்' எனதமிழ் மக்கள் பேசத் தொடங்கிவிட்டார்கள்'' என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

பதின்மூன்றாம் திருத்தம் என்பதற்கு அப்பால் செல்ல அரசு தயார் என இந்திய வெளிவிவகார அமைச்சர் கூறிய செய்தி தொடர்பில் கருத்துத் தெரிவித்த மனோ கணேசன் மேலும் கூறியவை வருமாறு:-

''மார்ச் மாதம் மனித உரிமை சபைக் கூட்டத்துக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்வுக் குழுவிற்குள் கூட்டமைப்பைக் கொண்டு வந்து நிறுத்துவதற்கு முயற்சி நடைபெறுகிறது.

''பதின்மூன்றாம் திருத்தத்துக்கு அப்பால் மற்றும் செனட் சபை ஆகிய கதைகள் எல்லாம் இதை நோக்கியே நகர்கின்றன. இது தமிழ் மக்களுக்கு நன்கு புரியும். மக்களுடன் வாழும் எங்களுக்கும் மக்களின் நாடித்துடிப்பு புரியும்.

''பதின்மூன்றாம் திருத்தத்தையே அமுல்செய்ய முடியாதவர்கள் அதற்கு அப்பால் எப்படிப் போக முடியும் என யாராவது இந்திய வெளிவிவகார அமைச்சரைக் கேட்டார்களா என்பது தெரியவில்லை.

'கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போவான்' என்பதாக இந்தியாவின் கருத்து அமைந்துள்ளது.

பதின்மூன்றாம் திருத்தம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு அல்ல. ஆனால், அதற்கோ அல்லது அதற்கு அப்பாலோ அரசு செல்லும் என்றால் அதை எவரும் வேண்டாம் என்று சொல்லப்போவதில்லை. ஆனால், நம்ப முடியாத வாக்குறுதிகளைக் கேட்டுவைப்பதில் எந்த ஒரு நன்மையும் கிடைக்கப் போவதில்லை.

அரசு பதின்மூன்றாம் திருத்தம் என்பதற்கு அப்பால் செல்லும் என்ற செய்தியை கூட்டமைப்பைச் சார்ந்த ஒரு எம்.பி. வரவேற்று இந்திய ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளார். இது அக்கட்சியின் அதிகாரபூர்வமான நிலைப்பாடா என எமக்கு விளங்கவில்லை.

எது எப்படியிருந்தாலும் இத்தகைய நம்பமுடியாத அறிவிப்புகளை நம்பி அவசர அவசரமாக விழுந்தடித்துக் கொண்டு மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டாட்டம் நடத்த நாம் தயார் இல்லை.'' - என்றார்.

## 'கொலைக் களங்கள்' படத்துக்கு கிராக்கி

பிரிட்டனின் 'சனல்-4' தொலைக்காட்சி, இலங்கையின் இறுதிப் போர் தொடர்பில் வெளியிட்ட 'சிறிலங்கா வின் கொலைக்களங்கள்' என்ற ஆவணப்படம் வேறு பல நாடுகளில் உள்ள ஊடகங்களால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. சுமார் ஒரு மணிநேரம் கொண்ட இந்தப் படத்தை பல்வேறு ஊடகங்கள் கொள்வனவு செய்துள்ளன.

## சீனாவை வெளியே தள்ள வேண்டும்

இந்தியா தனது அயல் நாடுகளின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார விடயங்களில் அதிக பங்களிப்பை வழங்கி செல்வாக்குச் செலுத்துவதன் மூலம் இந்தப் பிராந்தியத்தில் இருந்து சீனாவை வெளியே தள்ள வேண்டும் என்று அமெரிக்காவின் முன்னாள் ராஜதந்திரியான வில்லியம்எச்.அவேரிதனது புதியநூல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

### ராஜீவ் கொலைச் சந்தேக நபர்

# கே.பியை இந்தியாவிடம் அரசு ஒப்படைக்காதது ஏன்?

## லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. கேள்வி

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலைச் சந்தேகநபரான கே.பியை இலங்கை அரசு இந்தியாவிடம் ஒப்படைக்கும் என்று இந்தியா எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்ற போதும் அவரை இந்தியாவிடம் ஒப்படைக்க இலங்கை அரசு இன்னும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று ஐ.தே.க எம்.பி லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று நாடாளுமன்றில் கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழான கட்டளைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

சரத் பொன்சேகாவின் விடுதலையை உறவினர்கள் கோரத்தேவையில்லை. நாட்டிலுள்ள மிக முக்கிய மானவர்களான சமயத் தலைவர்களும் மற்றும் மல்வத்த ஹஸ்கிரிய பீட மகா நாயக்கர்களும் அவருக்கான விடுதலையைக் கோரியுள்ளனர். இது போதாதா?

உறவினர்கள்தான் விடுதலையை கோரவேண்டும் என்று எந்தச் சட்டத்தில் உள்ளது? இந்த நிலைமையை அரசே உருவாக்கியது. அரசால் இச்சட்டத்தை உடன் நடைமுறைப்படுத்த முடியும். இந்த நாட்டில் சட்டம் சரியாக நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதால் தான் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இங்கு வருவதில்லை. ஆனால், அவர் வந்தார், இவர் வந்தார் என்று ரூபவாஹினி கூறுகின்றது. அப்படி ஒருவரையேனும் காட்டமுடியுமா?

ராஜீவ் காந்தியின் கொலைச் சந்தேக நபரான கே.பியை இந்தியா தேடிக் கொண்டிருந்தது. இப்போது அவர் இலங்கை அரசிடம் உள்ளார். அவரை இந்திய பொலிஸாரிடம் ஒப்படைக்கும் என்று இந்தியா எதிர் பார்த்திருக்கின்றது. ஆனால், இன்னும் அவர் ஒப்படைக்கப்படவில்லை. அது ஏன் என்று நாம் அறியவிரும்புகின்றோம். - என்றார்.

# கே.பி.யை ஒப்படைக்குமாறு இந்தியா கோரவில்லையே!

## சரத் வீரசேகர எம்.பி. பதில்

கே.பி.யை தம்மிடம் ஒப்படைக்குமாறு இந்திய அரசு இலங்கை யிடம் கோரவில்லை என்று அரச தரப்பு எம்.பி.சரத் வீரசேகர நேற்று நாடாளுமன்றில் கூறினார். நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

கே.பி.யை தம்மிடம் ஒப்படைக்குமாறு இந்திய அரசு இலங்கை அரசிடம் கோரியதாக லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. அவரது உரையில் கூறினார்.

இந்தியா அப்படி இலங்கையிடம் எந்தக் கோரிக்கையையும் முன்வைக்கவில்லை. இந்த நிலையில், எப்படி நாம் கே.பி.யை இந்தியாவிடம் ஒப்படைப்பது?

நாம் கே.பி.யைப் பயன்படுத்தி புலிகளின் சர்வதேச வலையமைப்பு தொடர்பாக தகவல்களைப் பெற்று அதற்கு எதிராக நடவடிக்கை எடுத்துவருகிறோம்.கே.பி.தொடர்பில் சபையில் கேள்வி எழுப்பும் எதிர்க்கட்சி, நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமராகியுள்ள உருத்திரகுமாரைக் கைது செய்யவோ அல்லது நாடு கடத்தவோ ஏன் கோரிக்கை விடுப்பதில்லை-என்றார்.

# போர்க்குற்ற விசாரணையை அரசு அனுமதிக்க வலியுறுத்து

கொழும்பு, ஜன. 21

இலங்கையின் 30 வருடகாலப் போரின்போது இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் சர்வதேச மனித உரிமைச் சட்ட மீறல்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணை ஒன்று நடைபெறுவதற்கு இலங்கை அரசு அனுமதிக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார் அமெரிக்க செனட் சபை உறுப்பினர் ஹவோர்ட் பேர்மன்.

செனட் சபையின் வெளியுறவுத்துறைக் குழுவில் ஜனநாயகக் கட்சியின் பிரதிநிதியாக உள்ள பேர்மன், சர்வதேச விசாரணைக்கான இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

''நம்பகத்தன்மை வாய்ந்த விசாரணை மட்டுமே போர்க் குற்றவாளிகளைப் முழுமையாகப் பொறுப்புக்கூற வைக்க முடியும். அப்படிச் செய்வதன் மூலமே நீடித்திருக்கக்கூடிய இன நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த முடியும்'' என்று அவர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்கத்துக்காகக் கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக் குழுவின்இறுதி அறிக்கை தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர், அதில் சொல்லப்பட்டுள்ள நல்ல விடயங்களை இலங்கை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.(உ-01)

# கடின முயற்சி கொண்டவர்கள் வடபகுதி மாணவர்கள்

## யாழ்.தளபதி ஹத்துருசிங்க புகழாரம்

யாழ்ப்பாணம், ஜன.21

தென்பகுதி மாணவர்களை விட வடபகுதி மாணவர்கள் கடினமான முயற்சி உடையவர்கள். காலை வேளைகளிலேயே தனியார் க்ல்வி நிறுவனங்களுக்குச் சென்று படித்து முன்னேறும் மாணவர்களை நான் வடபகுதியில்தான் பார்க்கின்றேன்.

இவ்வாறு யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட மட்டத்தில் க.பொ.த. உயர்தரத்தில் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக்கொண்ட நான்கு துறைகளைச் சேர்ந்த மாணவர்களைப் பாராட்டும் வைபவம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நேற்று மாலை இடம்பெற்றது. இதன்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இராணுவத் தளபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கல்விதான் எல்லாவற்றுக்கும் அடிப்படையானது. அதுதான் சமுதாயத்தை வடிவமைக்கிறது. வடபகுதி மாணவர்கள் இந்த நாட்டில் இரண்டாம் தர நிலையில் வைத்தே கல்வி போதிக்கப் படுவதாகச் சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகள் எல்லாம், தேசிய ரீதியில் யாழ்.மாவட்ட மாணவன் முதலிடம் பெற்றதன் மூலம் முறியடிக்கப்பட்டுள்ளது.

இந்த மாணவர்களின் வெற்றிக்காகப் பாடுபட்ட பெற்றோர்கள், ஆசிரியர்கள் அவர்கள் செய்த தியாகங்கள் என்பன பாராட்டப்பட வேண்டும். தென்பகுதி மாணவர்களை விட வடபகுதி மாணவர்கள் கடின முயற்சி உடையவர்கள்.

காலை வேளையில் தனியார் கல்வி நிலையங்களுக்கு மாணவர்கள் செல்வதை இங்குதான் பார்க்கின்றேன். இனி வருகின்ற மாணவர் சமுதாயத்துக்கு தேசிய மட்ட சாதனை புரிந்த இந்த மாணவர்களின் செயற்பாடுகள் முன் மாதிரியணவையாக இருக்கும்.

கல்வி நீண்ட பயணம். நீங்கள் பல்கலைக்கழகத்திலும் சரியான திசையில் பயணிக்க வேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வட மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஒ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# மூதவை யோசனையை அரசு இப்போது தூக்கிப் பிடிப்பது ஏன்?

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழிகளில் ஒன்றாக, மூதவை (செனட் சபை) அமைக்கப்படும் என்று அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இது நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்படவில்லை. அமைச்சரவைப் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல அரசின் இந்த யோசனையை ஊடகவியலாளர் மாநாட்டில் உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ளார்.

நாட்டின் தேசிய விவகாரமான இனத்தகராறுக்குத் தீர்வு ஒன்று காணப்படுவது குறித்து அரச தரப்பு பேச்செடுக்கும் நேரங்களில், சந்தர்ப்பங்களில் எல்லாம், மூதவை அம்சத்தை முன்வைப்பதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளது. அதில் தவறுவதுமில்லை.

இந்திய வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா, கொழும்பில் வைத்து அரசாங்கம் 13+ என்ற வகையில் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாகக் கூறிய இரண்டு நாள்களில், மூதவை குறித்து ஊடகவியலாளர் மாநாட்டில் பிரமாதப்படுத்தப்பட்டுள்ளது.

மத்திய அரசுக்கும் மாகாண சபைகளுக்கும் இடையில் நிர்வாக இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்தும் நோக்குடனேயே மூதவையை நிறுவ உள்ளதாகவும் -

சிறுபான்மை இன மக்களின் பிரநிதிநிதிகளை உள்வாங்குவதன் மூலம் ஜனநாயகத்தைப் பேணிக் காப்பதற்கு முடியும் என்றும்-

நாட்டின் நலன்கருதி நாடாளுமன்றில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வழிசெய்யும் வகையில் மூதவை அமைக்கப்பட உள்ளதாகவும் - அமைச்சர் சிலாகித்துக் கூறியுள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தனக்கு அக்கறை உண்டு என்று காண்பிக்கும் வகையில், இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த காலத்தில் இருந்து- கடந்த சுமார் இரண்டு வருடங்களாகச் சர்வதேச நாடுகளுக்கு மட்டுமன்றி உள்நாட்டிலும் முரசு கொட்டி வருகிறது.

பெரும் பரிமாணத்தில் 'பிகு' பண்ணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் விட்டுவிட்டு, தொட்டுக் காட்டி நடத்திய பேச்சுவார்த்தையை மீண்டும் கிழே போட்ட அரசு-

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தில் வகை செய்யப்பட்ட காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது என்று அப்பட்டமாகத் தெரிவித்துக் காலத்தைக் கடத்தி, வீணே போக்கி-- புலுமாசுகள் காட்டி வருகிறது!

அந்தப் புலுமாசுகளில் ஒன்றுதான் அமைச்சர் ஹெகலிய வர்ணம் பூசிக் காட்டும் மூதவை. ஜனநாயகத்தைப் பேணிக் காப்பதற்கு, தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை, அவர்கள் நீண்ட நெடுங்காலமாக அனுபவித்த உரிமைகளை வழங்குவதற்கு மறுத்து வரும் அரசு, இப்போது, மூதவை என்ற பழைய பெட்டியைத் தூசுதட்டிக் காட்சிக்கு வைக்க முனைந்துள்ளது.

மூதவை அமைப்பு முன்னரும் சில காலம் இயங்கியமை இந்நாட்டின் குடியியல் வரலாறு. ஆனால், நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்ட விதிகளை விவாதித்து ஆராய்ந்து , மக்களின் நலன்களுக்கு ஒவ்வாதவற்றை நீக்குவதற்கு முழுஅளவில் அதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. சர்ச்சைக்குரிய சட்டம் ஒன்றில் காணப்படும் பாதகங்களை அதனால் மக்களுக்கு உண்டாகக்கூடிய பாதிப்புகளை அகற்றுமாறு வெறுமனே சிபாரிசு செய்யலாம். அவ்வளவுதான்.

நாடாளுமன்றம், அதன் அங்கத்தவர்கள் இயற்றும் எந்தச் சட்டத்தையும் மக்கள் நலன்கருதித் திருத்தம் செய்வதற்கு அதிகாரமற்ற மூதவையால், இனப்பிரச்சினை விவகாரத்தில் எதனையும் ஆக்கபூர்வமாக, சிறுபான்மை இன மக்களின் ஜனநாயக உரிமைகளை உறுதிசெய்யும் எந்தப் பணியையும் இயற்ற முடியாதது.

மூதவை ஊடாக, சிறுபான்மையினரின் அரசியல் உரிமைகளையும் வழங்குவதற்குப் பொறுப்பு உரித்தாக்கப்பட வேண்டும். அதற்கான நல்ல மனம் இந்த அரசுக்கு வரும் என்று எதிர்பார்க்கவே முடியாது.

மூதவைப் பிரலாபத்துடன், அனைத்துக் கட்சித் தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்குகொள்ள வேண்டும் என்ற பொறியையும் அரசு தூரத்தே வைப்பதாக இல்லை.

இத்தகைய ஒரு தளநிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் புதுடில்லி சென்று இலங்கையின் திமிர்த்தனம், வழுவல் நழுவல் போக்குக் குறித்துப் பேசவுள்ளனர்.

அரசுடன் பேச்சு நடத்துவதற்கு தம்மை உந்தித் தள்ளியது இந்தியாவே என்ற காரணத்தால், தீர்வு ஒன்றுக்கு அழுத்தம் கொடுக்குமாறு கேட்பதற்கு புதுடில்லி விரைகிறார்கள் கூட்டமைப்பினர் என்ற தகவல்களும் உண்டு. பிரதமர் மன்மோகன் சிங்குடன் பேச்சு நடத்த இருப்பதாகச் சொல்லப்படுவதால் அதற்கும் ஒரு ராஜதந்திரப் பின்ணணி உண்டு என்று கருதப்படுகிறது.

கிருஷ்ண விஜயம் என்ற நாடகம் முடிந்து திரையும் மூடப்பட்ட நிலையில், இலங்கை அரசு ஏறுக்கு மாறாகத் தகிடுதத்தங்களையும், பூனையைப் புலியாக்கும் அரசியல் வேடங்களையும் புனைவதால், கூட்டமைப்பினரின் இந்திய விஜயம் தேவையற்றது அல்ல என்று கொள்ளலாம்.

எனினும், அமைச்சர் கிருஷ்ணா, இலங்கை அரசு குறிப்பிடும் தெரிவுக்குழுவில் பங்குபற்றுமாறு கூட்டமைப்பினருக்கு ஆலோசனை, புத்திமதி வழங்கிய தோரணையில்-

ஏதோ வகையில், உங்கள் அரசு தருவதை வாங்குங்கள் என்று பிரதமர் மன்மோகன் சிங் புத்திமதி கூறி அனுப்பக்கூடும் என்ற ஊகங்கள் இப்போதே உலாவரத் தொடங்கியுள்ளன.

ஆட்டுவித்தால் ஆர் ஒருவர் ஆடாதாரோ கண்ணா என்ற கவிஞர் கண்ணதாசனின் கவிதை வரி இனப்பிரச்சினை விடயத்தில் பொருந்திவிடுமோ என்ற ஏக்கம் எமது மக்களுக்கு!

# வடக்கில் 196 பாடசாலைகள் 50 க்கும் குறைவான மாணவருடன்

யாழ்ப்பாணம், ஜன.21

வடக்கு மாகாணத்தில் 196 பாடசாலைகள் 50க்கும் குறைவான மாணவர் எண்ணிக்கையைக் கொண்டுள்ளன. இந்தப் பாடசாலைகளின் அபிவிருத்தி தொடர்பாகவும் மாணவர்களின் வரவு வீழ்ச்சிக்கான காரணத்தைக் கண்டறியும் வகையிலும் எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இந்த 196 பாடசாலை அதிபர்களுடனான கலந்துரையாடல் ஒன்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. இதன்போது இதற்கான காரணங்கள் ஆராயப்படவுள்ளதாக வட மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.

கல்வி அபிவிருத்தி தொடர்பாகப் பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாணத்தில் தனித்தனியாக மாவட்டங்களில் எத்தனை பாடசாலைகள் உள்ளடங்குகின்றன என்பது தெரியவில்லை. வடமாகாணம் முழுவதும் 196 பாடசாலைகள் 50 க்கும் குறைவான மாணவர்களைக் கொண்டுள்ளன.

இந்தப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கலந்துரையாடல் விரைவில் நடைபெறவுள்ளதால் அதிபர்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

இந்தப் பாடசாலைகள் பிள்ளை நேயப் பாடசாலையாக உயர வேண்டும். கூடிய வளங்களைக் கொண்டிருக்கும்போது அதிகமானவர்களை உள்ளடக்க முடியும். இவற்றை நாம் எதிர்காலத்தில் உறுதியாக ஏற்படுத்தித் தரவுள்ளோம்.

இவ்வாறான பாடசாலைகளுக்கு பழைய மாணவர்களும், நிறுவனங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். பெற்றோர்கள் அயலில் உள்ள பாடசாலைகளில் பிள்ளைகளை அனுமதிக்க வேண்டும். பாடசாலைகளுக்கான அபிவிருத்திப் பணிகளை நாம் துரிதப்படுத்தவுள்ளோம் - என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளின் அதிபர்கள், வடமாகாண ஆளுநரின் செயலாளர் க.இளங்கோவன், வடமாகாண கல்வி, பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வடமாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-311-ரி)

# மாவட்டங்களுக்கு உள்ளேயே இனிமேல் ஆசிரியர் இடமாற்றம்

## வடமாகாண ஆளுநர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜன.21

இனிவரும் காலங்களில் மாவட்டங்களுக்கு உள்ளேயே ஆசிரியர் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படும். வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படவுள்ள ஆசிரியர் இடமாற்றங்கள் மூன்று மட்டங்களில் பரிசீலிக்கப்பட்டுள்ளன. இடமாற்றம் பெறவுள்ள ஆசிரியர்களின் பெயர், விவரங்கள் விரைவில் வெளியிடப்படும் என வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.

பாடசாலைகளில் ஆசிரியர்களின் தொகை, ஆசிரியர்களின் தனிப்பட்ட பிரச்சினைகள், சேவைகள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு இந்த இடமாற்றப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆசிரியர் இடமாற்றத்தில் தவறுகள் இருந்தால் அவை பரிசீலிக்கப்பட்டு மேல்மட்ட சபை எடுக்கும் தீர்மானத்தின் அடிப்படையிலேயே இந்த இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை அதிபர் களுக்கான அபிவிருத்திக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும் கூறுகையில்,

இளம் ஆண் ஆசிரியர்கள் குறைந்தபட்சம் இரண்டு வருடங்கள் கஷ்டப் பிரதேசங்களில் கடமை யாற்ற வேண்டும். இந்த இடமாற்றமே இறுதியான இடமாற்றம். இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் பெயர்விவரங்கள் மிக விரைவில் இணையத்தளம் மூலமும் கல்வி வலயங்களின்மூலமும்வெளியிடப்படும்.

இடமாற்றம் பெறும் ஆசிரியர்கள் மார்ச் மாதம் 1ஆம் திகதி அந்தந்தப் பாடசாலைகளில் கடமைகளைப் பொறுப்பெடுக்கவேண்டும். 2 வாரத்துக்குள் கடமை ஏற்கத் தவறும் பட்சத்தில் அவர்களது சம்பளம் இடைநிறுத்தப்படும். இனிவரும் காலங்களில் ஆசிரியர் இடமாற்றங்கள் நடைபெறும்போது அந்தந்த மாவட்டங் களுக்குள்ளேயே கூடியளவான இடமாற்றங்கள் நடைபெறும் - என்றார்.(த-311-ரி)

# மிருகக் காட்சிச் சாலைகளால் அரசுக்கு 'கொழுத்த' வருமானம்

கொழும்பு, ஜன.21

கடந்த ஆண்டில் இலங்கையில் உள்ள தாவரவியல் பூங்காக்களைப் பார்ப்பதற்கு வந்தோரின் எண்ணிக்கை வரலாற்றில் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளதாக தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சிறில் விஜேசுந்தர தெரிவித்தார்.

கடந்த ஆண்டின் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து டிசெம்பர் 31 ஆம்திகதி வரை தாவரவியல் பூங்காக்களை பார்க்க வந்த உள்நாட்டு உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை 18 லட்சத்து 62 ஆயிரத்து 222 பேர், வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை 2 லட்சத்து 36 ஆயிரத்து 763 பேர்.

இதன்படி கடந்த ஆண்டில் தாவரவியல் பூங்காக்களைப் பார்க்க வந்த உல்லாசப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை 20 லட்சத்து 98 ஆயிரத்து 985 பேர்.

இதனால் பார்வையாளர்களிடமிருந்து தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்துக்குக் கிடைத்த வருமானம் 329 மில்லியன் ரூபாவாகும். 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இது நூற்றுக்கு நூறு வீதமான அதிகரிப்பாகும்.

இதற்கு மேலதிகமாக தாவரங்கள் விற்பனை மூலமும் ஏனைய வருவாய்கள் மூலமும் கடந்த ஆண்டு திணைக்களம்பெற்றுள்ள வருமானம் 353 மில்லியன் ரூபாவாகும்.

இதேவேளை- கடந்த ஆண்டில் மிருகக் காட்சி சாலைகள் திணைக்களத்துக்கு 651 மில்லியன் ரூபா வருமானமாகக் கிடைத்துள்ளது எனத் திணைக்களத்தின் பணிப்பாளரான சேனாங்க குணரத்ன தெரிவித்தார்.

தெஹிவளை மிருகக் காட்சிச் சாலை மூலம் 163 மில்லியன் ரூபாவும் பின்னவல யானைகள் சரணாலயம் மூலம் 487 மில்லியன் ரூபாவும் வருமானமாகப் பெறப்பட்டுள்ளது. இவ்வாறு தேசிய தாவரவியல் பூங்காக்கள் மற்றும் மிருகக் காட்சிச் சாலைகள் மூலம் கடந்த ஆண்டில் பெறப்பட்டுள்ள மொத்த வருமானம் ஒரு பில்லியன் ரூபாவைக் கடந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(த-22)

# நிகழ்வுகள் இன்று

**இந்தியன் வங்கி ஆண்டு விழா**

இந்தியன் வங்கி யாழ்.கிளையின் முதலாம் ஆண்டு நிறைவு விழா முற்பகல் 11மணிக்கு வங்கிக் கிளையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத்தூதுவர் வி.மகாலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வார். (த-313)

**விளையாட்டு விழா**

மாரீசன் கூடல் றோ.த.க. பாடசாலை மெய்வல்லுநர் விளையாட்டு விழா காலை 9மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் எஸ்.றொபேட் உதயகுமார் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வல யக் கல்வி பணிப்பாளர் எ. இராஜேந்திரன் கலந்துகொள்வார். (த-313)

**கலந்துரையாடல்**

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உள்ளகப் பயிற்சிப் பாடசாலை அதிபர், தொழில் வழிப்படுத்துனர்களுக்கான கலந்துரை யாடல் காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-313)

**யோகாசனப் பயிற்சி**

ஓம் பதஞ்சலி யோககேந்திரா நிலையத்தின் ஏற்பாட்டில் புதிய யோகாசன தளர்வு பயிற்சி வகுப்பின் ஆரம்பநிகழ்வு காலை 6.15 மணிமுதல் யாழ். நீராவியடி சைவ பரிபாலன சபை மண்ட பத்தில் நடைபெறவுள்ளது. (த-313)

**கால்கோள்விழா**

வல்வெட்டித்துறை கணபதி படிப்பகத்தினால் நடத்தப்படும் கணபதி பாலர் பாடசாலையின் கால்கோள் விழா காலை 8.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

படிப்பகத் தலைவர் ச.ஜெயகணேஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வல்வை றோ.க.த. கலவன் பாடசாலை அதிபர் சோ. ஜெயதேவா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (த-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களின் அத்துமீறல் முல்லையில் உண்ணாநோன்பு

## -பிரதேசத்தவர்கள் விரைவில் அறிவிப்பர்-

முல்லைத்தீவு, ஜன.21

முல்லைத்தீவு மீனவர்கள் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவுக் கடலில் இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவுக் கடலில் இந்திய மீனவர்களின் தொடரும் அத்துமீறல்களால் தமது தொழில் நடவடிக்கை பாதிக்கப்பட்டு வருகின்றமை தொடர்பாகப் பல்வேறு தரப்புக்களிடம் முறையிட்டும் எதுவித தீர்வுகளும் கிடைக்கவில்லையென முல்லைத்தீவு கடற்தொழிலாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

போர் காரணமாக இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்து தற்போது தாங்கள் பல்வேறு கடன்கள் மூலம் தமது தொழில்களை ஆரம்பித்துள்ள நிலையில் இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகள் அத்துமீறிய தொழில்களில் ஈடுபட்டு வருவதனால் தமது வலைகள் அறுத்துச் செல்லப்பட்டு வருவதாகவும் இதனால் தமது தொழில் நடவடிக்கைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக முல்லைத்தீவு கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துடன் தொடர்பு கொண்டபோது இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதனால் அனைத்தையும் இழந்து அகதிகளாக மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் பல்வேறு கடன்களைப் பெற்று தமது தொழில் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள நிலையில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றன. இந்த விடயம் தொடர்பாக கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களம், மாவட்ட அரச அதிபர், பாதுகாப்பு அமைச்சு, இராணுவத்தினர், கடற்படை, பொலிஸார் என எல்லோருக்கும் தெரியப்படுத்தியிருக்கின்றோம். ஆனால் எதுவித தீர்வுகளும் கிடைக்கவில்லை. நேற்றும் கூட சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட இந்திய இழுவைப் படகுகள் அத்துமீறிய தொழில்களில் ஈடுபட்டு வருகின்றன. கடந்த இரண்டு வருடமாக மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பாகப் பல தரப்புக்களுடனும் கலந்துரையாடிய போதும் எதுவித தீர்வுகளும் கிடைக்கவில்லை.

இதனால் முல்லைத்தீவு கொக்கிளாய் முதல் வட்டுவாகல் வரையான கடற்பகுதிகளில் கடற்றொழில் செய்து வரும் 18 கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த இரண்டாயிரம் வரையான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு வருவதுடன் அவர்களது குடும்பங்களும் வறுமையை எதிர்கொண்டு வருகின்றன.

இந்த நிலை தொடருமானால் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றையோ அல்லது உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றையோ நடத்துவதற்கு முடிவு செய்துள்ளோம். அதன்படி போராட்டம் நடத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனச் சமாசத்தின் தலைவர் சி.அருள்ஜெனிஸ்வேட் தெரிவித்துள்ளார். (க-6)

# டெங்கு ஒழிப்பு வாரம்

துணுக்காய்,ஜன.21

துணுக்காயில் டெங்கு ஒழிப்பு வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் துணுக்காய் பிரதேச சபையினரும் இணைந்து இந்த டெங்கு ஒழிப்பு வாரத்தைக் கடைப் பிடித்து வருகின்றனர்.

உயிர்கொல்லி நோய்களை ஏற்படுத்தும் நுளம்புகள் பல வகையுண்டு. இதனைக் கருத்தில் கொண்டு டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை வேகமாக அழித்து வருகின்றனர். கடந்த 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் மேற் கொள்ளப்பட்டபோது இந்த நடவடிக்கைகளில் வர்த்தகர்களும் கலந்து கொண்டு குப்பை கூளங்களை அகற்றி உதவினர். அத்துடன் மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணி மனையினரால் துணுக்காய் மாந்தை கிழக்குப் பகுதிகளில் கடந்த 18 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரையும் ஒலி பெருக்கி மூலம் மக்களுக்கு டெங்கு தொடர்பாக விழிப்பூட்டுவதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

**மக்களின் வாழ் விடங்களில் உள்ள குப்பை கூளங்கள், பாவனைக்கு உதவாத பொருள்கள், பழைய ரயர்கள், சிரட்டைகள், பழைய கண்ணாடிப் போத்தல்கள் என்பவற்றை அகற்றுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.**

இதனால் மக்களின் வாழ்விடங்களில் உள்ள குப்பை கூளங்கள், பாவனைக்கு உதவாத பொருள்கள், பழைய ரயர்கள், சிரட்டைகள், பழைய கண்ணாடிப் போத்தல்கள் என்பவற்றை அகற்றுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை களுக்கு வர்த்தகர்கள், மல்லாவிப் பொலிஸார், இராணுவத்தினர் எனப் பலரும் ஒத்துழைப்பு நல்கி வருகின்றனர். (க-415)

# கிளி. மின்சார சபையில் மக்கள் அதிருப்தி

கிளிநொச்சி, ஜன.21

கிளிநொச்சியில் இயங்கும் இலங்கை மின்சார சபை அலுவலகம் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொள்வதாக பல்வேறு தரப்புக்களாலும் விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் அடிக்கடி மின் விநியோகம் தடைப்படுவதால் அரச திணைக்களங்கள் மற்றும் வணிக நிலையங்களின் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன.

**கிளிநொச்சிப் பகுதியில் அடிக்கடி மின் விநியோகம் தடைப்படுவதால் அரச திணைக் களங்கள் மற்றும் வணிக நிலையங் களின் செயற் பாடுகள் பெரிதும் பாதிக்கப்படு கின்றன.**

மின்சார சபையின் மின் விநியோகத்தை நம்பிக் கிளிநொச்சி, பரந்தன் ஆகிய இடங்களில் அதிகளவு வணிக நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்த நிலையில் முன் அறிவித்தல்கள் எவையும் இன்றி மின்விநியோகம் தடைப்படுவதால் தமது தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன எனவும் குளிர்பானங்கள் மற்றும் சில குறிப்பிட்ட உணவுப் பண்டங்கள் என்பன பழுதடைந்து தமக்கு பெரிய நட்டம் ஏற்படுவதாக தெரிவித்துள்ளனர்.

இதேவேளை அரச மற்றும் அரச சார்பற்ற திணைக்களங்களின் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இவ்வாரம் கடந்த திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை ஆகிய தினங்களில் மின் தடை ஏற்பட்டிருந்தது. இதனைவிட நேற்று முன்தினமும் காலை முதல் மாலை 6 மணிவரை மின் தடை ஏற்பட்டிருந்தது.

இவ்வாறு அடிக்கடி மின் தடை ஏற்படுவது தொடர்பாக எதுவித முன்னறிவித்தல்களையும் இலங்கை மின்சார சபை வழங்குவதில்லை எனவும் இவர்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளால் தாங்கள் பல்வேறு வகையிலும் பாதிக்கப்படுவதாகவும் பல்வேறு தரப்பினரும் சுட்டிக்காட்டியுள்ளனர். (க-6)

# கண்காட்சி

மன்னார், ஜன.21


மன்னாரில் 'வாழ்வு எழுச்சி' மாவட்டக் கண்காட்சி இன்றும், நாளையும் இடம்பெறவுள்ளது.

கைத்தொழில், வாணிப அமைச்சு, பாரம்பரியக் கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அமைச்சு, இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு என்பன கூட்டாக இணைந்து இந்தக் கண்காட்சியை ஒழுங்கு செய்துள்ளன.

இந்தக் கண்காட்சி மன்னார் புனித சவேரியார் ஆண்கள் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

10 லட்சம் மனைப் பொருளாதார அலகுகளை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் சிறந்த தொழில் முயற்சியாளராக வர முயல்வோருக்கு அரிய சந்தர்ப்பமாக இந்த வாழ்வு எழுச்சி மாவட்டக் கண் காட்சி அமையவுள்ளது. (க-601)

# இன்னும் எத்தனை காலம்?



*மல்லாவி பழைய பஸ் நிலையத்தின் அருகிலிருந்து யோகபுரம் 3 ஆம் யூனிற்றுக்குச் செல்லும் வீதியைப் புனரமைப்பதற்கெனக் கற்கள் பறிக்கப்பட்டுள்ளன. இனி எப்போது புனரமைப்பு...? (415)*

# 67,493 பேருக்கு சிகிச்சை

மல்லாவி ஆதார வைத்தியசாலையில் கடந்த ஆண்டு வெளிநோயாளர் பிரிவில் 67 ஆயிரத்து 493 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

மேற்படி துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 20 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளன. இதனை அண்டிய பிரதேசமான மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் இருந்தும் நோயாளர்கள் இந்த வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதன் பிரகாரம் வெளிநோயாளர் பிரிவில் 59 ஆயிரத்து 840 பேரும், வைத்திய பரிசோதனைக் கிளினிக்கில் 6 ஆயிரத்து 256 பேரும், விடுதியில் தங்கியிருந்து 4 ஆயிரத்து 886 பேரும் இத்துடன் பாம்புக்கடிக்கு 35 பேரும், நாய்க்கடிக்கு 476 பேருமென மொத்தம் 67 ஆயிரத்து 493 நோயாளர்கள் இந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (க-415)

# மானிய உர விநியோகம்

துணுக்காய்,ஜன.21

பாண்டியன்குளம் கமநலசேவை நிலையத்தால் காலபோக மானிய உர விநியோகம் இடம்பெற்று வருகின்றன.

இந்த மானியம் பாண்டியன் குளத்திலுள்ள 17 கமக்கார அமைப்புப் பிரிவுகளுக்கு வழங்கப்படுகின்றது. மேலும் இதுவரை 3 ஆயிரத்து 620 ஏக்கர் நிலப் பரப்புக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் பெரும் பயன் அடைந்து வருகின்றனர்.

இதனைப் பெற்றுக்கொள்ளத் தவறிய விவசாயிகள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் இதனைப் பெற்றுக் கொள்ளுமாறு பாண்டியன் குளம் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தி.பால சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். (க-415)

# விபத்துக்களை அதிகரிக்கும் எருமைகள்

மன்னார், ஜன.21

மன்னார் பிரதான பாலத்தில் அதிகளவில் இரவு நேர விபத்துக்கள் நிகழ்கின்றன.

இங்குஇடம்பெறும்எருமை மாடுகளின் நடமாட்டமே இதற்குரிய பிரதானமான காரணமாகவுள்ளது.

மன்னார்ப் பாலத்தில் கழுதைகள், நாய்கள், எருமை மாடுகள் என்பனவற்றின் நடமாட்டங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. அதிலும் எருமை மாடுகளின் நடமாட்டமே அதிகளவில் காணப்படுகின்றது.

பகல் வேளைகளில் பாலத்தின் இரண்டு பக்கத்திலும் மேய்ந்து திரியும் எருமை மாடுகள் இரவு வேளைகளில் பாலத்திலேயே கூட்டம் கூட்டமாகப் படுத்துக் கிடக்கின்றன. இந்த நிலையில் பாலத்தில் வாகனங்கள் செல்லும்போது எருமை மாடுகள் பாய்ந்து செல்கின்றன.

**பாலத்தில் வாகனங்கள் செல்லும்போது எருமை மாடுகள் பாய்ந்து செல்கின்றன. மேலும் எருமை மாடுகளும், வீதியும் ஒரே நிறத்தில் இருப்பதால் வாகன ஓட்டுநர்கள் இனம் காண்பதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.**




மேலும் எருமை மாடுகளும், வீதியும் ஒரே நிறத்தில் இருப்பதால் வாகன ஓட்டுநர்கள் இனம் காண்பதில் சிரமங்களை எதிர் கொள்கின்றனர். இதனால் மாடுகளின் மீது வாகனங்கள் மோதுவதோடு உயிரிழப்புக்களும், சேதங்களும் ஏற்படுகின்றன.

மேலும் இந்த எருமை மாடுகள் மன்னார்த் தீவுக்கு வெளியேயுள்ள விவசாயக் கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்குரியனவாக உள்ளன.

எனவே அதிகாரிகள் இதில் தலையிட்டுப் பாதுகாப்பானதொரு சூழலை மன்னார்ப் பாலத்தில் ஏற்படுத்தவேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர். (க-601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதீனியத்தை அழித்தொழிக்க ஆர்வம் காட்டாத விவசாயிகள்



யாழ்ப்பாணம், ஜன.21
யாழ்.குடாநாட்டு விளை நிலங்களில் வேகமாகப் பரவிவரும் பாதீனியக்களை களைக் கட்டுப்படுத்துவதற்கு விவசாயிகள் போதிய அக்கறை காட்டுவதில்லை என்று யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விளை பயிர்களுக்குப் பெரும் தீங்கை ஏற்படுத்தும் இந்தப் பாதீனியத்தைக் கட்டுப்படுத்தி அழிப்பதற்குக் கடந்த வருடங்களில் பல லட்சம் ரூபா செலவிடப்பட்டது. தொடர்ந்து மழை காலங்களில் அவை அளவுக்கு மீறிப் பரவி, பயிர்களை ஆக்கிரமித்தும் வருகின்றன.

இந்தப் பாதீனியத்தை அழிக்க விவசாயிகள் அக்கறை காட்டவில்லை. குறிப்பாக மக்கள் குடியிருப்புச் சுற்றாடல்களில் இருந்தே பாதீனியக் களைகள் பரவுகின்றன.-என்று அவர் மேலும் கூறினார். (ம-17)

## மதகு இடிந்ததில் போக்குவரத்து தடை

தென்மராட்சி, ஜன.21
சாவகச்சேரியில் இருந்து தளங்கிளப்புக்குச் செல்லும் வீதியில் உள்ள மதகு ஒன்று முழுமையாக இடிந்து விழுந்ததில் மேற்படி வீதியூடனான போக்குவரத்து நேற்று முற்றாகத் தடைப்பட்டது.

சாவகச்சேரியில் இருந்து பூநகரி நோக்கி கல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனம் ஒன்று நேற்று முற்பகல் 10 மணியளவில் மேற்படி மதகைக் கடந்து சென்றதைத் தொடர்ந்து மதகு முழுமையாக உடைந்தது. இதனால் சாவகச்சேரி-மன்னார் பகுதிக்கு இடையேயான போக்குவரத்து நேற்றுத் தொடக்கம் மாலை 4 மணிவரை முற்றாகத்தடைப்பட்டிருந்தது.

இதனையடுத்து வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் கிரவல் மண் மூலம் இந்த வீதியை உடனடியாகச் செப்பனிடும் பணிகளில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து மாலை வேளையில் போக்குவரத்து மீண்டும் சாதாரண நிலைமைக்குத் திரும்பியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (வ-207)

# சைக்கிள் பெற வந்தோருக்கு கிடைத்தது டோக்கன் மட்டுமே

யாழ்ப்பாணம், ஜன.21
இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா பங்குபற்றிய சைக்கிள் வழங்கும் நிகழ்வுக்காக அழைத்துவரப்பட்ட மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மக்கள் சைக்கிள்கள் கிடைக்காத நிலையில் 'டோக்கனுடன்' மட்டும் திரும்பிச் சென்றனர்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

கடந்த 18 ஆம் திகதி யாழ்.பொது நூலகத்தின் முன்பாக வைத்து இந்திய அரசின் சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது. இதற்காக வடமாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டங்களிலிருந்தும் தலா 50 பேர் வீதம் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அரச பேருந்து மூலம் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டனர். காலையிலேயே குறித்த நிகழ்வுக்காக பொது மக்கள் அழைத்து வரப்பட்டிருந்தனர். இருப்பினும் நிகழ்வு மாலை 4 மணியளவிலேயே ஆரம்பமானதுடன் பொது மக்களுக்கு மதிய உணவு வழங்கப்படாமல் சிற்றுண்டி மட்டுமே வழங்கப்பட்டது.

அத்துடன் சைக்கிள்களை பெற்றுச் செல்லலாம் என்று வந்த மக்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. பயனாளிகளுக்குரிய சைக்கிள்கள் வழங்கப்படாமல் அதற்குரிய 'டோக்கனுடன்' மட்டும் மக்கள் திரும்பிச் சென்றனர். பொதுமக்கள் ஏமாற்றத்துடன் இரவு வேளையே திரும்பிக் கொண்டு செல்லப்பட்டு நகரப் பகுதியில் இறக்கிவிடப்பட்டனர்.

வெறும் 'டோக்கனை' மட்டும் பெறுவதற்காக பொதுமக்கள் அன்றைய நாள் முழுவதையும் வீணே கழிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. தமது அரசியல் அதிகாரங்களைக் காட்ட பொது மக்களை இவ்வாறு பாடாய்ப் படுத்துகின்றனர் என்று அரச அதிகாரி ஒருவர் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர். (ம-15)

## சேவைக்கு வந்தது வடதாரகை

யாழ்ப்பாணம், ஜன.21
நெடுந்தீவு குறிகாட்டுவான் சேவைக்கென தருவிக்கப்பட்டு தொடர்ந்து சேவையை மேற்கொள்ள முடியாது தத்தளித்துக் கொண்டிருந்த வடதாரகை II மீண்டும் நேற்று வெள்ளிக்கிழமை முதல் சேவையில் இணைந்துள்ளது.

காற்று, கடல் கொந்தளிப்பு காரணமாக நெடுந்தீவுக் கடலில் வடதாரகை படகை நங்கூரமிட்டு பயணிகளை ஏற்றி இறக்க முடியாத நிலை இருந்தது.

இதனால் வடதாரகை II சேவை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தேவை கருதி வடதாரகையின் சேவை ஆரம்பிக்கப்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## பாஷையூர் கரையோர அணைகள் அமைப்பதில் தொடர்ந்து தாமதம்

யாழ்ப்பாணம், ஜன.21
பாஷையூர் கரையோரப் பாதுகாப்பு அணைக் கட்டுக்களின் கட்டுமாணப் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்த அணைக்கட்டுக்களை அமைப்பதற்கு கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக அதற்குரிய கற்கள் குவிக்கப்பட்டும் கூட நிர்மாணப் பணிகள் இதுவரைக்கும் ஆரம்பிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக யாழ். மாவட்ட கடல்தொழில் நீரியல் வள திணைக்களத் தின் உதவிப் பணிப்பாளர் இ.இராவிந்திரனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

இந்தக் கரையோரப் பாதுகாப்பு அணைகளை அமைப்பதற்குரிய நடவடிக்கையை முன்னர் 'யுனிசெவ்' நிறுவனம் மேற்கொண்டது.

தற்போது ஐ.ஒ.எம். நிறுவனமே இந்த புனர் நிர்மாணப் பணியை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தக் கட்டுமாணப் பணிகள் விரைவில் ஆரம்பமாகும்.-என்றார்.

பாஷையூர் கடற்கரைகளுக்கு கரையோரப் பாதுகாப்பு அணைகள் மற்றும் இறங்கு துறை வசதி ஏதும் இன்றி மீனவர்கள் கடந்த பல வருடங்களாகச் சிரமப்பட்டு வருகின்றனர்.

தற்போது கடல் வற்று காலமாகையால் மீனவர்களின் மீன்பிடிப் படகுகளைக் கூடக் கரைக்குக் கொண்டு வரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்கு இறங்குதுறை வசதி இக் கடலோரத்தில் இல்லாமையே காரணம் என்று கூறப்படுகின்றது. (ம-17)



சுன்னாகத்தில் அமைந்துள்ள விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகத்தின் நிறுவுநர் உதயநாளும் பரிசுத் தினமும் அண்மையில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர் திருமதி நாளாயினி இன்பராஜ் மற்றும் விருந்தினர்களுடன் மாணவர்கள் மற்றும் வாழ்வகத் தலைவர்.

# உயர்தர மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.21
அண்மையில் வெளியான உயர்தரப் பரீட்சை முடிவுகளின்படி சித்தி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு ஒன்று நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

கப்ஸ்ரோன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கணிதப் பிரிவு, வணிகப் பிரிவு உள்ளிட்ட யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 200 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த தலா 50 மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

இம் மாணவர்களில் முதலாம் தரத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கு புலமைப் பரிசில் திட்டங்கள் இலவசமாக வழங்கப்பட்டன. அத்துடன் அடுத்த 100 மாணவர்களுக்கு 50 வீதமும், ஏனைய மாணவர்களுக்கு 25 வீதமும் கற்றலுக்கான புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் வேல்நம்பி தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன், உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் பாடசாலை அதிபர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பேராசிரியர் வேல்நம்பி உரையாற்றும்போது தெரிவித்ததாவது:

மாணவர்கள் உயர்தரப் பெறுபேறுகளுடன் நின்றுவிடாது தமது ஆளுமையை விருத்தி செய்வதற்கான கல்விசார் நடவடிக்கைகளிலும் ஈடுபடவேண்டும்.

அத்துடன் மொழிப் பயிற்சி இன்றியமையாததாகும். தமிழ்மொழி மட்டும் போதாது ஆங்கில மொழியுடனும் சிங்கள மொழியுடனும் போட்டி போட வேண்டிய காலம் இதுவாகும். அதனை மனதில் கொண்டு மொழி ஆளுமையை விருத்தி செய்வது அவசியம்.

தரமான பெறுபேறுகள் கிடைக்கவில்லை என்று மனம் சோர்ந்து போகாது மீண்டும் மீண்டும் முயற்சி செய்வது அவசியம். ஏனெனில் இன்று கல்வி மட்டுமே அடிப்படைத் தேவையாக உள்ளது. கல்வி சார்ந்த நடவடிக்கைகளில் மாணவர்கள் கவனம் செலுத்த வேண்டும். உங்களின் சகோதர சகோதரிகளுக்கு வழிகாட்டிகளாக இருக்க வேண்டும். -என்றார். (ம-311-ரி)

## 2011ஆம் ஆண்டில் மட்டும் 98 ஆயிரம் 'எக்ஸ்ரே' படப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஜன.21
யாழ்.போதனா வைத்தியசாலையில் 'எக்ஸ்ரே' படப்பிடிப்பு பிரிவில் கடந்த 2011ஆம் ஆண்டில் மட்டும் 98 ஆயிரம் 'எக்ஸ்ரே' படப்பிடிப்புகள் இடம்பெற்றிருப்பதாக வைத்தியசாலை புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

வைத்தியசாலையின் விடுதியில் தங்கி சிகிச்சை பெறுவோருக்கும் மற்றும் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதற்கு வருகைதரும் நோயாளர்களுக்கும் இந்த 'எக்ஸ்ரே' படப்பிடிப்புகள் இடம்பெற்றுவருகின்றன.

தற்போது தினமும் 300 இல் இருந்து 350 வரையான எக்ஸ்ரே படப்பிடிப்பு இடம் பெற்று வருகின்றன.

இதற்கென வைத்திய சாலையில் உள்ள மூன்று 'எக்ஸ்ரே'படப்பிடிப்பு இயந்திரங்களும் ஒரே நேரத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இந்த மூன்று 'எக்ஸ்ரே' இயந்திரங்கள் மூலமும் படப்பிடிப்புக்கள் எதுவித சிரமமும் இன்றி நடைபெற்று வருகின்றன.

கடந்த வாரத்தில் மூன்றாவது புதிய 'எக்ஸ்ரே' இயந்திரம் செயற்பட ஆரம்பித்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-17)

## குற்றச் செய்தி

யாழ்ப்பாணம், ஜன.21
காப்புறுதிப் பத்திரமின்றியும் போக்குவரத்துக்கு இடையூறாகவும் வாகனம் செலுத்திச் சென்ற குற்றத்துக்காக கோப்பாயைச் சேர்ந்த நபர் யாழ்.நீதிமன்றத்தில் 5ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினார்.

யாழ்.நகரப் பகுதியில் இவ்வாறு வாகனம் செலுத்திச் சென்ற போதே பொலிஸாரால் இவருக்கெதிராக வழக்குப்பதிவு செய்து நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் முற்படுத்தினர் சந்தேக நபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து நீதி மன்றம் இந்த அபராதத்தை விதித்தது. (ம-4)

சிந்தியுங்கள்...! சொல்லுங்கள்...! வெல்லுங்கள்...!

ஏனைய உடல் உறுப்புக்களைப் போலல்லாது, மூளையின் வளர்ச்சியைப் பிற்காலத்தில் சீராக்கிக்கொள்ள முடியாது.

ஆகவே, ஞாயிற்றுக்கிழமை II ஆம் பக்கத்தில் பிரசுரமாகும் "உங்கள் குழந்தையின் அறிவுக்கூர்மையை அதிகரியுங்கள்" என்னும் கட்டுரையை வாசியுங்கள். அதன் கீழுள்ள கேள்விகளுக்குப் பதிலளித்துப் பரிசுகளை வெல்லுங்கள்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு- தெற்கு பேதமின்றி மாணவருக்கு சமமான கல்வி

## வல்வை சிவகுரு வித்தியாலயத்தில் கல்வி அமைச்சர்

வடமராட்சி, ஜன.21

இன, மத, மொழி வேறுபாடுகளைக் களைந்து இலவசக் கல்வி, இலவச பாடப் புத்தகங்கள், சீருடைகள், மதிய உணவு, பாடசாலை உபகரணங்கள் என்பனவற்றை எமது மாணவச் செல்வங்களுக்கு வழங்கி இந்த நாட்டில் கல்வி உரிமையை இந்த அரசு வழங்கி வருகின்றது.

வடக்கு - தெற்கு என்ற பேதமின்றி எல்லா மாணவருக்கும் சம கல்வி வாய்ப்பு கொடுக்கப்படுகிறது.

இவ்வாறு கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன பாடசாலை மாணவர்களுக்கான போஷாக்கு உணவு வழங்கும் தேசிய அங்குரார்ப்பண விழாவில் மாணவர்களுக்கு இலவச மதிய உணவு வழங்கும் திட்டத்தை வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன மாணவர்களுக்கு முதலில் மதிய உணவை வழங்க, தொடர்ந்து அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, பாரம்பரியக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் மதிய உணவை வழங்கினார்கள்.

> நாடு முழுவதும் 20 தொடக்கம் 25 வீதமான மாணவர்கள் மந்த போஷாக்குடன் உள்ளார்கள். இதனால் இவர்கள் சிறந்த கல்வியைப் பெற முடியாதுள்ளது.

இந்த நிகழ்வில் அமைச்சர் பந்துல குணவர்த்தன தொடர்ந்து பேசுகையில்:

நாடு முழுவதும் 20 தொடக்கம் 25 வீதமான மாணவர்கள் மந்த போஷாக்குடன் உள்ளார்கள்.

இதனால் இவர் கள் சிறந்த கல்வியைப் பெற முடியாதிருப்பதாக அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் வெளியிடப்பட்ட ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2005 ஆம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்திருந்தார். அதற்கமைய கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் திறைசேரி, அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் பாடசாலை மாணவர்களுக்கு இலவச மதிய உணவு வழங்கும் திட்டத்தை ஜனாதிபதி ஆரம்பித்து வைத்து அது தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் முதலாம் தரம் தொடக்கம் 9 ஆம் தரம் வரைக்கும் நாட்டின் ஏனைய பகுதிகளில் முதலாம் தரம் தொடக்கம் 5 ஆம் தரம் வரைக்கும் இலவச மதிய உணவு வழங்கப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தின் கீழ் நாடெங்கிலுமுள்ள 4 மில்லியன் தமிழ், முஸ்லிம், சிங்கள மாணவர்கள் போஷாக்கு உணவைப் பெற்று வருகின்றார்கள்.

வடக்கு, கிழக்கு, தெற்கு என்ற பேதமின்றி சிங்கள, தமிழ், முஸ்லிம் மாணவர்கள் சிறந்த கல்வியைப்பெற நாம் வழி வகைகளைச் செய்து வருகின்றோம். நாடு முழுவதும் 5 ஆயிரம் ஆரம்பப் பாடசாலைகள், ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகள் அமைக்கும் திட்டம் கடந்த வருடம் ஆரம்பமாகியுள்ளது. இந்தத் திட்டம் எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு பூர்த்தியடையும்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ வின் மேற்பார்வையில் பாடசாலை மலசலகூடங்கள் திருத்தியமைக்கப்படவுள்ளன. மாணவர்களின் மேம்பாட்டுக்காக உலக உணவு நிறுவனம், ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற நிறுவனங்கள் உதவி வருகின்றன.

இதன் மூலம் மாணவர்களுக்குத் தேவையான திட்டங்களை நிறைவேற்றி வருகின்றோம்.- என்றார். (த-236)

## சிறுமியை வாகனத்தால் மோதிய நபர் பிணையில்

வாகனத்தால் சிறுமி ஒருத்தியை மோதிக் காயப்படுத்திய நபர் யாழ். நீதிமன்றினால் 10 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையிலும் விடுவிக்கப்பட்டார்.

யாழ்.நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் இந்த வழக்கு கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கோப்பாயைச் சேர்ந்த பிரஸ்தாப நபர் சிறுமியை தனது வாகனத்தால் மோதிக் காயப்படுத்திவிட்டுத் தலைமறைவாகியிருந்தார். இவருக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. சந்தேக நபர் பொலிஸாருக்கு டிமிக்கி கொடுத்து சாவகச்சேரியில் தனது வாகனத்தை வைத்துப் பிழைப்பு நடத்தி வந்துள்ளார்.

இந்த நிலையிலேயே நீதிமன்றப் பிடியாணை காரணமாக இரண்டு வாரங்களுக்கு முன்னர் சாவகச்சேரியில் வைத்து சந்தேக நபரைப் பொலிஸார் கைது செய்து மன்றில் ஆஜர்படுத்தினர். அவரை இரண்டு வார காலத்துக்குவிளக்கமறியலில்வைக்குமாறு உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை இந்த வழக்கு மீள விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சந்தேக நபர் சார்பாக சட்டத்தரணி ஜொனி மதுரநாயகம் ஆஜராகி அவரைப் பிணையில் விடுவிக்குமாறு கோரியிருந்தார். அதனடிப்படையிலேயே அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். இந்த வழக்கு அடுத்த மாதம் மீள விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இதேவேளை சந்தேக நபரது வாகனத்தையும் மன்றில் தடுத்து வைக்க உத்தரவிட்டதோடு அதனைப் பரி சோதனைக்கு உட்படுத்தி மன்றுக்கு அறிக்கை சமர்ப் பிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ம-4)

## வீதிகளுக்கு மின் விளக்குகள்

யாழ்.மாநகரப் பகுதியில் உள்ள அனைத்து வீதிகளுக்கும் மின் விளக்குகள் முழுமையாக பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. யாழ்.நகர் மற்றும் கரையோரப் பகுதி, அரியாலை, கொழும்புத்துறை உள்ளிட்ட சகல பகுதிகளிலும்மின்சாரவீதி விளக்குகள்பொருத்தப்பட்டு வருகின்றன.

யாழ்.நகரின் முற்றவெளி மற்றும் புல்லுக்குளம் வீதி, நூல் நிலைய வீதி போன்றவற்றுக்கும் மேலதிக மின்சார விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. அதனைவிட தனியார் பஸ் நிலையப் பகுதி மற்றும் கொட்டடி மீன்சந்தைப் பகுதி போன்ற இடங்களுக்கு மேலதிக மின் விளக்குகள் பொருத்தப்படவில்லை எனவும் இதனால் அந்தப் பகுதி இருளில் மூழ்கி உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-17)

## நெடுந்தீவுக்கு டெங்குக் குழு

யாழ்ப்பாணம், ஜன.21

நெடுந்தீவில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு ஊர்காவற்றுறை சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி அருணா புண்ணியமூர்த்தி தலைமையிலான பொது சுகாதார பரிசோதகர் குழு நேற்று வெள்ளிக்கிழமை நெடுந்தீவுக்குச் சென்றுள்ளது.

இந்தக் குழுவினர் நெடுந்தீவில் உள்ள பொது சுகாதார பரிசோதகர் மற்றும் சுகாதார சேவைகள் உத்தியோகத்தர்களுடன் இணைந்து டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது. (ம-7)



அதி மின்வலு இணைப்புக்களை மேற்கொள்வதற்கான மின்கம்பங்கள் தெற்கில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு கனரக வாகனங்கள் மூலம் எடுத்து வரப்படுகின்றன. (ம-17)

## முதியோருக்கு சிகிச்சை தனியான பிரிவில்

தென்மராட்சி, ஜன.21

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் வேண்டுகோளை யாழ். சுகாதாரத் திணைக்களத்தினர் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இந்த வைத்தியசாலையில் இன்று தொடக்கம் பிரதி சனிக்கிழமைகளில் முதியவர்களுக்கான சிகிச்சைப் பிரிவு எட்டாம் இலக்க அறையில் நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவுக்கு வரும் 60 வயதுக்கு மேற்பட்டோர் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளதால் வைத்தியசாலைக்கு வரும் முதியோர்களுக்கென தனியான சிகிச்சைப் பிரிவை ஆரம்பிக்குமாறு கோரி உதயனில் செய்தி வெளியாகியிருந்தது.

இதனையடுத்து முதியோர்களுக்கு வைத்தியத்துடன் ஆலோசனைகளும் வழங்கக் கூடிய வகையிலான கிளினிக் பிரதி சனிக்கிழமைகளில் நடத்தப்படவுள்ளன. (ம-207)

## திருத்த வேலைக்கு நிதி ஒடுக்கீடு

யாழ்ப் பாணம், ஜன.21

மண்டைதீவு கொண்டகம் வீதியின் திருத்த வேலைகளுக்கென வேலணைப் பிரதேச சபை ரூபா 5 லட்சம் நிதியைஒதுக்கீடுசெய்துள்ளது.

புங்குடுதீவு, ஊரதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் உள் வீதிகளுக்கும், நயினாதீவு உள் வீதிக்குமாக தலா ரூபா 5லட்சம் வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட மண்டைதீவு, நயினாதீவு, புங்குடுதீவு, அல்லப்பிட்டி, மண்கும்பான் பகுதிகளில் உள்ள பொது நூலகங்களுக்கு நூல் கொள்வனவுக்காக தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## சேமலாப நிதி திட்டத்தின் கீழ் இணையாதோரை இனங்காணல்

யாழ்ப்பாணம், ஜன.21

வடக்கில் ஊழியர் சேமலாப நிதிதிட்டத்தில்இணைந்து கொள்ளாத நிறுவனங்களை இனங்காணுவதற்குத் திடீர் சோதனை நடவடிக்கை களை தொழில் ஆணையாளர் அலுவலகம் மேற்கொள்ளவுள்ளது.

இது குறித்து வடமாகாண பிரதி தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் கூறுகையில்:

இதுவரைக்கும் ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் இணைந்துகொள்ளாததொழில் நிறுவனங்களை இனங் கண்டு அவற்றின் மீது நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளோம். வாரத்தில் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் எனது தலைமையில் சிரேஷ்ட தொழில் மேற்பார்வை அதிகாரிகள் கொண்ட குழு இந்த திடீர் சோதனை நடவடிக் கையை மேற்கொள்ளவுள் ளது.

> வாரந்தோறும் இனி திடீர்ச் சோதனைகள்

சகல தொழில் நிலையங்களிலும் பணியாற்றும் பணியாளர்களை இந்த ஊழியர் சேமலாப நிதி திட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் உடனடி நடவடிக் கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு ஊழியர் சேமலாப நிதி திட்டத்தில் இணையாத நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (ம-17)

## நோயாளிகளாகும் பார்வையாளர்கள்

யாழ்ப்பாணம், ஜன.21



யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நோயாளர்களைப் பார்வையிடச் செல்லும் மக்கள்வெய்யிலில் கால்கடுக்க காத்து நின்று நோயாளிகள் ஆகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையின் பின்புறமாக மின்சார நிலைய வீதியில் உள்ள நுழைவாயில் ஊடாகவே நோயாளர்களைப் பார்ப்பதற்குச் செல்கின்றனர்.

தூர இடங்களில் இருந்து வரும் மக்கள் இந்த வீதியோரங்களில் தற்போது [illegible] வெய்யிலுக்கு மத்தியில் கால்கடுக்க நிற்க வேண்டியுள்ளது.

நண்பகல் 12 மணிக்கே இந்த நுழைவாயில் ஊடாக உள்ளே செல்வதற்கு அனுமதிக்கப்படுகின்றது.

இந்த நுழைவாயில் பகுதியில் கொட்டகை அமைக்கப்பட்டும்கூட அதில் நிற்பதற்கும் அனுமதி வழங்கப்படாதது குறித்து மக்கள் கவலை தெரிவித்தனர். (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதுவும் ஒரு வீதியா?

நோர்வூட், ஜன.21

ஹற்றன் வில்பட் நகரின் அம்மன் கோயிலிலிருந்து எரோல் தோட்டம்வரை செல்லும் பாதை நீண்ட காலமாக பாவனைக்குதவாத நிலையில் உள்ளது.

இந்த வீதி ஊடாக சுமார் 1,750 பேர்வரை பயணிக்கின்றனர். இவர்கள் ஆறு தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்களாவர். இவர்களில் 650 பேர் வரை பாடசாலை மாணவர்களாவர்.

கடந்த காலங்களில் நோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார் ஆகியோரைக் கொண்டு செல்கையில் உயிராபத்தை நோக்கவேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளன என்று ஓட்டோ சாரதிஞள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியை செப்பனிடுவது பற்றி ஹற்றன், டிக்கோயா நகரசபையிடமும், தோட்ட நிர்வாகத்திடமும் முறையிட்டும் பயனின்றி போய்விட்டது என்று பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர். (ச)

## காரிருளில் பஸ் நிலையம்

மஸ்கெலியா, ஜன.21

மஸ்கெலிய பஸ் நிலையக் கட்டடத்தில் இரவு நேரங்களில் மின்குமிழ்கள் ஒளிர்வதில்லை என்று பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அந்த பஸ் தரிப்பிடத்தை அமைத்துக்கொடுத்த காலஞ்சென்ற அமைச்சர் காமினி திஸாநாயக்க, நவீன முறையில் மின்குமிழ் கள் பொருத்தப்பட்டு மக்கள் பாவனைக்காகத் திறந்துவைத்தார்.

தற்போது, அந்த பஸ் நிலையம் இரவுநேரங்களில் என்ன நடந்தாலும் தெரியாத நிலையில் கும்மிருட்டாக உள்ளது.

இதனால், சம்பந்தப்பட்ட சபைகள் முன்வந்து இந்த பஸ் நிலையத்தை புனர்நிர்மாணம் செய்து, மின் ஒளியையும் வெகு விரைவில் பெற்றுக்கொடுக்க முன்வரவேண்டும் என்று பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

## வெருகல் காட்டில் பெருந்தொகை தோட்டாக்கள் மீட்பு

வெருகல்,ஜன.21

வெருகல் காட்டுப் பகுதியிலிருந்து பெருந்தொகையான தோட்டாக்களை வாகரைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பல்வேறு ஆயுதங்களுக்குப் பயன்படுத்தப்படும் 81,500 தோட்டாக்கள் மீட்கப்பட்டதாகவும் போர் முடிவடைந்தபின் இப்பகுதியில் அதிகளவு வெடிபொருள்கள் மீட்கப்படுவது இதுவே முதல் தடவை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நிலத்துக்கு கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்த வெடிபொருள்கள் மக்கள் வழங்கிய தகவல்களையடுத்து மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# மக்களுக்கு சேவையாற்றுவதே உள்ளூராட்சி மன்றத்தின் பணி

ஜனநாயகத்தின் ஓர் அங்கமாகவும் மக்கள் அரசின் சேவைகளை நேரடியாக பெற்றுக் கொள்ளும் அமைப்பாகவும் உள்ளூராட்சி மன்றங்கள் திகழ்கின்றன என்கிறார் பிரதமர்.



கண்டி,ஜன.21

மக்களின் தேவைகளை நிறைவு செய்வதை உள்ளூராட்சிமன்றங்கள் முதன்மைப் பணியாகக் கொண்டு செயற்பட வேண்டும் என்று பிரதமர் டி.எம். ஜயரட்ண தெரிவித்தார்.

கம்பளை, உடபலாத்த பிரதேச சபைக் கட்டடத் தொகுதியில் நிர்மாணிக்கப்பட்ட புதிய வாசிகசாலை, சுகாதார சேவை நிலையம் மற்றும் சபை மண்டபம் என்பவற்றின் திறப்பு விழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. இந்தநிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனநாயகத்தின் ஓர் அங்கமாகவும் மக்கள் அரசின் சேவைகளை நேரடியாக பெற்றுக்கொள்ளும் அமைப்பாகவும் உள்ளூராட்சிமன்றங்கள் திகழ்கின்றன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் சேவையால் வலுப்படுத்த வேண்டும். பிரதேச மட்டத்தில் மக்கள் நன்மை பெற உள்ளூராட்சி மன்றங்கள் அரசியல் பேதம் இன்றி செயற்படல் அவசியம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# சுருக்குவலை பயன்பாட்டால் கரையோர மீன்பிடி பாதிப்பு

பொத்துவில்,ஜன.21

பொத்துவில் கடற்பரப்பில் எல்லை நிர்ணயமின்றி சுருக்கு வலை பயன்படுத்துவதனால் கரையோர மீன்பிடி பாதிக்கப்படுவதாக காதிரிய்யா மீன்பிடி கூட்டுறவு சங்கத்தின் தலைவர் மீராமுகைதீன் தெரிவித்தார்.

1996ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க கடற்றொழில் நீரியல் வளங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் இலங்கை கடற்பரப்பினுள் வெளிச்ச கவர்ச்சியின்றி சுருக்கு வலை பயன்படுத்துவது கடல் வலயத்தினுள் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தை மீறி இப்போது பொத்துவில் கடற்பரப்பினுள் சிலர் எல்லை மீறி 7 மைல்களுக்குட்பட்ட பகுதியில் சுருக்கு வலை பயன்படுத்துவதனால் கரையோர மீன்பிடி பாதிப்படைந்துள்ளது என்று அவர் தெரிவித்தார். இதுபற்றி சம்பந்தப்பட்டவர்களுக்கு பல முறையீடுகள் செய்தும் பயன் கிட்டவில்லை.

1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் நீரியல் வளங்கள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் எல்லை தெளிவாக இடப்பட்டால் இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# போர்ச் சூழலால் மூடப்பட்ட பாடசாலைகள் திறப்பு

மட்டக்களப்பு,ஜன.21

கிழக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் நிலவியபோர் சூழ்நிலைகளால் தற்காலிகமாக மூடப்பட்டிருந்த 69 பாடசாலைகளில் 45 பாடசாலைகள் மீளவும் திறக்கப்பட்டு மாணவர்களுக்கான கற்றல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் என்.ஏ.ஏ.புஸ்பகுமார தெரிவித்தார்.

மட்டக்களப்பு வலயத்தில் இரு பாடசாலைகளும், கல்குடா வலயத்தில் 17 பாடசாலைகளும், அம்பாறை வலயத்தில் ஒரு பாடசாலையும், மூதூர் வலயத்தில் 18 பாடசாலைகளும், கந்தளாய் வலயத்தில் ஒரு பாடசாலையும், திருகோணமலை வலயத்தில் 6 பாடசாலைகளும் திறக்கப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்

இவ்வாறு மீளத் திறக்கப்பட்ட இந்தப் பாடசாலைகளில் மாணவர்களின் தேவைகளுக்கு தேவையான கற்றல் உபகரணங்களும் பாடசாலை கட்டட வளங்களும் அரசசார்பற்ற நிறுவனங்கள், யுனிசெவ் நிறுவனம், கல்வி அமைச்சு என்பவற்றினால் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ச)

## சம்பூரில் 500 மெகாவாற் மின்சார நிலையம்

திருகோணமலை,ஜன.21

500 மெகாவாற் மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய அனல்மின் நிலையமொன்றை சம்பூரில் அமைப்பதற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ முன்வைத்த திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் அதிகரித்துவரும் மின்சாரத்துக்கான தேவையைக் கருத்தில்கொண்டு சம்பூரில் 500 மில்லியன் டொலர் செலவில் இந்த அனல்மின் நிலையத்தை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச)

# அம்பாறையில் நடுங்கும் குளிர்; இயல்பு வாழ்க்கை பாதிப்பு

ஆலையடிவேம்பு, ஜன.21

அம்பாறை மாவட்டத்தில் பரவலாக முன்பு ஒரு போதும் இல்லாத குளிரான காலநிலை ஏற்பட்டுள்ளமையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மக்கள் மத்தியில் பலவிதமான புதிய நோய்களும் தலைகாட்டியுள்ளன என்று வைத்திய சாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

1957ஆம் ஆண்டு இந்தப் பகுதியில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தைத் தொடர்ந்து இதுபோன்ற கடும் குளிரான காலநிலையும் ஏற்பட்டிருந்தது என்று இந்தப்பகுதியில் வசிக்கும் முதியவர்கள் தெரிவிக்கிறார்கள்.

இப்பகுதியில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் வடிந்து சீரான காலநிலைக்குத் திரும்பிக்கொண்டு வரும்போது இந்தக் குளிரான காலநிலை ஏற்பட்டுள்ளமையால் மக்கள் தொழிலுக்குச் செல்லாது வீடுகளிலேயே முடங்கிக்கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

- இவ்வாறு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளைத் தொண்டர் நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# அழிவுகளை எண்ணாமல் சமூகத்தை கட்டியெழுப்பவும்

உள்ளூராட்சி மன்றங்களை பலப்படுத்துகின்ற திட்டம் என்பது வடக்குக்கும் கிழக்குக்குமான ஒரு திட்டம் என்கிறார் கிழக்கு மாகாண முதலமைச்சர்.

மட்டக்களப்பு,ஜன.21

எதிர்காலத்தைப் பற்றி சிறந்த கனவுகளோடும், கடந்த கால அனுபவங்களோடும் அழிவுகளை எண்ணாமல் தொடர்ந்து எமது சமூகத்தை கட்டியெழுப்பும் பணியை ஒன்றிணைந்து செய்ய வேண்டும் என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

கொக்கட்டிச்சோலையில் அமைக்கப்பட்டுள்ள சந்தை தொகுதியை திறந்துவைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றங்களை பலப்படுத்துகின்ற திட்டம் என்பது வடக்குக்கும் கிழக்குக்குமான ஒரு திட்டம். ஆனால் கிழக்கு மாகாணம் தான் இதை சிறப்பாகச் செய்கின்றது. வடக்கு மாகாணத்துக்கு கொடுத்த நிதிகள் பூரணப்படுத்தப்படவில்லை. வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. அமைச்சர்கள், அதிகாரிகள் இருந்தும் இவற்றையெல்லாம் கவனிக்காமல் இன்னும் கிழக்கைப் பற்றி கதைப்பது கவலையளிக்கின்றது.

எமது மாவட்டம் பொருளாதாரத்தில் வேகமாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்றது. மாகாண மட்டங்களிலே 2008 ஆம் ஆண்டு நாங்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தோம். இன்று எங்களுடைய மாவட்டம் உற்பத்தித் துறையில் ஆறாம் இடத்தைப் பெற்றிருக்கிறது.

அந்த அடிப்படையில் எமது மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பி வருமானத்தை பெருக்கி, தேசிய ரீதியாக எமது மாகாணத்தை உயர்த்தலாம் என்பதில் எந்த வித ஐயமுமில்லை. அதற்கான அடிப்படைக் காரணம் மக்கள் மத்தியில் இருக்கின்ற மனமாற்றமும் உழைப்பும் தான்.

கடந்த காலங்களில் நாங்கள் சுதந்திரமாக எதையும் செய்ய முடியாதவர்களாக இருந்தோம்.ஆனால் தற்போது எதையும் திட்டமிட்டு செய்யக்கூடிய நம்பிக்கை கொண்டவர்களாக நாம் இருக்கின்றோம் என்றார். (ச)



தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகம் நேற்று வெள்ளிக்கிழமை சிரமதானத்தில் ஈடுபட்டது. கல்வி அதிகாரிகள், ஆசிரிய ஆலோசகர்கள் உள்ளிட்ட குழுவினர் சிரமதான நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

# அக்கரைப்பற்று மாநகரசபை உறுப்பினர் முஸ்லிம் காங்கிரஸுக்குத் தாவல்

அம்பாறை, ஜன.21

தேசிய காங்கிரஸைச் சேர்ந்த அக்கரைப்பற்று மாநகரசபை உறுப்பினர் ஏ. எல்.எம். தவம் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து கொள்ளவுள்ளார் என்று தெரி விக்கப்படுகி றது.

இதுதொடர்பில் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் சிலர் அண்மையில் அவரது இல்லத்திற்குச் சென்று பேச்சு நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்தவருடம் நடைபெற்ற மாநகர சபைத் தேர்தலில் அக்கரைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரான ஏ.எல். எம்.தவத்தை முதன்மை வேட்பாளராக நியமிக்காமல் அவ்விடத்திற்குத் தனது புதல்வரை அமைச்சர் அதாவுல்லா நியமித்ததைத் தொடர்ந்து இருவருக்குமிடையே முரண்பாடும் பகையுணர்வும் நிலவி வருகின்றன. அதனால் மாநகரசபை உறுப்பினர் தவம் இம்முறை மாநகரசபை பட்ஜெட்டை ஆதரிக்காமல் பகிஷ்கரித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 42ஆவது அகவையில்...
### மேக்கன்ரைல் பாதுகாப்புச் சேவை தனியார் நிறுவனம்

எமது பாதுகாப்புச் சேவையானது வடக்கு கிழக்கு மாகாணங்களில் நாற்பத்திரண்டு ஆண்டுகளாக தொடர்பணி ஆற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய வங்கிகள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் எமது ஸ்தாபன அனைத்து ஊழியர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு எமது பணி தொடர உங்கள் அனைவரதும் அன்பையும் ஆதரவையும் நாடி நிற்கின்றோம்.

651/12, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். - பணிப்பாளர்

## கார்கள் விற்பனைக்கு
NISSAN SB-13 64-xxxx, Super Saloon Full Option
NISSAN FB -15 KC-xxxx Super Saloon Full Option
கார்கள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0712118460, 0777292199

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு
அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு (ஆண், பெண்)
தொடர்பு:- 0774581237

## தேவை
அச்சகம் ஒன்றின் பயன்பாட்டுக்கு பாவித்த மேசை, கதிரை, தளபாடங்கள் மற்றும் கணினி, மேசை என்பன தேவை.
தொடர்பு:- 0772984514

## ஐங்கரன் இசைக்குழு
மீண்டும் யாழ். மண்ணில் புதுப்பொலிவுடன் ஐங்கரன் இசைக்குழுவினர். உங்கள் நிகழ்வுக்கு எம்மை அழைத்து மகிழ்ந்திட அழையுங்கள்

இல.22 A, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். (13313) (6-10

தொடர்பு: சு. சஞ்சய் 0773158847

## 33 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
### குருசாமி தனலட்சுமி

என் அருமை அம்மாவே!
எத்தனை [illegible] கள் சென்றாலும்
உங்கள் பசுமையான நினைவுகள்
என்றும் எம்மை விட்டு அகலாது
239/15, மானிப்பாய் வீதி, உடுவில்.
பிரிவால் துயருறும் G. கோபால் (மகன்) (13311)(2-6-7)

## பதவி வெற்றிடம்
பல்தேசிய நிறுவனமான Education Technologies இல் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
* Trainee Marketting Executive
* Marketting Executive (with one year experiences)
* Front Officer (வயது 25ற்கு உட்பட்டவர்கள்)

தகைமைகள்
* க.பொ.த உயர்தரப்பரீட்சையில் சித்தி (ஆண்/பெண்)
* 30 வயதிற்கு உட்பட்டவர்கள்

நேர்முகப் பரீட்சைகள் 23 Jan - 27 Jan வரை நடைபெறவுள்ளது.
நேரில் வரவும்.

Within 3 months can earn more than Rs. 40,000/=

Cont: Mr. Anthany
0773434823
0727434824
0215671130

Education Technologies
186, Kasthuriar Road, Jaffna.

## விற்பனையாளர் தேவை
புடவை வியாபாரத்தில் அனுபவமுள்ள/ பழக விரும்பும் பெண் பிள்ளைகள் தேவை.
(கடமை நேரம் 9 Am- 4 Pm உடன் நேரில் வரவும்)
### லைடன் புடவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி, (பஸ்நிலையம் முன்பாக),யாழ்ப்பாணம்.

## ஸ்ரீ துர்க்காதேவி துணை



### தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்
## அபிராமிப்பட்டர் விழா
### 22.01.2012 (ஞாயிற்றுக்கிழமை)


துர்க்காதேவி அடியார்களே,
நிகழும் கரவருடம் தைத் திங்கள் 08 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.00 மணிக்குத் தை அமாவாசை தினத்தை முன்னிட்டு அபிராமிப் பட்டர் விழா நடைபெற அம்பாள் திருவருள் கூடியுள்ளது. அம்பாள் அடியார்கள் அன்றைய தினம் அபிராமி அந்தாதி ஓதி அம்பிகையின் திருவருளையும் அபிராமிப் பட்டரின் குருவருளையும் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

நிகழ்ச்சி நிரல்
- பிற்பகல் 3.00 மணி விஷேட பூசை
- பிற்பகல் 3.30 மணி அபிராமி அந்தாதி ஓதலும் பட்டர் எழுந்திருக்கும் உற்சவமும்
- மாலை 4.30 மணி பட்டருக்கு அம்பாள் காட்சி கொடுத்தலும் மணிபூரணை நிலவுத் தரிசனமும்
- மாலை 5.00 வசந்தமண்டபப் பூசை
- மாலை 5.30 அம்பாளுடன் அபிராமிப்பட்டர் திருவீதியுலா வருதல்
- மாலை 7.00 அர்த்தசாமப் பூசை

ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை. - நிர்வாகசபை. (13298)(2-6-7)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 11 ★ 06 ★ 1953



மறைவு 30 ★ 01 ★ 2011

### அமரர் கதிரவேலு குணசேகரம்
திதி: அபரபக்க திரயோதசி

அமைதிப் பூங்கா அமரராகி
ஆண்டொன்று கழிந்ததுவோ
அவதிப்பூக்கள் நாங்களாகி
அன்று தொட்டு அலக்கழிந்தோம்
அருளும் தெய்வம் அபயமாகி
அவன் அடியில் அமைந்ததுபோல்
உங்கள் ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
T.P:0778894334 (சி/8010)(2-6-7) குடும்பத்தினர்.

## யாழ். மாணவர்களுக்கோர் நற் செய்தி
2012 ஆம் ஆண்டிற்கான "பனரச" வெளியீட்டுப் பிரிவான எமது வெளியீடுகளை யாழ்ப்பாணம் அன்னை புத்தக சாலையில் பெற்றுக்கொள்ளலாம்.
தற்போது விற்பனையில்
* பனரச - தரம் - 5 - 2012, தரம் - 4 - 2012, தரம் - 3 - 2012
* ஆரம்பக் கல்வியின் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் - தரம் - 2, 4, 5

யாழ் நகரில் கிடைக்கும் இடம்
### அன்னை புத்தக சாலை.
"பனரச" வெளியீட்டுப் பிரிவு, தெகிவளை.
(13290) (45-7-5)

## பதவி வெற்றிடம்
பகல் நேரக் காவலாளி (தற்காலிகம்) - ஆண்/ பெண். யாழ்ப்பாணம், நல்லூர் பகுதிகளைச் சேர்ந்த 55 வயதுக்குட் பட்டவர்கள் நேரில் வரவும்.
22.01.2012 முற்பகல் 10 மணி

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட்.
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.



(யாழ். நகரிலிருந்து கஸ்தூரியார் வீதி ஊடாக வருகையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானம் கடந்த உடன் வலது புறமாக வரும் ஒழுங்கை)(13308)(2-6-7)

## மரண அறிவித்தல்கள்
### கந்தையா கனகசபாபதி
(பிரான்ஸ்)



பத்தமேனி, அச்சுவேலியை பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி 17-01-2012 செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் கந்தையா-சின்னத் தங்கச்சி தம்பதியினரின் அருமை மகனும், தனலட்சுமியின் அன்புக் கணவரும் நிர் மலாஜினி (பிரான்ஸ்), கௌசல்யா (பிரான்ஸ்), காந்திதாஸ் (பிரான்ஸ்), சியாமளா (பிரான்ஸ்), மஞ்சுளா (கனடா) ஆகி யோரின் பாசமிகு தந்தையும் கமலாதேவியின் (கனடா) அன் புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22-01-2012 ஞாயிற்றுக் கிழமை பிரான்சில் நடைபெறும்.

பத்தமேனி, அச்சுவேலியிலுள்ள அவரது மருமகன் சதா னந்த சிவத்தின் (சிவம்) இல்லத்தில் (22-01-2012) அன்று துக்கம் அனுஸ்டிக்கப்படுகின்றது. இந்த அறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்தமேனி, அச்சுவேலி. (13290) (6,7,10)
தகவல்: சிவம் குடும்பத்தினர்.

### கனகசபாபதி வரதராசன்
காரைநகர், களப்பிட்டியை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், BA தம்பி லேனை வதிவிடமாகவும் கொண்ட கனகசபாபதி வரதராசன் 20.01.2012 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி (பிரபல வர்த்தக உரிமையாளரான (A.K.K)- சிவபாக்கிய தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற குமரகோட்டம் பாலசுப்பிரமணியம் மற்றும் தவமணி தம்பதியரின் அன்பு மருமகனும், சோதியாம் பாளின் அன்பு கணவரும், பிரதீபன் (கொழும்பு தனியார் நிறுவனம்), சதீஸ்தீபன் (சுவிஸ்), கல்ப்பனா, தயாதீசன் (யாழ். பல்கலைக்கழக 1ஆம் வருட முகாமைத்துவ மாணவன்), மைதிலி (A/L வர்த்தக பிரிவு, வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராசா, விஜயராணி, சரோஜினி, வசந்தா, கிருஸ்ணரூபி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

No. 42, BA. தம்பி லேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (13310) (45 6 7)
தகவல்: குடும்பத்தினர்




# STUDY MEDICINE IN EUROPE
## WORK AS A DOCTOR IN EUROPE
### MEDICAL DEGREE FROM RIGA STRADINS UNIVERSITY, LATVIA
Medical Degree (MD) recognized by SLMC, Medical Council of UK and many European countries

For details & appointments contact:
**K. Pathmanesan** Former Senior Manager, Bank of Ceylon, Jaffna Tel: 077 58 111 72
**E. Balachandran** Former Senior Manager, Bank of Ceylon Tel: 077 61 89 126

Rusho International Consultants has been appointed by the Riga Stradins University as an authorized official Agent to recruit Sri Lankan Students to Medical, Dentistry, Nursing, Pharmacy and Physiotherapy Degree Courses.

For consultation in English please contact:

| S. H. Kumarasinghe | G. R. M. T. Bandara | Sunimal Fernando |
|---|---|---|
| Former Principal Royal College Colombo | Former Senior Manager Seylan Bank | Former Deputy General Manager, Sanasa Development Bank |

PROF. JUTA KROICA
DR. SMUIDRA ZERMANOS
WILL BE IN SRI LANKA FROM 20TH TO 28TH JAN. TO CONDUCT
SPOT ADMISSIONS

The Design Studio

**RUSHO INTERNATIONAL CONSULTANTS**
132,2/1, Suntel Building, High Level Road, Nugegoda
(Adjoining KFC / opposite St. Joseph's Girls School -Nugegoda)

Please visit our office or contact us early to get an appointment
Hotlines: 078 53 79 655, 072 85 76 212
011 28 11 322, 011 28 14 344

# போய் விடுங்கள் அசாத்!

## ஒபாமா வலியுறுத்தல்



பாதுகாப்புக் குழுவில் சிரியா தொடர் பாக ஓர் உறுதியான நடவடிக்கை எடுக்க முடியாமல் ரஷ்யாவும் சீனாவும் பல முட்டுக்கட்டைகளைப் போட்டு வருகின்றன

வொஷிங்டன்,ஜன.21

சிரியாவில் தொடரும் வன்முறைகளால் அதிருப்தி அடைந்துள்ள அமெரிக்க அதிபர் ஒபாமா, சிரிய அதிபர் பஷர் அல் அசாத் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

சிரியாவில் அதிபர் அசாத்தை எதிர்த்து, கடந்தாண்டு மார்ச் முதல், மக்கள் போராடி வருகின்றனர். அரபு லீகீன் பிரதிநிதிகள், சிரியாவில் உள்ள நிலவரத்தை ஆய்வு செய்து வருகின்றனர். அரபு லீக் குழு வந்த பின்பும் கூட, மக்கள் மீதான சிரிய ராணுவத் தாக்குதல்கள் குறைந்தபாடில்லை.

இந்நிலையில், ஜோர்தான் மன்னர் அப்துல்லா அமெரிக்க அதிபர் ஒபாமாவை சந்தித்துப் பேசினார். அதன் பின்னர் ஒபாமா அளித்த பேட்டியிலேயே இதனை வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; துரதிர்ஷ்டவசமாக அந்தநாட்டில் நிகழும் வன்முறைகளை நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. ஈரான், ஈராக் உள்ளிட்ட பல்வேறு நாட்டுப் பிரச்சினைகளை நாங்கள் பேசினாலும், சிரிய விவகாரத்தைத் தான் முக்கியமாக விவாதித்தோம். சிரியா வன்முறையை கைவிடுவதற்கான சர்வதேச நெருக்கடி மற்றும் சூழலை உருவாக்குவது குறித்து ஆலோசித்தோம் என்றார்.

இதேவேளை சிரியாப் பிரச்சினைக்குத்தீர்வாக ரஷ்யா கொண்டு வந்துள்ள தீர்மானம் குறித்து, ஐ.நா., பாதுகாப்புக் குழுவில் தொடர்ந்து விவாதம் நடந்து வருகிறது. அமெரிக்காவும், மேற்கு உலக நாடுகளும் அந்தத் தீர்மானத்தை எதிர்க்கின்றன.

அந்தநாடுகள் தீர்மானம் கொண்டு வந்தால், அதை ரஷ்யா எதிர்க்கிறது. பாதுகாப்புக் குழுவில் சிரியா தொடர்பாக ஓர் உறுதியான நடவடிக்கை எடுக்க முடியாமல் தவிப்பதற்கு ரஷ்யாவும், சீனாவும் பல முட்டுக்கட்டைகளைப் போட்டு வருகின்றன- என்றார்

## தடை விதிக்க பிரிட்டன் முன்னோடி



சிரியாவுக்கு எதிராகத் தடைகளை விதிக்கும் முயற்சியில் முன்னோடியாக பிரிட்டன் விளங்கும் என பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.


சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் அசாத்துக்கு எதிராக மக்கள் போராட்டம் நடந்து வருகின்றது. இதனால் போராட்டக்காரர்களை இராணுவம் கொன்று குவிக்கின்றது. இத்தகைய கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக மேலைநாடுகள் ஈடுபட்டுள்ளன.

இது தொடர்பாக பிரிட்டன் பிரதமர் மேலும் தெரிவித்ததாவது:

ஈரான் சிரியாஅதிபருக்கு ஆயுத உதவி செய்து வருவதற்குப் பல ஆதாரங்கள் இருக்கின்றன என்பதால் போக்குவரத்துத் தடை மற்றும் சொத்துகளை முடக்குதல் போன்ற தடைகளைப் புகுத்துவதில் பிரிட்டன் கடுமையாகச் செயற்படும் என்று தெரிவித்தார்.

எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறும் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரத்துறை அமைச்சர்கள் கூட்டத்தில் சிரியா மீது தடைகள் விதிப்பது குறித்து முடிவு செய்யப்படும் எனவும் தெரிவித்தார். (ந)

## நீதிமன்றில் கிலானி



பிரதமர் கிலானி மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் கிலானி நேற்று உயர் நீதிமன்றில் முன்னிலையானார். அவரிடம் நசீர் உல் முல்க் தலைமையிலான 7 நீதிபதிகள் விசாரணை நடத்தினர். அப்போது கிலானி அதிபருக்கு அரசியல் சட்டத்தில் விலக்கு அளிக்கப்பட்டிருந்ததால் நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்றார்.

நீதிபதிகளிடம் கிலானி மேலும் தெரிவித்ததாவது: நீதிமன்றத்தை எப்போதும் மதிப்பவன் நான். 6 ஆண்டு சிறைவாசம் அனுபவித்த நான் நீதிமன்றத்தில் முன்னிலையாக ஒருபோதும் தயங்கியதில்லை. நமது அரசியல் சட்டப்பிரிவு 248ன்படி, அதிபர் மீது வழக்குத் தொடர விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. உலகம் முழுவதுமே நாடுகளின் அதிபர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. சுவிற்ஸர்லாந்திலும் விலக்கு உள்ளதால், அந்தநாட்டு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முடியாது எனக் கூறிவிடுவார்கள். எனவே, நீதிமன்ற உத்தரவுப்படி அந்த நாட்டுக்கு கடிதம் அனுப்பினால், அது நகைச்சுவையாகிவிடும். அதனால்தான் அரசு நடவடிக்கை எடுக்கவில்லை- இவ்வாறு கிலானி கூறினார்.

## வெனிசுலா அதிபர் ஓராண்டே உயிர் வாழ்வார்

புற்றுநோய் பாதித்துள்ள வெனிசுலா நாட்டின் ஜனாதிபதி ஹ்யூகோ சவேஸ் இன்னும் ஓராண்டு கூட உயிர் வாழ மாட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

வெனிசுலா ஜனாதிபதி ஹ்யூகோ சவேஸின் அவருக்கு கியூபாவில் சத்திர சிகிச்சை மூலம் புற்றுநோய்க் கட்டி அகற்றப்பட்டது. சவேஸ் பெருங்குடலின் ஒரு பாகம் மற்றும் புரோஸ்டிரேட் சுரப்பியை பாதித்த புற்றுநோய் தற்போது அவரது எலும்பு உட்பட உடலின் பல்வேறு பகுதிகளுக்கு பரவியுள்ளது என்று அவரது வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.



வடகொரியத் தலைவர் கிம்ஜோங்இல்லின் மறைவுக்குப் பின்னர் முதன்முறையாகத் தென்கொரியா வடகொரியாவுக்கு நேற்று உணவுப் பொருள்களை அனுப்பியுள்ளது.

## இளம் சாதனையாளர் மரணம்; பில்கேட்ஸ் அதிர்ச்சி



உலகின் இளம் மைக்ரோசொப்ட் சாதனையாளர் என்ற பெயர் பெற்ற பாகிஸ்தான் சிறுமி உடல்நலக் குறைவால் பரிதாபமாக மரணமடைந்துள்ளார். இதை அறிந்ததும் மைக்ரோசொப்ட் தலைவர் பில்கேட்ஸ் அதிர்ச்சி அடைந்துள்ளார்.

பாகிஸ்தானைச் சேர்ந்த சிறுமி அர்பா கரீம் ரன்தவா (வயது-16)தனது 9 வயதிலேயே மென்பொருள் துறையில் அபாரமான அறிவுடன் திகழ்ந்ததால் உலகின் பிரபலமான மைக்ரோ சொப்ட் நிறுவனத்தின் 'இளம் சாதனையாளர் விருது' இவருக்கு கடந்த 2004ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

தொடர்ந்து மென்பொருள் துறையில் ஈடுபாடு காட்டி வந்த அர்பாவுக்கு திடீரென உடல் நலக் குறைவு ஏற்பட்டது. கடந்தாண்டு டிசெம்பர் மாதம் 22ஆம் திகதி சிறுமிக்கு வலிப்பு நோய் வந்ததால், உடனடியாக லாகூரில் உள்ள இராணுவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாள். இதை அறிந்த மைக்ரோசொப்ட் தலைவர் பில் கேட்ஸ், சிகிச்சைக்கான செலவு முழுவதையும் தான் ஏற்றுக் கொள்வதாகவும், அமெரிக்காவில் மேல் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்வதாகவும் கூறினார். இந்த நிலையில் சிகிச்சை பயனின்றி கடந்த சனிக்கிழமை அர்பா பரிதாபமாக உயிரிழந்தாள். அர்பானின் திறனை உலகறியச்செய்தவர் பில்கேட்ஸ். அவள் இப்போது மறைந்துவிட்டாலும், உலகில் உள்ளவர்களின் அன்பு அவளுக்கு கிடைத்தது என்கிறார் அவர் தந்தை. (ந)

## சதித்திட்டம் அம்பலம்



தாக்கா,ஜன.21

பங்களாதேஷ் ஆளும் அரசை கவிழ்க்க முன்னாள் ராணுவத்தினர் உட்பட சிலர் சதித்திட்டம் தீட்டியதை அந்த நாட்டு ராணுவம் வெளிப்படுத்தி உள்ளது.

பங்களாதேஷில் பிரதமர் ஷேக் ஹசினா தலைமையிலான அரசு நடக்கிறது. அந்த ஆட்சியைக் கவிழ்க்க சதி நடந்துள்ளது. இதுகுறித்து ராணுவ ஜெனரல் முகமது மசூத் ரசாக் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:

அரசைக் கவிழ்க்கும் முயற்சியில் முன்னாள் ராணுவ அதிகாரிகளுடன் தற்போது ராணுவத்தில் உள்ள சிலர் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பாக முன்னாள் மேஜர் மற்றும் துணைத் தளபதி 2 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில் ஆட்சியைக் கவிழ்க்க சதித்திட்டம் தீட்டியது அம்பலமானது.

மேலும், இதில் தொடர்புள்ள சிலர் தலைமறைவாகியுள்ளனர். முன்னாள் மேஜர் ஜியா மற்றும் சந்தேகிக்கப்படும் தற்போதைய அதிகாரிகள் 16 பேரை ராணுவம் தீவிரமாகக் கண்காணித்து வருகிறது. இது தொடர்பான விசாரணை முழுமையடையும் பட்சத்தில், குற்றவாளிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் - இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பங்களாதேஷ் கடந்த 1990 ஆம் ஆண்டுவரை 15 ஆண்டுகள் ராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

## முகத்தினால் கண்ணாடி உடைக்கும் பெண்கள் !

சீனாவில் முதன்முறையாகப் பெண்களுக்குப் பாதுகாவலர்களுக்குரிய கடுமையான பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. இவர்களுக்கான பயிற்சிகளில் முகத்தினால் கண்ணாடிப் போத்தல்களை உடைக்கும் பயங்கரமான பயிற்சியும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சியில் சீனாவை சேர்ந்த இருபது பெண்கள் முதன்முறையாகக் கலந்து கொண்டு பயிற்சிகளைச் சிறப்பாக முடித்துள்ளனர். இவர்கள் அனைவரும் பல்கலைக் கழகப் பட்டம் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களுக்கான பயிற்சியை சீனாவின் Tianjiao Special Guard Consultant Ltd தொடர்ந்து நான்கு வாரங்கள் வழங்கியிருந்தது. அத்துடன் ஆண் பாதுகாவலர்களை விட பெண்பாதுகாவலர்களுக்கு 100அமெரிக்க டொலர் அதிகமாக ஊதியம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காரணம் பெண்கள் இவ்வாறான கடுமையாக பயிற்சிகளைப் பெறுவது சுலபமான காரியம் அல்ல, இருந்தும் தம்மை இசைவாக்கப்படுத்திக்கொண்டு முழுமையான பயிற்சிகளையும் முடித்திருப்பதனால் ஆகும்.

தற்பொழுது சீனாவில் ஆண் பாதுகாவலர்களுக்கான ஊதியமாக மாதமொன்றுக்கு 1500 அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஈரான் மீது தாக்குதலா?

# அமெரிக்கா, இஸ்ரேலை எச்சரிக்கிறது ரஷ்யா

மாஸ்கோ,ஜன 21

அமெரிக்காவும், இஸ்ரேலும் ஈரானைத் தாக்கலாம் என்று நினைத்தால் இது பெரும் தவறாக அமைந்து விடும். அது பேரழிவுக்கு அழைத்துச் செல்லும் என ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாரோ எச்சரித்துள்ளார்.

ஈரான் அணுகுண்டு தயாரித்து வருவதாகக் கூறி அமெரிக்கா, இஸ்ரேல், பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. அதையும் மீறி ஈரான் அணுகுண்டு தயாரித்து வருகிறது. இதனால் ஈரானை அமெரிக்கா தாக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதே போல் ஈரானின் நிரந்தர எதிரி நாடான இஸ்ரேலும் தாக்குதல் நடத்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்து இருப்பதாகக்கருதப் படுகிறது.

**அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரானைத் தாக்கலாம் என்று நினைத்தால் இது பெரும் தவறாக அமைந்து விடும். அது பேரழிவுக்கே வழி வகுக்கும்**



இது தொடர்பாக ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாரோ தெரிவித்ததாவது;

அமெரிக்காவும், இஸ்ரேலும் ஈரானைத் தாக்கலாம் என்று நினைத்தால் இது பெரும் தவறாக அமைந்து விடும். அது பேரழிவுக்கு அழைத்துச் செல்லும் வாய்ப்பு உள்ளது.

அப்படி ஒரு தாக்குதல் நடந்தால் இது சங்கிலித் தொடர் போல் பல பிரச்சினைகளை ஏற்படுத்தலாம், அது எங்கு போய் முடியும் என்பதையும் சொல்ல முடியாது.

அத்துடன் அகதிகள் பிரச்சினை போன்றவையும் தலை தூக்கலாம். எனவே இரு நாடுகளும் அத்துமீறலில் ஈடுபடாமல் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும். எல்லா விஷயத்துக்கும் ராணுவ நடவடிக்கைகள் தீர்வாக அமையாது என்பதை உணர வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். (ந)

## நியூஸிலாந்தில் பூகம்பம்



இன்வெர்கார் ,ஜன.21

நியூஸிலாந்தின் தென்பகுதியில் நேற்று பூகம்பம் ஏற்பட்டது. இன்வெர்கார்கில் நகருக்கு மேற்கே 203 கிலோமீற்றர் தூரத்தில், பூமிக்கடியில் 18 கிலோமீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்த இந்த நிலநடுக்கம் , ரிச்டர் அளவுகோலில் 6.1 ஆகப் பதிவாகியுள்ளது. எனினும், பசிபிக் சுனாமி எச்சரிக்கை மையம் எச்சரிக்கை எதுவும் விடுக்கவில்லை. மேலும் இந்தப் பூகம்பத்தில் சேதம் ஏற்பட்டதாகவோ உயிரிழப்பு ஏற்பட்டதாகவோ தகவல் வெளிவரவில்லை. (ந)

## நாடு திரும்பும் திட்டம் ஒத்திவைப்பு

இஸ்லாமாபாத்,ஜன.21

பாகிஸ்தான் திரும்பும் தனது திட்டத்தை முஷாரப் ஒத்தி வைத்திருப்பதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

இந்தமாதம் 27 முதல் 30ஆம் திகதிக்குள் கராச்சி நகருக்கு வரப்போவதாக முஷாரப் அறிவித்திருந்தார். இந்த நிலையில், முஷாரப் நாடு திரும்பினால் உடனடியாகக் கைது செய்யப்படுவார் என பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரகுமான் மாலிக் நாடாளுமன்ற மேலவையில் நேற்று முன்தினம் எச்சரித்தார். சிந்து மாநில உள்துறை அமைச்சர் மன்சூர் இதே கருத்தை ஏற்கனவே கூறியிருந்தார்.

இதனையடுத்து இது குறித்து, முஷாரப் தனக்கு ஆதரவு அளிக்கும் அனைத்து பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி பிரமுகர்கள் மற்றும் நண்பர்களுடன் ஆலோசனை செய்தார். இதனையடுத்து தாயகம் திரும்பும் தனது திட்டத்தை ஒத்தி வைத்திருப்பதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

ஏற்கனவே கூறியபடி முஷாரப் இந்த மாத இறுதியில் நாடு திரும்ப மாட்டார். அதேநேரம் கைது நடவடிக்கைக்கு அவர் பயப்படவில்லை என முஷாரப்பின் செய்தித் தொடர்பாளர் முகமது அலி சைப் கூறியுள்ளார். (ந)

## முதற்கொலை

கனடாவின் வான்கூவர் நகரில் 20 வயது மதிக்கத்தக்க நபரொருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டது இந்த ஆண்டின் முதற்கொலையாகப் பொலிஸாரால் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவர் ஓர் உணவகத்தில் சுடப்பட்ட நிலையில் கிடந்தார். இதுவரை இவரைப் பற்றிய தகவல் ஏதும் கிடைக்கப் பெறவில்லை. காவல் துறையினரால் தேடப்படுவோர் பட்டியலிலும் இவரது பெயர் இடம்பெறவில்லை. இந்தக் கொலை குறித்து காவல் துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். (ந)

## வீரர்களின் கல்லறையைத் தோண்டும் அதிகாரிகள்

கவுகாத்தி,ஜன.21

அசாம் மாநிலத்தில் புதைக்கப்பட்ட ஜப்பானிய வீரர்களின் கல்லறையைத் தோண்டும் பணியில் ஜப்பானிய அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 1952ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாம் உலகப் போரின் போது காயமடைந்த 324 பிரிட்டன் படைவீரர்கள் , 143 இந்திய வீரர்கள் , 24 சீன வீரர்கள், 11 ஜப்பான் வீரர்கள் , 4 கனடா மற்றும் தென்னாபிரிக்க வீரர்கள் உட்பட 521 வீரர்கள் இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் அமைந்த பல்வேறு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இதில் சிகிச்சை பயனளிக்காமல் உயிர் இழந்த ஜப்பானிய வீரர்களின் உடல்கள்அசாம் மாநிலத் தலைநகர் கவுகாத்தி அருகே புதைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில் இறந்த உறவினர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவும், மீண்டும் மதச் சடங்குகள் செய்வதற்காகவும் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் சோதனை நடத்தப்பட்டுள்ளது. இதற்காக ஜப்பானின் வெளி விவகாரத்துறையின் துணை இயக்குநர் கென் மியாஷிடா தலைமையிலான மூன்று பேர் அடங்கிய குழு அசாம் மாநில தலைநகர் கவுகாவை சென்றடைந்தனர். அவர்களுடன் மாநில நீதிபதி பத்காக், மற்றும் ஆராய்ச்சி கைரேகை நிபுணர்கள் முன்னிலையில் தொழிலாளர்கள் உதவியுடன் இரவு வரையில் சோதனை நடத்தினர் இருப்பினும் எதுவும் கிடைக்கவில்லை. எனினும்தொடர்ந்து சோதனை நடைபெறும் என ஜப்பான் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளனர். (ந)


## ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
02.05.1947

இறப்பு:
31.01.2011

### அமரர் இரத்தினம் நாகராசா

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் இருந்து
அமுதூட்டி பாசத்தால் பாதுகாத்து
வாழ்க்கைக்கு நல் வழிகாட்டியாய்
திகழ்ந்த எமதன்புத் தெய்வமே
நாமுள்ள வரைக்கும் எம் உள்ளங்களில் உங்கள்
நினைவலைகள் என்றுமே அழியா

அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து நேரிலும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் அவரின் 31 ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றிகூறுவதுடன் இவரின் ஓராண்டு சிரார்த்த தின நிகழ்வு இன்று (21.01.2012) சனிக்கிழமை நண்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் [illegible]

சிவகுரு லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
08 ★ 04 ★ 1949

மறைவு
21 ★ 01 ★ 2008

### அமரர் யோசேப்பு அன்ரனி

அன்பின் ஊற்றாய்
எம்மை அரவணைத்து
ஆளாக்கிய அப்பாவே!
உங்கள் இன்பத் திருமுகம்
என்றும் எம் இதயத்தில்
நிழலாடும்!
ஆண்டுகள் நான்கு
நகர்ந்து மறைந்தாலும்
அன்பு அப்பாவே
உங்கள் அழியாத
நினைவுகள்
அன்றாடம் எம் மனதினில்
நின்றாடும்.

165, [illegible]பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(13280) (45-8-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய எல்லைப் பகுதிகளை கண்காணிக்க செயற்கைக் கோள்

இந்திய நாட்டின் எல்லை பகுதி களைக் கண்காணிக்க உதவும் ஆர்.ஐ.சேட்-1 என்ற செயற்கைக்கோள் எதிர்வரும் மார்ச் மாதம் விண்ணில் ஏவப்பட உள்ளது.

இது குறித்து இஸ்ரோ தலைவர் ராதாகிருஷ்ணன் கூறியதாவது,

பூமியின் அனைத்து சீதோஷ்ண நிலைகளையும் படம் எடுக்கக் கூடிய ஆர்.ஐ. சேட்-1 என்ற செயற்கைக் கோள் எதிர்வரும் மார்ச் மாதம் 15 ஆம் திகதி விண்ணில் ஏவப்பட உள்ளது.

பி.எஸ்.எல்.வி.சி-19 ஏவுவாகனத்தின் மூலம் 1,850 கிலோ எடை கொண்ட இந்த செயற்கைக்கோள் கடந்த ஆண்டே விண்ணில் செலுத்தத் திட்ட மிடப் பட்டது.

உள்ளூர் தொழில் நுட்பத்தில் உருவாக்கப்பட்டுள்ள இந்த தொலையுணர்வு செயற்கைக்கோள், விவசாயத்துக்கு ஏற்ற சீதோஷ்ண நிலைகளை படம் எடுப்பதோடு மட்டுமல்லாமல் நாட்டின் எல்லைப் புறங்களையும் துல்லியமாக படம் எடுக்கக் கூடியது. இதன் மூலம் பயங்கரவாதிகள் ஊடுருவல் போன்றவற்றையும் தடுக்க முடியும்.

எதிர்வரும் மே அல்லது ஜூன் மாதத்தில், ஜி.எஸ்.எல்.வி. எம்.கே.3 மூலம் நான்குதொன் எடை கொண்ட விண் ஓடத்தை விண்ணில் செலுத்தவும் திட்டமிட்டுள்ளோம்.

தகவல் தொடர்பு செயற்கைக்கோளான, ஜிசாட் 10, ஜிசாட் 7, ஜிசாட் 14 ஆகியவற்றையும் இந்த வருடத்தில் விண்ணில் செலுத்த உள்ளோம். - என்றார் அவர். (வ)

# மாறன் சகோதரர்கள் மீதான விசாரணைகளில் மந்தநிலை





**வெளிநாடுகளில் இருந்து சி.பி.ஐ.ஆல் விரைவாக தகவல்களைத் திரட்ட முடியவில்லை**

டில்லி, ஜன. 21

வெளிநாடுகளிலிருந்து தகவல்களைத் திரட்டுவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தால், முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதி மாறன், சன் தொலைக்காட்சி வலையமைப்பு உரிமையாளர் கலாநிதி மாறன் ஆகியோர் மீதான வழக்கு தொடர்பான சி.பி.ஐ. விசாரணையில் மந்தநிலை ஏற்பட்டுள்ளது.

மத்திய தொலைத் தொடர்புத்துறை அமைச்சராக தயாநிதி மாறன் இருந்த போது, மலேசியாவின் மாக்ஸிஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான குளோபல் கம்யூனிகேஷன்ஸ் சர்வீசஸ் ஹோல்டிங் லிமிடெட் மூலமாக ஏர்செல்லின் -ரூ. 7,880 கோடி மதிப்புள்ள- 99.3 சதவீத பங்குகள் வாங்கப்பட்டன.

இது தொடர்பாக முறைப்பாடு தெரிவித்த ஏர்செல் முன்னாள் உரிமையாளர் சிவசங்கரன், தனது நிறுவனத்தை மாக்ஸிஸுக்கு விற்பனை செய்யுமாறு மாறன் சகோதரர்கள் மிரட்டிக் கட்டாயப் படுத்தியதாகத் தெரிவித்தார். அதைத் தொடர்ந்து மாக்ஸிஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அனந்த கிருஷ்ணன், கலாநிதி மாறனுக்குச் சொந்தமான நிறுவ னங்களில் அதிகளவில் முதலீடு செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அனந்த கிருஷ்ணனுக்குச் சொந்தமான ஒஸ்ட்ரோ நிறுவனம் மூலம் சுமார் ரூ. 700 கோடி வரை சன் தொலைக்காட்சி வலையமைப்பில் முதலீடு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப் படுகிறது. இந்த விவகாரம் தொடர்பாக கடந்த 3 மாதங்களுக்கு முன்பு தயாநிதி மாறன், கலாநிதி மாறன், அனந்த கிருஷ்ணன் ஆகியோர் மீது சி.பி.ஐ. வழக்குப் பதிவு செய்து விசா ரித்து வருகிறது.

இந்த வழக்குத் தொடர்பாக மலேசியாவிலும், மோரீசியசிலும் தகவல்களைத் திரட்டு வதிலும், ஆவணங்களைப் பெறுவதிலும் தாமதம் ஏற்பட் டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து பணம் முதலீடு செய்யப்பட்டது தொடர் பான தகவல்களைத் தூதரகம் வழியாக பெற சி.பி.ஐ. அதிகாரிகள் முடிவு செய்துள்ள தாகக் கூறப்படுகிறது.இது தொடர்பான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக சி.பி.ஐ. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (வ)

## பிரதமரின் ஊடக ஆலோசகர் ராஜினாமா



டில்லி, ஜன.21

பிரதமரின் ஊடக ஆலோசகர் ஹரிஷ் கரே நேற்று முன்தினம் ராஜினாமா செய்தார். இதற்கான கடிதத்தை பிரதமர் மன்மோகன் சிங்குக்கு நேற்றுமுன்தினம் அவர் அனுப்பியுள்ளார்.

அதில் தெரிவித்ததாவது:

மீண்டும் பத்திரிகை நிருபராகப் பணி யாற்ற விரும்புவதாகவும், பிரதமர் அலுவலகத்தில் பணியாற்ற தனக்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி என்றும் குறிப்பிட் டுள்ளார். கடந்த 2009 ஆம் ஆண்டு இந்த பதவியில் அவர் நியமிக்கப்பட்டார். அதற்கு முன்பாக, 'இந்து, டைம்ஸ் ஒப் இந்தியா ஆகிய.பத் திரிகைகளில் பணியாற்றி னார். பிரதமர் அலுவலகத் தகவல் தொடர்பு ஆலோச கராக ஆங்கில செய்தி தொலைக் காட்சியில் பணி யாற்றும் பங்கஜ் பச்சோ ரியை அரசு நியமித்ததைத் தொடர்ந்து, கரே ராஜினாமா செய்துள்ளார். (வ)



குஜராத்தின் சூரத் மாவட்டம் வல்சாத் கிராமத்தில் நடைபெற்ற சத்பவனா நிகழ்வில் கலந்து கொள்ள வந்த மாநில முதல்வர் நரேந்திரமோடியை முஸ்லிம் பிரமுகர்கள் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர். (வ)

# கப்பலில் மீட்கப்பட்ட இந்தியர் சென்னைக்கு



கப்பலில் மீட்கப்பட்ட ஒருவரின் உறவினர் அவரை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறார்.

கடலில் மூழ்கிய இத்தாலி சொகுசுக் கப்பலில் இருந்து மீட்கப்பட்ட 9 தமிழர்கள் விமானத்தில் நேற்று முன்தினம் இரவு சென்னையை வந்தடைந்தனர்.


இத்தாலி நாட்டு சொகுசு கப்பல் ஒன்று சில தினங்களுக்கு முன்பு பாறையில் மோதி தரை தட்டி மூழ்கியது. இந்தக் கப்பலில் மொத்தம் 4 ஆயிரம் பேர் பயணம் செய்தனர்.

பொலிஸார் மேற்கொண்ட மீட்புப் பணி காரணமாக அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டாலும் 40 பேர் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. 200 இற்கும் மேற்பட்ட இந்தியர்கள். 10 பேர் தமிழகத் தைச் சேர்ந்தவர்கள்.

மேலும், இதில் மும்பையைச் சேர்ந்த ஒருவரைத்தவிர இந்தியாவைச் சேர்ந்த ஏனைய அனைவரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். இவர்களில் தமிழகம் மற்றும் புதுச் சேரியைச் சேர்ந்த 8 பேர் நேற்று முன்தினம் சென்னைக்குத் திரும்பினர். விமான நிலையம் வந்த அவர்களை உறவினர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

அவர்களை மத்திய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் அகமது வரவேற்றார். அவர்கள் 8 பேரும் சென்னையில் இருந்து ரயிலில் திருச்சி அனுப்பிவைக்கப் பட்டனர். (வ)

# தலைமைச் செயலக கட்டத்தில் மாற்றம் செய்வதற்குத் தடை



சென்னை, ஜன.21

சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் கட்டப்பட்ட புதிய தலைமைச் செயலகக் கட்டடத்தில் மாற்றங்கள் செய்வதற்கு சென்னை உயர் நீதி மன்றம் இடைக்காலத்தடை விதித்தது.

சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் கட்டப்பட்டுள்ள புதிய தலைமைச் செயலகக் கட்டடத்தை சிறப்பு மருத்துவமனையாக மாற்ற தமிழக அரசு முடிவு செய்தது. இதை எதிர்த்து, சட்டத்தரணி ஆர்.வீரமணி மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்தக் கட்டடத்தை மருத்துவமனையாக மாற்ற வேண்டும் என்றால் சுற்றுச் சூழல் அமைச்சகத்தின் அனுமதி பெற்றிருக்க வேண்டும். ஆனால், அது குறித்து எந்த வித நடவடிக்கையும் எடுக்காமல் அரசு தன்னிச்சையாக இவ்வாறு அறிவித்தது என்று சட்டத்தரணி தன் மனுவில் குறிப்பிட்டிந்தார்.

இந்த மனுவின் மீது இன்று சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிபதிகள் டி.முருகேசன், பிபிஎஸ் ஜனார்த்தன ராஜா ஆகியோர் அடங்கியகுழுமுன் விசாரணை நடைபெற்றது. இதில் நீதிபதிகள் புதிய தலைமைச் செயலகக் கட்டடத்தின் வடிவமைப்பை மாற்றம் செய்வதற்கு தாற்காலிகத் தடை விதித்து உத்தரவு பிறப்பித்தனர். மேலும், இந்த மனுவின் மீது தமிழக அரசு பதில் அளிக்குமாறும் உத்தரவிட்டனர். (வ)

## பிரசாரத்தில் களமிறங்கும் ஹஸாரே குழு

ஐந்து மாநில தேர்தல் பிரசாரத்தில் குதிப்பதில்லை என்ற முடிவை எடுத்திருந்த அன்னா ஹஸாரே குழு தற்போது திடீரென தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளது. பாபா ராம்தேவின் ஆசிரமம் அமைந்துள்ள ஹரித்வாரிலிருந்து இன்று உ.பி. மாநில சட்டசபைத் தேர்தல் பிரசா ரத்தை அன்னா குழு ஆரம்பிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பலமான லோக்பால் பிரேரணையை வலியுறுத்தி தொடர் போராட்டங்களை நடத்தி வந்தார் அன்னா. அதற்கு ஆரம் பத்தில் நல்ல வரவேற்பு இருந்தது. ஆனால் பின்னர் அந்தக்குழுவினரில் பலர் குழப்பமான நிலைப்பாடுகளை எடுத்ததாலும், அவர்கள் மீது சரமாரியாக பல்வேறு முறைப்பாடுகள் எழுந்ததாலும் அன்னா குழுவின் போராட்டங்களுக்கு மக்கள் மத்தியில் ஆதரவு குறைய ஆரம்பித்தது. (வ)

# கரை ஒதுங்கிய திமிங்கிலம்

தூத்துக்குடிக் கடலில் திமிங்கிலம் ஒன்று நேற்று முன்தினம் அதிகாலை கரை ஒதுங்கியுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் வேம்பார் அருகே உள்ள பச்சையாபுரம் பகுதியைச் சேர்ந்த நாகராஜ், செல்வம், பெரிய சாமி, செந்தூர் பாண்டியன் ஆகியோர் நேற்று முன்தினம் அதிகாலை கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது கடற்கரை பக்கம் பெரிய உருவம் மிதப்பதைக் கண்டனர். அருகில் சென்று பார்த்தபோது அது ஆழ்கடல் பகுதியில் மட்டுமே வாழும் திமிங்கிலம் எனத் தெரிந்தது. இறந்த நிலையில் கிடந்த அந்தத் திமிங்கிலம் சுமார் 6 டன் எடையும் 12 மீட்டர் நீளமும் இருந்தது. இதுகுறித்து தகவலறிந்த தூத்துக்குடி வனச்சரகர், வனக்காப்பாளர் மற்றும் ஊழியர்கள் விரைந்து சென்று கிரேன் மூலம் திமிங்கிலத்தை கரைக்குக் கொண்டு வந்தனர். (வ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட No.1 பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 26.01.2012 வியாழக்கிழமை காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

தொடர்பு:

1. நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். 0212226944
2. நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி. 0776225944
3. சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை 0778996085

(13302) (2-7-9)

## O/Level இன் பின்னர் Spoken English

அரச, தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவரா ?
ஆங்கிலம் பேசும் திறனில் ஆரம்பநிலையில் உள்ளவரா ?
சாதாரண, உயர்தர கல்வியை தமிழ் மொழியில் பயின்றவரா ?
வெளிநாட்டு உயர்கல்வி, வேலைவாய்ப்பிற்காக காத்திருப்பவரா ?
உள்நாட்டு வேலைவாய்ப்பு, பதவி உயர்வை எதிர்பார்த்திருப்பவரா ?
ஆங்கிலம் ஓரளவு தெரிந்திருந்தும் பேசுவதற்கு தயங்குபவரா ?
ஆமெனில்...

### இங்லிஷ்ல பேசலாம் ஈஸியா

Speak Easyல் இன்றே இணையுங்கள்

புதிய பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்

Join **Speak Easy** ®
centre for better english

**CSC - ASIAN COMPUTERS**

| | | |
|---|---|---|
| 2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் | கொடிகாமம் வீதி, நெல்லியடி | 230, கண்டி வீதி, சாவகச்சேரி |
| T.P : 021-222 5677 | T.P : 021-2262399 | T.P : 021-2270267 |

## நினைவஞ்சலிகள்

13ஆம் ஆண்டு — 8 ஆம் ஆண்டு





**மூ.சின்னத்துரை**
திதி: திருதியை (தேய்பிறை)

**சி.புவனேஸ்வரி**
திதி: அபரபக்க சதுர்த்தசி (வளர்பிறை)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
இன்று வானுலகில் தெய்வமாகிவிட்ட
எங்கள் குடும்பத்தின் குலவிளக்குகளே!
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு எங்கு சென்றீர்கள்!
வையகத்தில் வாழும்வரை உமை மறவோம் நாம்.

நி.மு: இன்னாவத்தை, கொல்லங்கலட்டி.
த.மு: சில்லாலை, பண்டத்தரிப்பு.

மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(13268) (6,7,10)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

வைத்திய கலாநிதி **மரிசலீன்பிள்ளை மரியதாசன்**



(சுகாதார வைத்திய அதிகாரி (M.O.H) யாழ். மாநகரசபை, சமாதான நீதிவான்)

*மண்ணில் : 12-07-1942*
*விண்ணில் : 22-12-2011*

அன்பின் திருவுருவாய் அனைவருக்கும் அனைத்திலும் வழிகாட்டியாய், வாழும் தெய்வமாயிருந்த தந்தையின் பிரிவின் 31ஆம் நாள் நினைவுத் திருப்பலி (21.01.2012 சனிக்கிழமை காலை 6 மணிக்கு சுண்டுக்குளி புனித யோவான் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். எமது தந்தையின் திடீர் மறைவின் போது, அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்திய நிபுணர்கள், பேராசிரியர்கள், முன்னாள் துணைவேந்தர், முன்னாள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் அரசாங்க அதிகாரிகள் வங்கி அதிகாரிகள், மதகுருமார், கன்னியாஸ்திரிகள், பொதுமக்கள் நண்பர்கள், முன்னாள் மேயர், முன்னாள் ஆணையாளர், மாநகர சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கும், இரங்கல் கூட்டத்தை சிறப்பாக ஒழுங்கு செய்த மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், இரங்கல் உரையாற்றிய மேயர், ஆணையாளர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் (R.D.H.S) வைத்திய அதிகாரிகள், பாடசாலைச் சுகாதார வைத்திய அதிகாரி, சுகாதார சேவை உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார பொறியியல் பிரிவினர் மற்றும் குடும்பநல பணியாளர்கள், தொண்டர்கள், ஊழியர்கள் ஆகியோர் மறைவின்போது அவருக்கு செலுத்திய கௌரவத்திற்காகவும், அன்பிற்காகவும் நன்றி கூறுகின்றோம். மேலும் அவருக்கு மலர்வளையம் சாற்றியோர், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டோர், பத்திரிகைகளில் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோர், நாட்டின் நெடுந்தொலைவிலிருந்து வந்த நண்பர்கள் இறுதித்திருப்பலி நிறைவேற்றிய குருக்கள், திருப்பலியில் பங்குபற்றி அவருக்காக பிரார்த்தித்த அனைத்து அன்புள்ளங்கள், இறுதி யாத்திரையில் பங்கு பற்றிய குடும்பநல பணியாளர்கள், தொண்டர்கள் மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள், உடனிருந்து உதவியோர் ஆகியோருக்கும் அவர் நோயுற்றவேளை சிகிச்சை அளித்த வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"ஆவே மரியா," 72, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (13249) (6,7,10)

அவரின் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள்,

## 2012 Chemistry பிரத்தியேக வகுப்பு

2012/2013 Batch English/ Tamil Medium Physical Chemistry, organic Chemistry Inorganic Chemistry, கடந்தகால வினாக்கள் அனுபவம் மிக்க ஆசிரியரால் (B.Sc,M.Sc (Chemistry)) தனியாகவோ குழுவாகவோ கற்பிக்கப்படும்.

தொடர்பு:- 0776038913

## தவறிவிட்டது

ஐங்கரன் வீதி, சுதுமலை தெற்கு, மானிப்பாய் எனும் முகவரியுடைய நகுலேந்திரன் காண்டீபன் என்பவரின் தே.அ.அ. (953180782 V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்: 077 4656331 (13292) (45-7-9)

## நாய்க் குட்டி விற்பனைக்கு

Great dane, Doberman, German Shepherd, நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர். (13301) (6-45)

## கோழி இறைச்சி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் இறைச்சி நியாயமான விலையில் விற்கப்படும். காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,
இல. 19, முருகேசர் லேன், நல்லூர். (13094) (6-7-45)

## வீடு விற்பனைக்கு

குருசோ வீதியில் மேல்மாடி வீடும், 5ஆம் குறுக்குத் தெருவில் 2 அறைகள் கொண்ட வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 021 222 8363,
072 9816327 (13233) (6-9-45)

## தவறிவிட்டது

இடைக்குறிச்சி மேற்கு, வரணியைச் சேர்ந்த ஆழ்வாப்பிள்ளை சந்திரசேகரம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (470310022 V) இராணுவ அடையாள அட்டை என்பன தவறவிடப்பட்டன. கண்டவர்கள் கீழ் காணும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
(13282) தொடர்பு: 0771691350

## T Vகள் மலிவு விற்பனை

யாழ்நகரில் எங்கும் கிடைக்காத மிக மிக மலிவு விலையில் Japan Sony Waga Flat T Vகள்
21"-10000/=, 25"-12500/=, Poineer amp-10000/=, குளிர் சாதனப்பெட்டிகள் - 20000/=, CD-Casstte-Radio- 2000/=
தொடர்புகளுக்கு: 077 0440570 - 077 9712958 (அப்பளம்)
சொனி றேட்ற்சென்றர் (கொமர்சல் வங்கி முன்பாக 56, K.K.S. வீதி, சுன்னாகம். (13290) (45--)

## வீடு விற்பனைக்குண்டு

கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளியில் நல்ல நிலையில் உள்ள 5 அறைகள், குளியல் அறை, கிணறு, சுற்றுமதிலுடன் கூடிய 1பரப்பு 3 குளி 12 Inch காணி விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை
தொடர்புகளுக்கு: 077 9862916,
077 6009630 (13270) (7-6-45)

## பிளாஸ்ரிக் வார்ப்புத் தொழிலகம்

சகலவித மோட்டார் வாகனங்களின் பிளாஸ்ரிக் பொருள்களும் சிறந்த தொழில் நுட்ப முறையில் செய்து கொடுக்கப்படும்

1. ஸ்பிறே பெயின்ரிங்
2. பிளேற்றிங் (மொப்பிங்)
3. கண்ணாடி வகைகள் பொலிசிங்
4. பைவர் மோல்டிங்

வரலட்சுமி பிளாஸ்ரிக் வார்ப்புத் தொழிலகம்
286/2, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொடர்புக்கு: 0773512591

## பெயர் மாற்றம்

முழுப் பெயர்: பிரான்சிஸ் டிலான் ஆகிய நான் விவேகாநந்த நகரில் வசித்து வருகின்றேன். எனது முன்னைய பெயர் பிரான்சிஸ் டிலானி இதனை இன்றில் இருந்து **பிரான்சிஸ் டிலான்** என்பதனை அறியத்தருகின்றேன்
பி. டிலான்
இல. 215, விவேகாநந்த நகர் கிழக்கு, கிளிநொச்சி.

## மணமகள் தேவை

வெளிநாட்டில் குடியுரிமையுள்ள யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு 35 வயதிற் குட்பட்ட அழகிய மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு :
001 6475322773 அல்லது
nicetalk2012@yahoo.com (12959)

## கோழிக் குஞ்சு விநியோகம்

தரமான No- 1 புறொயிலர் கோழிக் குஞ்சுகள் (27.01.2012) அன்று விநியோகம் செய்யப்படும். பெற்றுக் கொள்ள விரும்புவோர் பதிவுகளை மேற்கொள்ளவும்.
"சித்தி பாம் ரேடேர்ஸ்"
ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு.
T.P.No. 021 222 1158 (13283) (2-7-9)

# இலங்கையரின் சடலம் மீட்பு

இந்திய போபால் மவுலானா அசாத் தொழிநுட்ப கல்வியகத்தில் கல்வி கற்றுவந்த இலங்கை மாணவன் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

குறித்த இளைஞன் தான் தங்கியிருந்த விடுதி அறையில் இவ்வாறு தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக நேற்றுக் காலை மீட்கப்பட்டதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இரண்டாம் வருட பொறியியல் பீடத்தில் கல்வி கற்று வந்த 20 வயதுடைய இலங்கை இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவருடைய சடலம் அறைக்குள்ளே தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தது. அறை உள்ளே மூடப்பட்டிருந்தது.

எனினும் அவரின் மரணம் குறித்து எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்று கமலா நகர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.எஸ். பதோரியா தெரிவித்தார். (வ)

## கட்டடம் வாடகைக்கு



யாழ். நகரிலிருந்து சுமார் 50 மீற்றர் தூரத்தில் ஜனசக்தி இன்சூரன்ஸ்இற்கு அருகில், கீழ்ப்பகுதி 600 சதுர அடியும், மேல் தளம் 800 சதுர அடியும் கொண்ட, வாகனத் தரிப்பிட வசதிகொண்ட புதிய கட்டடம் வாடகைக்கு உண்டு. தனியாருக்கு மட்டுமன்றி நிறுவனங்கள், கம்பனிகளுக்கும் உகந்தது

தொடர்புக்கு: 077 7274369 (13304) (45-6-6)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஓய்வுபெற்ற ஆசிரியை
செல்வி யோகேஸ்வரி வீநாசித்தம்பி
அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடை இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
அதிபர், ஆசிரியர்கள்
யா/வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை (அ/7898) (45--)

## மரண அறிவித்தல்



**சின்னையா வேலாயுதம்**

அராலி வடக்கு, செட்டியார் மடத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா வேலாயுதம் 15.01.2012 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், கருணாகரன், கங்காதரன், தயாபரன் ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2012) சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அராலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி வடக்கு,
செட்டியார் மடம்,
வட்டுக்கோட்டை. (13270) (45 6 7)

தகவல்:
சசி காஞ்சனா
அருளானந்தம் தீபன்,
(பிரான்ஸ்)

## ஈராண்டு நினைவலைகள்



மண்ணில்
12★10★1952
விண்ணில்
11★02★2010

திதி: திரயோதசி -21.01.2012

அமரர்
**சதாசிவம் தில்லைநாதன்**

ஆண்டுகள் இரண்டு ஆனபின்னும்
ஆறவில்லை எம் துயரம்
பூமியின் பொறுமையே
புண்ணியத்தின் பெருமகனே
அன்புடன் இணைந்த
கணவனாய், தந்தையாய்,
சகோதரனாய், மைத்துனனாய், மாமனாய்,
பெரியப்பாவாய், சித்தப்பாவாய்,
எம்மையெல்லாம் அரவணைத்த
அன்புத் தெய்வத்தின்
சிரித்த முகம் காணாது
ஈராண்டாய் தவிக்கின்றோம்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(13240) (2-6-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செனட் சபையால் இனப்பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வுகாண முடியாது

**தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமாயின் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்கிறார் இலங்கையின் சிரேஷ்ட சட்டத்தரணி கொமின் தயாசிறி.**

கொழும்பு,ஜன.21

செனட் சபை ஒன்றை அமைப்பதன் மூலம் நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என்று இலங்கையின் சிரேஷ்ட சட்டத்தரணி கொமின் தயாசிறி தெரிவித்துள்ளார்.

தற்காலிக அடிப்படையில் செனட் சபையை அமைக்க முடியுமே தவிர நிரந்தரமான தீர்வுத் திட்டமாக செனட் சபை அமையாது என்று அவர் தெரிவித்தார்.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமாயின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படாது என்றும், 13 ஆம் திருத்தச் சட்டத்துக்கு அப்பாலான தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படும் என்றும் அரசு முன்னுக்கு பின் முரணான நிலைப்பாடுகளை வெளிப்படுத்தி வருகின்றது என்று அவர் குறிப்பிட்டார்.

செனட் சபை அமைப்பதன் மூலம் மற்றுமொரு குழு அரசியல்வாதிகளின் அதிகாரம் வலுப்பெறுமே தவிர ஆக்கபூர்வமான தீர்வாக அமையாது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் உள்ளமையால், அரசு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை ரத்து செய்ய எவரையும் எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச)

# பிரதேச சபை உறுப்பினர்களுக்கு மேர்வின் தரப்பு கொலை மிரட்டல்

கொழும்பு,ஜன.21

களனி பிரதே சபையின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு எதிராக அமைச்சர் மேர்வின் சில்வா தரப்பினர் கொலை மிரட்டல் விடுத்து வருவதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பாதாள உலகக் குழுக்களைப் பயன்படுத்தி கொலை செய்யப் போவதாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று களனிப் பிரதேச சபையின் உறுப்பினர் அசித மடவல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸ் மா அதிபருக்கு மின் அஞ்சல் மூலம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த முறைப்பாடு குறித்து விரிவான விசாரணை நடத்துமாறு பொலிஸ் மா அதிபர் களனி பிரதேசத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

பிரதேச சபை உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தும் ஒப்பந்தம், ஹிக்கடுவ, சிலாபம் மற்றும் கடுவெல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பாதாள உலகக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று களனி பிரதேச சபையின் உறுப்பினர் அசித மடவல குறிப்பிட்டுள்ளார்.

பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் ஏற்கனவே களனி பிரதேசத்திற்கு வருகை தந்துள்ளதாகவும் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் அவர் பொலிஸ் மா அதிபரிடம் கோரியுள்ளார். (ச)


# பதவி உயர்வு வழங்குமாறு உத்தரவு

**2007 ஆம் ஆண்டு பதவி உயர்வு வழங்கப் படாத பொலிஸ் சார்ஜன்ட்டுகள் சிலர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தொடர்ந்தே நீதிமன்றம் உத்தரவிட்டது.**

கொழும்பு,ஜன.21

634 பொலிஸ் சார்ஜன்ட்டுகளை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் உப பொலிஸ் பரிசோதகர்களாக பதவி உயர்த்துமாறு பொலிஸ் மா அதிபர் மற்றும் அரச சேவை ஆணைக்குழு என்பவற்றுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டு பதவி உயர்வு வழங்கப்படாத பொலிஸ் சார்ஜன்கள் சிலர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை தொடர்ந்து விசாரித்த நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (ச)



நாரஹேன்பிட்டியவில் நிர்மாணிக்கப்படவுள்ள இலங்கை மின்சார சபை தலைமை அலுவலகத்துக்கான அடிக்கல்லை மின் சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நட்டுவைத்துள்ளார்.

# மோசடியில் ஈடுபட்டோர் குறித்து விசாரணை

கொழும்பு,ஜன.21

அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி மோசடிகளில் ஈடுபட்ட நபர்கள் குறித்து பாதுகாப்பு அமைச்சு விசாரணைகளைஆரம்பித்துள்ளது.

அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி காணி அபகரிப்பு, கப்பம் பெறல் உள்ளிட்ட பல்வேறு ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் குறித்து விசாரணை நடத்தும் பொறுப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எந்தவொரு சந்தேக நபரும் தப்பிச் செல்வதற்கு இடமளிக்கக்கூடாது என்று பொலிஸ் மா அதிபர் என். கே. இளங்கக்கோன் உத்தரவிட்டுள்ளார்.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் பொதுமக்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி மோசடிகளில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# ஹைகோப் வழக்கின் தீர்ப்பு பெப்ரவரி 28

கொழும்பு,ஜன.21

சரத் பொன்சேகா மீது தொடரப்பட்டுள்ள மற்றுமொரு வழக்கான ஹைகோப் வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் பெப்ரவரி 28 ஆம் திகதி வழங்கப்படும் என்று கொழும்பு மேல் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இலங்கை இராணுவத்துக்கான ஆயுதக் கொள்வனவின் போது, ஹைகோப் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் ஊழல்கள் தொடர்பிலேயே இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ராஜரட்ட வைத்தியபீடம் 23இல் திறக்க நடவடிக்கை

கொழும்பு,ஜன.21

ராஜரட்ட பல்கலைக்கழகத்தின்வைத்தியபீடத்தை நாளைமறுதினம் திங்கட்கிழமை திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் விடுதியில் உள்ள மாணவர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை நான்கு மணிக்கு முன்னர் விடுதிகளுக்கு சமுகமளிக்குமாறு பல்கலைக்கழக துணைவேந்தர் கே.ஏ.நந்தசேன தெரிவித்துள்ளார்.

ராஜரட்ட பல்கலைக்கழக வைத்திய பீடத்தில் ஏற்பட்ட கலவரம் .காரணமாக கடந்த 9 ஆம் திகதி முதல் பீடம் மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தொழிற்சங்க போராட்டம் கைவிடப்பட்டது

கொழும்பு,ஜன.21

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பணிபுரியும் அரச வைத்திய அதிகாரிகள் நேற்று மேற்கொள்ள இருந்த சுழற்சி முறையிலான தொழிற்சங்க போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பணிபுரியும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் அனைத்து வைத்தியர்களும் நேற்று காலை 8 மணி தொடக்கம் இன்று காலை 8 மணிவரை தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட தீர்மானித்துள்ளதாக நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# அதிவேக நெடுஞ்சாலையில் மேலும் இரண்டு பஸ்கள்

கொழும்பு,ஜன.21

இலங்கையின் அதிவேக நெடுஞ்சாலையில்நேற்று முதல் மேலும் இரண்டு பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன என்று இலங்கை போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது.

மாலை 6 மணி மற்றும் 7 மணிக்கு எல்பிட்டியிலிருந்து புறப்படும் இந்த பஸ்கள் மகரகம வரை தமது பயணத்தை மேற்கொள்ளும் என்று போக்குவரத்துச் சபையின் தலைவர் எம். டீ. பந்துசேன தெரிவித்தார்.

இதேவேளை இந்த பஸ்கள் மகரகமவுக்கும் காலிக்கும் இடையிலான போக்குவரத்திலும் ஈடுபடும் என்று அவர் தெரிவித்தார்.

இதுவரையில் அதிவேக நெடுஞ்சாலையில் 6 பஸ்கள் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளன.

இந்த வீதி ஊடாக ஒவ்வொரு 40 நிமிடத்திற்கும் காலிக்கும் மகரகமவுக்கும் இடையிலான பஸ்சேவை இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் வாகனங்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் தொடர்ந்தும் கல்லெறி வீச்சு நடந்து வருகிறது.

இவ்வாறு கல்லெறியும் விஷமிகளைக் கைதுசெய்ய பொலிஸார் சோதனைகளை அதிகரித்துள்ளனர். (ச)

# புலம்பெயர் பதம் எனக்குப் பிடிக்காது

**வெளிநாடுகளில் வாழ்ந்துகொண்டு நாட்டுக்கு எதிராக சதித் திட்டம் தீட்டும் தரப்பினர் தங்களை புலம் பெயர் இலங்கையர் என அடையாளப்படுத்திக் கொள்வதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.**

கொழும்பு,ஜன.21

புலம்பெயர் என்ற பதம் தனக்கு பிடிக்காது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மிஹிந்தலையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் வலுவான வலையமைப்பு ஒன்று உலகின் பலநாடுகளில் பரவி வருவதாகக் அவர் குறிப்பிட்டுள்ளார். பல்வேறு வழிகளில் நாட்டுக்கு குந்தகம் ஏற்படுத்தும் முயற்சியில் இந்தப் புலி ஆதரவாளர்கள் செயற்பட்டு வருகின்றனர் என்று அவர் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் வாழ்ந்துகொண்டு நாட்டுக்கு எதிராக சதித் திட்டம் தீட்டும் தரப்பினர் தங்களை புலம்பெயர் இலங்கையர் என அடையாளப்படுத்திக் கொள்வதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# சட்டவிரோத மது விற்பனை

கொழும்பு,ஜன.21

சட்டவிரோதமாக மது உற்பத்தி மற்றும் விற்பனை செய்து வந்த நான்கு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்த நபர்கள் வட மத்திய மாகாணம் உட்பட நாட்டின் பல பாகங்களிலும் மது விற்பனையில் ஈடுபட்டுள்ளனர்.

சீகிரிய பிரதேச வனப் பகுதியில் மது விற்பனையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது சீகிரிய பொலிஸாரால் இவர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சட்டவிரோத மது உற்பத்தி மற்றும் விற்பனையில் அரசியல்வாதி ஒருவரும் தொடர்புபட்டுள்ளதாக முதல் கட்ட விசாரணையின்போது தெரிய வந்திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி புஷ்பா கணேசலிங்கம்

(ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி)



வேலணையைப் பிறப்பிடமாகவும் மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஷ்பலதிகவதி (புஷ்பா) கணேசலிங்கம் (ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி) நேற்று (20.01.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் (ஓய்வுபெற்ற அதிபர், பிரபல சித்த வைத்தியர், வேலணை) - உருக்மணி (ஓய்வு பெற்ற ஆசிரியர்) தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கணேசலிங்கம் (ஓய்வுபெற்ற கொத்தணி அதிபர், கைதடி) அவர்களின் அன்பு மனைவியும், வளர்மதி (கனடா), கலாநிதி அருள் (முன்னாள் விரிவுரையாளர் சட்டபீடம், கொழும்பு பல்கலைக்கழகம் Solicitor, லண்டன்), கலாநிதி சிவமதி (பீடாதிபதி, விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்), வைத்திய கலாநிதி அருள்மொழி (குழந்தை வைத்திய நிபுணர், யாழ்.போதனா வைத்தியசாலை), கலாநிதி அருள்ராஜ் (முன்னாள் விரிவுரையாளர் விஞ்ஞானபீடம், யாழ்.பல்கலைக்கழகம், லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், விவேகானந்தன் (கனடா), சுகுணா (லண்டன்), சிவச்சந்திரன் (உதவித்திட்டமிடல் பணிப்பாளர், யாழ்.பிரதேச செயலகம்), வைத்திய கலாநிதி ஜானகி (உணர்வழியியல் நிபுணர், யாழ்.போதனா வைத்தியசாலை), கலாநிதி பார்பரா (லண்டன்) ஆகியோரின் மாமியும், அர்ச்சனா, ஆராதனா, யதுஷன், அர்ச்சுனன், அஸ்மிதா, அஸ்வினி, அபிலாஷா, ஹர்ஷன் ஆகியோரின் பேர்த்தியும், புஷ்பராஜவதி (பேபி), பேராசிரியர் சிவச்சந்திரன் (முன்னாள் கலைப்பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற புஷ்பரத்னவதி மற்றும் இராசமலர் (சோதி, அவுஸ்திரேலியா), சிவமலர், காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் ஜெயச்சந்திரன் ஆகியோரின் மூத்த சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 72/27, பணிக்கர் ஒழுங்கை, பலாலி வீதி, திருநெல்வேலி இல்லத்தில் நாளை (22.01.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று கொக்குவில் இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**பிள்ளைகள்.**

72/27, பணிக்கர் ஒழுங்கை, பலாலி வீதி, திருநெல்வேலி. (13296)(2-6-7) 'சிவகிரி', மீசாலை வடக்கு, மீசாலை.


## AFTER GCE O/L & A/L WHAT NEXT?

**STUDY IN UK**
*Spot Admission!*

காலம்: 22nd & 23rd of January 2012 : 10.00a.m. - 1.00p.m.

இடம்: **Exponet** (Branch Office) No. 197 Arasady Road,Jaffna

உங்கள் London செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்

## இலவச கருத்தரங்கும் உடனடி அனுமதிகளும்

கடந்த வருட இறுதியில் விசா கிடைத்து பயணமான மாணவர்களில் சிலர்



Sasivathana POINTPEDRO, Praveena KAITHADY, Elayaruby VAVUNIYA, Athavan JAFFNA, Atputharajah BATICALOA, Janagan COLOMBO, Kabilthev VAVUNIYA, Nitharshan KOKUVIL, Vijenthiran VAVUNIYA, Thushyanthan COLOMBO, Sinthujan KAYTS, Senthuran URELU, Kabilan KOKUVIL, Kabilraj CHANKANAI, Kajakoban VALVEDDYTHURAI, Kajanany WATTALA



Arulnesan COLOMBO, Jathishangar KOKUVIL, Antony MATHAGAL, Anushajini KARAVEDDY, Aravinthan PULOLY, Kajanthan COLOMBO, Kalaivanan VAVUNIYA, Kalpana VAVUNIYA, Ketheesan KARAINAGAR, Logeshwaran COLOMBO, Nirojan KONDAVIL, Niruthika VADDUKKODAI, Nitharshini TRINCO, Nithyadarsan VAVUNIYA, Pathmatheepan COLOMBO, Rajmohan NELLIADY, Rakeesan URUMPIRAI, Ramya MALLAKAM, Rizmy KANDY, Rushanth JAFFNA



Gobiraj JAFFNA, Isuru COLOMBO, Jegarajiny INUVIL, Anusha JAFFNA, Anushan JAFFNA, Anbalagan COLOMBO, Sathurna KAITHADY, Sathveehan JAFFNA, Sayanthan KONDAVIL, Sowmya URUMPIRAI, Srivithyakaran NELLIADY, Subakalyani THOLPURAM, Subasini KARAVEDDY, Tharaneetharan COLOMBO, Thargika PALLAI, Tharshika ANAIKODAI, Thavalingan PULOLY, Thushyandan JAFFNA, Thuvarahan TRINCO, Vishnumohan URUMPIRAI

**GCE(O/L)** தகமை போதுமானது

பதிவுகளுக்கு

Colombo-011 7 555511/14 Fax-011 7 555517
Jaffna-021 7538395 / 021 2227230

EXPONET Overseas Consultants

Head Office : 379 - ½, Galle Road, Colombo 06.
Jaffna Branch : 197,Arasady Road, Jaffna.
(Between Kantharmadam Junction & Hindu Ladies College)
London Branch : 56, The Gardens Harrow Middlesex, HA1 4EY, UK.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம்,வவுனியா மாவட்டங்களில் மேகக்கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும் ஏனைய மூன்று மாவட்டங்களிலும் வானம் தெளிவாகக் காணப்படும்.

## ஒழுங்கை புனரமைப்பு

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட மீசாலை பத்தினியார் துரவு ஒழுங்கை பத்து லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

வடக்கு கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் (நெல்சிப்) வடக்கு கிழக்கு மக்களுக்கான 'கமநெகும', உள்ளூர் பிரதேச கிராமிய சிறுநகர அபிவிருத்திக்கான ஆரம்பம் என்னும் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ந-207)

# முப்பெரும் ஆண்டுவிழா நாளை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்

### காலையும் மாலையும் அரங்குகள்

யாழ்ப்பாணம், ஜன.21

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் , புனர்வாழ்வுக் கல்வி அபிவிருத்தி நிதியம் ஆகியன இணைந்து நடத்தும் முப்பெரும் ஆண்டுவிழா நாளை ஞாயிறு காலை 8.30 மணிமுதல் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் காலை அரங்கு காலை 8.30 மணிக்கும் மாலை அரங்கு பிற்பகல் 1.30 மணிக்கும் நடைபெறும்.

காலை அரங்கில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், இலங்கை கல்வி அமைச்சின் ஓய்வு நிலை மேலதிக செயலாளர் எஸ்.தில்லை நடராசா யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி ஆகியோர் கலந்து கொள்வர்.

மாலை அரங்கில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைப் பேராசிரியர் கலைவாணி இராமநாதன் , புனர்வாழ்வுக் கல்வி அபிவிருத்தி நிதியத் தலைவர் ஆர்.எம்.நாகலிங்கம், யாழ். பல்கலைக்கழகத் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், கொழும்பு பல்கலைக்கழக முன்னாள் கல்விப்பீடாதிபதி பேராசிரியர் சோ.சந்திரசேகரன், இலங்கை கல்வி அமைச்சின் ஓய்வு நிலை மேலதிகச் செயலாளர் எஸ்.தில்லை நடராசா, யாழ். பல்கலைக்கழக முன்னாள் நுண்கலைப் பீடாதிபதி பேராசிரியர் சபா. ஜெயராசா, ஓய்வுநிலை கல்லூரி அதிபர் சு.செல்லத்துரை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

காலை அரங்கில் இடம் பெறும் நிகழ்வில் அங்குரார்ப்பண அரங்கும் புனர்வாழ்வுக் கல்வி அபிவிருத்திப் பணிப்பாளர் க.சிவஞானம் தலைமையில் நடைபெறும். இதில் சமூக முன்னணித் தலைவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம் பெறும்.

அதனைத் தொடர்ந்து பாராட்டு அரங்கு சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாச பொதுக்கல்விச் சபைத் தலைவர் இ.சாந்தகுமார் தலைமையில் நடைபெறும் இதில் " சமூக ஜோதி ", "துறைசார் வித்தகர் ", "சமூகப் பற்றாளர், " சமூக முன்னோடி ஆகிய விருதுகள் வழங்கும் நிகழ்வும், சமாதான நீதிவான்கள், முதுமாணிப்பட்டம், இளமாணிப்பட்டம், கற்பித்தல் தேசிய டிப்ளோமா பட்டம் உயர்தேசிய டிப்ளோமா பட்டம், ஆகிய பட்டங்களைப் பெற்றவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறும்.

பரிசளிப்பு அரங்கு பொதுக் கல்விச் சபை அங்கத்தவர் ச.அசோக் தலைமையில் நடைபெறும். இதில் சமாசம் புலமைப்பரிசில் நன்கொடை வழங்கல், சமாசக் கல்விப் போட்டிப் பரீட்சைக்கான பரிசில் வழங்கல், மாணவர்களுக்கான வருடாந்த கல்வி நன்கொடை வழங்கல், நலிவுற்ற சமாச அங்கத்தவர்களுக்கு நன்கொடை வழங்கல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும்.

கருத்தரங்கு, புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதிய நிதிப்பணிப்பாளர் வே.திருச்செல்வம் தலைமையில் நடைபெறும். இதில் சிறப்புரைகள் இடம்பெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து மாலை அரங்கில் கலை அரங்கம் தென்மராட்சிப் பிராந்திய சபைச் செயலாளர் திருமதி செல்வராணி ஜெகதீசன் தலைமையில் நடைபெறும். இதில் பிராந்திய நிலையங்களின் ஏற்பாட்டில் கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ந-313)

## பரீட்சை வழிகாட்டல் விரிவுரைகள்

யாழ்ப்பாணம், ஜன.21

இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக் குழுவினால் நடத்தப்படும் மூலதனச் சந்தை முதலீட்டுக் கல்வி தொடர்பான பரீட்சைக்கான வழிகாட்டல் விரிவுரைகள் இன்றும் நாளையும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை யாழ்.கிளையில் நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து வாரந்தோறும் சனி, ஞாயிறு தினங்களில் இந்த விரிவுரைகள் நடைபெறவுள்ளன. இந்த விரிவுரை வகுப்புக்களில் பங்குகொள்ள விரும்பும் ஆர்வமுடைய மாணவர்கள் யாழ்.கிளையுடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-313)

## கவனயீனத்தால் முறிந்தது கால்

யாழ்ப்பாணம், ஜன.21

"பெக்கோ இயந்திரதத்தின் பிணைச்சல் பகுதிக்குள் கால் அகப்பட்டதால் இளைஞர் ஒருவரின் கால் முறிவடைந்துள்ளது.

காங்கேசன் துறை வீதியில் தெல்லிப் பழைப் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக வீதி அகலிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த போதே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. இதில் நாவற்குழியைச் சேர்ந்த கந்தசாமி - ரமேஸ்குமார் (வயது -27 ) என்பவரது காலே முறிவடைந்துள்ளது.

பெக்கோ இயந்திரத்தின் மேல் இருந்து வீதியைக் கிளறி மண் அள்ளிக் கொண்டிருந்தபோது திடீரெனக் குறித்த வாகனத்தின் பிணைச்சலுக்குள் அவரது கால் அகப்பட்டதால் இந்த விபத்து நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர் உடனடியாகத் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

எனினும் மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-36)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சில பொருள்களை வாங்க ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களுக்கு அலைந்து திரியலாம். வியாபாரிகள் வாடிக்கையாளர்களிடம் அனுசரணையாக நடந்து கொள்வது நல்லது. எந்த வேலையும் சுறுசுறுப்பாக முடியாமல் கடுமையாக இழுத்தடிக்கலாம். பேராசைகளைத் தவிர்க்க வேண்டும்.

**இடபம்:** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பழைய நண்பர்களை தேடிச்சென்று பார்ப்பீர்கள். வெளியூர் பயணங்களின்போது முக்கிய நபர் ஒருவரைச் சந்திக்கலாம். பிள்ளைகள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். பரபரப்பாகச் செயற்படும் நாள்.

**மிதுனம்:** போட்டிகள், எதிர்ப்புகள் விலகி நினைத்ததைச் சாதிக்கும் நாள். வேலையாள்களால் ஏற்பட்ட தொல்லைகள் குறையும். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். பல நாள்களாக வராமல் இருந்த பணவரவு ஒன்று இன்று கைக்குக் கிடைக்கும். உறவினர்களின் அன்புக் கட்டளைக்கு ஆள்படுவீர்கள். புதியவர்கள் நட்பு கிட்டும்.

**கடகம்:** சில விடயங்களில் முடிவுகள் எடுக்க முடியாமல் தடுமாற்றங்களைச் சந்திக்கலாம். குடும்ப உறுப்பினர்கள் சிலர் மீது ஏதோ ஒரு வகையில் கோபம் கொள்ளலாம். மற்றவர்களுக்காக நீங்கள் சிலரிடம் உதவி கேட்கலாம். சிறிய தவறு ஒன்றை நினைத்து பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். வெளியிடங் களுக்குச் செல்லும் போது, எதிர்பாராமல் ஒருவரைப் பார்க்கலாம்.

**சிங்கம்:** வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும் நாள். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். நீண்ட தூர பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். கடினமாக முயற்சித்தும் சில விடயங்களில் பலன் கிடைக்காமல் போகலாம். சிலருக்கு கடன் கொடுக்கலாம். புதிய இடங்களுக்குச் செல்லலாம்.

**கன்னி:** நாடி வந்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்வீர்கள். பெண்களால் மகிழ்ச்சியான, சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். விரும்பிய உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**துலாம்:** என்னதான் பொறுப்போடு செயற்பட்டாலும் ஏதாவது ஒரு வகையில் பிரச்சினைகள் உருவாகலாம். பண விடயங்கள் தொடர்பாக சிலருடன் வாக்குவாதம் செய்வீர்கள். குடும்பச் செலவுகள் திட்டமிட்டதை அதிகமாவதால், கவலை அடையலாம். சிலரின் விமர்சனங்களைச் சந்திக்கலாம்.

**விருச்சிகம்:** தொட்ட காரியங்கள் துரிதமாக நடக்கும் நாள். மற்றவர்கள் செய்ய வேண்டிய சில வேலைகளையும் சேர்த்து நீங்கள் செய்யலாம். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

**தனுசு:** ஆரவாரம் இல்லாமல் அமைதியாகச் செயற்பட வேண்டிய நாள். மற்றவர்களை நம்பி சில வேலைகளை ஒப்படைத்து விட்டு அது எப்படியாகுமோ என்று கலக்கம் அடையலாம். வெளியூர்களில் இருந்து முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். தொழில் ரீதியாக சிலர் உங்களின் உதவிகளை நாடி வரலாம். வேண்டா வெறுப்பாக சிலருக்குச் செலவு செய்யலாம்.

**மகரம்:** வெளியூரில் இருக்கும் ஒருவரைத் தொடர்பு கொண்டு முக்கிய விடயங்களை பேசுவீர்கள். நீங்கள் செய்ய வேண்டிய வேலை ஒன்றை நண்பர்கள் மூலம் முடிப்பீர்கள். வாய்ப்புகள் தேடி வரும் நாள். உத்தியோகத்தர்கள் மகிழ்ச்சி, உற்சாகமாகக் காணப்படுவர். மனைவி வழி உறவுகள் மூலம் நீன்மை அடையலாம்.

**கும்பம்:** எந்த வேலையையும் பிற்பேட்டு வைக்காமல் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். தற்செயலாக நடக்கும் சில விடயங்களால் உங்களுக்கு சந்தோஷம், மகிழ்ச்சி அதிகரிக்கும். அதிக விலை கொடுத்து வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த விலைக்கு வாங்குவீர்கள். சிலர் உங்களைப் பற்றி பெருமையாக பேசுவர். நல்ல செய்திகளைக் கேட்கலாம்.

**மீனம்:** தடுமாற்றங்கள், குழப்பங்களைச் சந்திப்பீர்கள். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு அதிகரிக்கும். பொலிஸ் தொடர்பான விடயங்களில் அனுகூலம் உண்டு. உறவினர் ஒருவரால் மன உளைச்சல், சங்கடங்களுக்கு ஆளாகலாம். முடிந்து விட்டதாக நினைத்த பிரச்சினை ஒன்று மீண்டும் தலை தூக்கி தொந்தரவு கொடுக்கலாம். பக்தி நாட்டம் கூடும்.

**நாளை**

தை 08 ஞாயிற்றுகிழமை 22.01.2012
திதி: சதுர்த்தசி பி.ப. 02.31 வரை
நட்சத்திரம்: பூராடம் பி.ப. 04.21 வரை
சுபநேரம்: 09.35 - 11.05 வரை,
ராகு காலம்: 05.05- 06.25 வரை

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 6 | 7 | | 5 | | |
| | 4 | | | | | 1 | | 8 |
| 8 | | 7 | 1 | 4 | | | 6 | 3 |
| | | | | 6 | 4 | | 5 | |
| 4 | | | | 3 | | | | 6 |
| | 7 | | 2 | 1 | | | | |
| 7 | 8 | | | 9 | 1 | 6 | | 5 |
| 5 | | 2 | | | | | 1 | |
| | | 9 | | 2 | 6 | 4 | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும்கொண்டிருக்கிறது.(உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# 45 ஆம் நாள் நினைவு நிகழ்வும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு
24.12.1956

மலர்வு
02.08.1965

அமரத்துவம்:- 08.12.2011

அமரர்
மார்க்கண்டு
உதயகுமார்

திருமதி
வசந்திமாலா
உதயகுமார்

கடந்த 08.12.2011 அன்று இறைபதமடைந்த எமது பெற்றோரின் 45 ஆம் நாள் நினைவு நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (21.01.2012) சனிக்கிழமை எமது புத்தூர் இல்லத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் எமது உயிரார்ந்த உறவுகள், நண்பர்கள், எம்துயரறிந்து அதில் பங்குகொண்டு வெவ்வேறு வகையிலும் ஆறுதல் வழங்கிய பல்துறைசார் அன்புக்குரியவர்கள், அயல் வாழ்மக்கள் அனைவரையும் கலந்துகொண்டு அவர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காகப் பிரார்த்திப்பதுடன் மதியபோசன நிகழ்விலும் இணைந்துகொள்ளுமாறு பணிவன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பினை நேரடியான உங்கள் ஒவ்வொருவருக்குமான எமது தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**தாங்கள் வருகை எம்மை ஆற்றுப்படுத்தும் என நம்புகின்றோம்.**

**"என் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"**

எமது வளமான வாழ்வின் வழிகாட்டியாக விளங்கிய எமதருமைப் பெற்றோரை இழந்து ஆறாத்துயரில் தவித்த வேளையில் உதவிகளையும் ஆதரவுகளையும் நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள் உரித்தாகுக.

கொலைகாரர்களால் தாக்கப்பட்டு உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த வேளையில் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று சகல உதவிகளையும் வழங்கிய யாழ்.போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், இஃம்போம் செய்து உதவிய E.Sons நிறுவனத்தினர், பதாகைகளை உருவாக்கித் தந்த நிறுவனத்தினர், கொலைகாரர்களைக் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்திய காவல்துறையினர், பாதுகாப்பு வழங்கிய கோப்பாய், அச்சுவேலி காவல்துறையினர், படைவீரர்கள், மரணக்கிரியைகளின்போது இணைந்து கொண்டு ஆதரவு வழங்கிய அன்பர்கள், ஆதரவாளர்கள், உறவினர்கள், இரங்கலைத் தெரிவித்து துயர் பகிர்ந்த நல் இதயங்கொண்டவர்கள், ஊடகத்துறையினர் அனைவருக்கும் வார்த்தைகள் மட்டும் நன்றியாகாது.

**"காலத்தினாற் செய்த உதவி ஞாலத்தின் மாணப்பெரிது"** என இதயபூர்வமாக எண்ணி எம் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**- செந்தூரன், குகதீபன், சங்கீதன், கோபிகா (பிள்ளைகள்)**
**'மயூரம்', சுன்னாகம் வீதி, புத்தூர்.**

(13160)(2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச பங்களிப்புடனான சமாதானத் தீர்வு தேவை

சர்வதேசத்தின் பங்களிப்புடனான சமாதானத் தீர்வை வலியுறுத்தும் நோக்கில் கனேடியப் நாடாளுமன்றத்தில் சர்வ கட்சிகளும் கலந்து கொள்ளும் இலங்கை தொடர்பான மாநாடு நடைபெறவுள்ளது.

இதுகுறித்து கனேடிய மனித உரிமை மையம் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

ஈழத்தமிழினத்தின் முன்னேற்றத்துக்காகவும் தமிழர்களால் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வொன்றை வற்புறுத்துவதற்காகவும் முன்னின்று செயற்பட்டு வரும் கனேடிய மனிதவுரிமை மையத்தின் 2012ம் ஆண்டுக்கான ஆரம்ப மைல் கல்லாக இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உலக நாடுகளின் அரசுகள் யாவும் போர்க்குற்ற விசாரணைக்கு வலியுறுத்திக் கொடுத்த அழுத்தத்தைக் குறைக்க தாங்களே ஒரு தீர்வுத் திட்டத்தை சமர்ப்பித்து உலகை ஏமாற்றி தமிழர்களை அடிமை கொள்ள இலங்கை அரசு மீண்டும் தலைப்பட்டுள்ளது. சர்வதேசத்தின் பங்களிப்புடனான ஒரு சமாதானத் தீர்வே எமக்குத் தேவை என்பதை நாம் இப்பொழுது எடுத்துக் கூற வேண்டிய கட்டாயத்திலுள்ளோம்.

**சர்வதேசத்தின் பங்களிப்புடனான சமாதானத் தீர்வை வலியுறுத்தும் நோக்கில் கனேடிய நாடாளுமன்றத்தில் சர்வ கட்சிகளும் கலந்து கொள்ளும் இலங்கை தொடர்பான மாநாடு**

நீண்ட காலமாக இடம்பெற்று வரும் இன அழிப்பை மறைப்பதற்காகவே இலங்கை வெளியிட்ட 'கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு' அறிக்கையில் எதுவுமே இல்லை என்பதை கனடாவின் சகல கட்சிகளும் புரிந்து கொள்வதற்காகவே இந்த மாநாடு நடைபெறுகிறது.

அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற கட்சிபேதமின்றி பலர் கலந்து கொள்ளும் இந்த மாநாட்டின் மூலம் ஈழத் தமிழினத்தின் எழுச்சிக்கு வித்திடுவோம். எமது இனத்துக்கு இழைக்கப்பட்ட அநீதியை உலகின் கண்முன் கொண்டு வருவோம் -என்று அதில் குறிப்பிடப் பட்டுள்ளது. (வ)

# 15 ஆயிரம் பட்டதாரிகள் நியமனம் வயது நிபந்தனை வேண்டாம்

யாழ்ப்பாணம், ஜன.21

நாடளாவிய ரீதியில் 15 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கு திறைசேரி நடவடிக்கை எடுத்துள்ளது. எனினும் சேவை மூப்பு, வயது என்ற நிபந்தனையின்றி ஆள்சேர்ப்புச் செய்யப்படவுள்ளது.

எனவே இந்த விடயத்தில் அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று வடக்கு அரச சேவை பட்டதாரிகள் சங்கத் தலைவர் க. உதயராகவன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடளாவிய ரீதியில் 9 மாகாணங்கள் உள்ளன. இதில் 14 பல்கலைக்கழகங்கள் மூலம் வெளியேறிய 71 ஆயிரம் பட்டதாரிகள் பதிவாகியுள்ளனர். ஆனால் அரசு 41 ஆயிரத்து 700 பட்டதாரிகளே வேலையற்று உள்ளதாகக் கூறுகின்றது.

இந்தக் நிலையில் திறைசேரித் திட்டப்பணிப்பாளர் 15 ஆயிரம் பட்டதாரிகள் மட்டுமே நியமனம் செய்யப்படுவதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார். இன்னும் 3 வாரங்களில் நியமனம் தொடர்பாக அரச பத்திரிகையில் வெளியிடவுள்ளார்.

வடக்கு-கிழக்கு போரால் அழிவடைந்த -பின்னடைந்த பிரதேசம் இங்கிருந்து வெளியேறிய பட்டதாரிகள் விடயத்தில் அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

பட்டதாரி நியமனம் வழங்கப்படும் போது வடக்கு- கிழக்கு மட்டும் 6 ஆயிரம் பட்டதாரிகளை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லாவிடில் வடக்கு-கிழக்கு பட்டதாரிகள் நிலைமோசமடையும்-என்றார் அவர்.

# வவுனியா தம்பதியர் வெட்டிக் கொலை இருவரின் மோதிர விரல்கள் துண்டிப்பு

வவுனியா மாவட்டத்தில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பன்றிக்கெய்த குளம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் கணவன்- மனைவி வெட்டி கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீள்குடியேற்றம் செய்யபட்ட இந்தப் பகுதியில் கொட்டகை அமைத்து விவசாயம் செய்து வந்த கந்தையா முத்தையா (வயது 67), அவரது மனைவி முத்தையா பரமேஸ்வரி ஆகிய இருவருமே இவ்வாறு வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

பெண்ணின் சடலம் வீட்டுக்கு அருகிலும் அவரது கணவரின் சடலம் வீட்டில் இருந்து சற்று தொலைவிலும் காணப்பட்டன என்று அந்தப் பிரதேச கிராமசேவகர் தெரிவித்தார்.

கொலை செய்யப்பட்ட இருவரது கைகளிலும் மோதிர விரல் வெட்டப்பட்டுள்ளதாகவும் இந்தச் சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(ஒ,ந)

# உயிர் தப்பினர்

நெடுங்கேணி, ஜன.21

வாகனமொன்று தடம் புரண்டதில் அதன் சாரதி மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

ஒலுமடு கிராம சேவகர் பிரிவிலுள்ள வேலடிக் கிராமத்தில் சிமெந்து ஏற்றிவந்த ரைம்வீல் வாகனமொன்றே தடம் புரண்டது.

வாகனத்தின் சாரதியும், உதவியாளரும் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்.

(க-435)

# வீசா மோசடியில் ஈடுபட்ட இலங்கைப் பெண் கைது

வீசா மோசடியில் ஈடுபட்ட இலங்கைப் பெண் பிரிட்டனில் கைது செய்யப்பட்டுள்ளார்.

போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி வீசா பெற்றுக் கொண்டதாக குறித்த நபர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறித்த பெண் தமது இரண்டு பிள்ளைகளுடன் பிரிட்டனுக்குள் பிரவேசிக்க முற்பட்டதாக இலங்கைக்கான பிரிட்டன் தூதரகத்தால் தெரிவிக்கப்பட்டது.

போலியான விவகாரத்துச் சான்றிதழையும், ஹோட்டல் பதிவுச் சான்றிதழையும் குறித்த பெண் சமர்ப்பித்து பிரிட்டனுக்குள் பிரவேசிக்க முயற்சித்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சந்தேக நபர் தொடர்பில் இலங்கைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வீசா விண்ணப்பதாரிக்கு பத்தாண்டு கால பயணத் தடை விதிக்கப்பட்டதாகவும், விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரிட்டன் குடிவரவுச் சட்டங்களில் தளர்வு காட்டப்பட மாட்டாது என்றும் எங்காவது மோசடிகள் இடம்பெற்றால் அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரிட்டன் எல்லை முகவர் நிறுவன முகாமையாளர் க்ளேயர் மரே தெரிவித்துள்ளார். (வ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# "சிவானந்தம்"

## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
ஆன்மீக சஞ்சிகை வெளியீடு, இணையத்தள அங்குரார்ப்பண விழா

## அழைப்பு

காலம் : நாளை (22.01.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணி
இடம் : தலைமைச் செயலகம்
தலைமை : சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள்
(தலைவர், சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியம்)
பீடாதிபதி வந்தனீய சிவஸ்ரீ ஜம்புமகேஸ்வர சிவாச்சாரியார் ஆசியுடன் நடைபெறும்.

**வரவேற்புரை**
சிவஸ்ரீ ச.ஸ்ரீநாந்தக்குருக்கள் (ஒன்றியச் செயலாளர்)

**அருளாசி**
வணக்கத்துக்குரிய சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
நல்லை ஆதீன குருமுதல்வர்

**வாழ்த்துரை**
சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள்
(ஒன்றிய வித்வ சபை உறுப்பினர்)

**பிரதம விருந்தினர்**
திருமதி இமெல்டா சுகுமார் அவர்கள்
யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்

**சிறப்பு விருந்தினர்**
பேராசிரியர் சுந்தையா தேவராஜா
மனிதவள முகாமைத்துவத்துறை - யாழ் பல்கலைக்கழகம்

**- கௌரவ விருந்தினர்**
பிரம்மஸ்ரீ மு.பாலசண்முக சர்மா L.L.B சட்டத்தரணி

**வெளியீட்டு உரை**
வாழ்நாள் பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ணஐயர்
(ஒன்றிய வித்வ சபை உறுப்பினர்)

**சிறப்புரை**
பிரம்மஸ்ரீ ந.சதாசிவஐயர்
பிரதிப்பதிவாளர் நாயகம்

**இணையத்தள வடிவமைப்பு**
பிரம்மஸ்ரீ நா.ஜனார்த்தனசர்மா
(இயக்குநர், microtech computer center -சுதுமலை)

**இணையத்தள உரை**
ந.குகபரன்
(ஆசிரியர், சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி)

**நன்றி உரை**
சிவஸ்ரீ இ.விக்னேஸ்வரக்குருக்கள் (ஒன்றிய உறுப்பினர்)

சிவாச்சாரிய பெருமக்கள், மஹாசபை உறுப்பினர்கள், சைவ அபிமானிகள் அன்பர்கள் அனைவரும் சஞ்சிகை வெளியீட்டிலும் இணையத்தள அங்குரார்ப்பணத்திலும் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்பு - சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றிய எழுத்தாளர் அவை.

சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியம்
யாழ்ப்பாணம்.

(C\8001) (6,7,10)

## சித்த மருத்துவ கருத்தரங்கு நாளை

யாழ்ப்பாணம், ஜன.21

ஆகோள் ஆய்வு மையம் சித்த மருத்துவர்களை ஒருங்கிணைத்து சித்த மருத்துவக் கருத் தரங்கை மணியகார ஒழுங்கை, கொக்குவிலில் அமைந்துள்ள ஆகோள் ஆய்வு மைய மண்ட பத்தில் நாளை ஞாயிறு காலை 9 மணி முதல் மாலை 5.30 மணிவரை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் எதிர்கால சமுதாயத்தின் தேவைக்கேற்ப சித்த மருத்துவத்தைப் பாதுகாத்தல், நவீனப்படுத்தல், பரவலாக்கம் செய்தல் முதலான நிலைகள் குறித்து கலந்துரையாடப்பட்டுப் பல தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன. மேலும் சித்த மருத்துவர்கள் தமது ஆய்வுக் கட்டுரைகளையும் வழங்கவுள்ளனர்.(ஒ)

## பாடசாலை பஸ்ஸை எழுதுமட்டுவாழ் சந்திவரை நீடிக்கக் கோரிக்கை

தென்மராட்சி, ஜன.21

அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட கிளாலி, எழுதுமட்டுவாழ் தெற்கு, ஒட்டுவெளி, கரம்பகம், எழுதுமட்டுவாழ் வடக்கு ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களின் நலன்கருதி -

769 மார்க்க பாடசாலை பஸ் சேவையை எழுதுமட்டுவாழ் சந்தி வரை நீடிக்குமாறு மக்கள் இ.போ.ச யாழ். சாலையினரைக் கோரியுள்ளனர்.

தற்போது உஷன் கந்தசாமி கோயில் வரை நடத்தப்பட்டுவரும் பாடசாலை பஸ் சேவையை எழுதுமட்டுவாழ் சந்திவரை நீடித்தால் இந்தப் பிரிவுகளைச் சேர்ந்த 40ற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடைவார்கள் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாடசாலை பஸ் சேவை இல்லாததால் மாணவர்கள் தனியார் பஸ்களில் அதிக பணம் கொடுத்து பயணிக்க வேண்டியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-207)

## நவீன சந்தைக்கு புதிய கட்டடம்

தென்மராட்சி, ஜன.21

சாவகச்சேரி பொதுச் சந்தையின் மேற்குப் புறத்தில் 85 மில்லியன் ரூபா செலவில் நவீன சந்தைக் கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

கட்டடத்துக்கான வரைபடமும் மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு நேற்று நடைபெற்ற சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. இந்தக் கட்டட வேலைகள் எதிர்வரும் மார்ச் மாதமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தலா 2கடை அறைகளைக் கொண்ட இரு தொகுதிகள் அமைக்கப்படவுள்ளன என்றும் சபை தவிசாளர் இ.தேவசகாயம் பிள்ளை தெரிவித்தார். (ஒ-207)

# கண்ணீர் அஞ்சலி



யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபரும் தென்மராட்சிக் கல்வி வலயத்தின் முன்னாள் கல்விப் பணிப்பாளருமான


## திருமதி புஷ்பா கணேசலிங்கம்

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத் தினருக்குப் பாடசாலைச் சமூகத்தினர் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வேம்படி விநாயகரின் பாதம் பணிகின்றோம்.

(11562)(2-6-7)

பாடசாலைச் சமூகம்,
யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.,மீசாலை.

# மரண அறிவித்தல்



## செல்லப்பா குமாரசாமி

(இளைப்பாறிய P-W-D. ஓவசியர்)

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் "கெங்கவாசா" நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும், தற்போது கொழும்பு, முகத்துவாரத்தில் வசித்தவருமாகிய செல்லப்பா குமாரசாமி (16.01.2012) அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - தங்கம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற கனகசபை - நாகரத்தினம் (மாணிக்கப்பிள்ளை) தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற கமலநாயகியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பீதாம்பரம் மற்றும் சொர்ணலட்சுமி- தாமோதரம்பிள்ளை, மகேஸ்வரி - நல்லையா, பொன்னம்பலவாணர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் பத்மினி (கொ/ முகத்துவாரம் இந்துக் கல்லூரி), கலாநிதி, நிர்மலா (வத்தளை), கெங்காதரன், கேதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பூவேந்திரன், செல்வராஜன், இளங்கோ (சேவாமன்றம் யாழ்ப்பாணம்), சத்தியரூபி, ராதா ஆகியோரின் அன்பு மாமனும். கஜேன் டிரா (கணேசலிங்கம் அன்கொம்பனி), துளக்ஷி, ஜயேன்டிரா, அகல்யா, திபீகா, அஞ்சனா, லக்சனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.01.2012) சனிக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 8 மணிவரை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலை யில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (22.01.2012) ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணியளவில் இறுதிக் கிரியைகள் ஆரம்பித்து முற்பகல் 11 மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி பத்மினி பூவேந்திரன் (மகள்)
307, 9 1/1, மோதர வீதி,
கொழும்பு - 15,

(8/7946) (6-7-45)

# மரண அறிவித்தல்

## திருமதி இராஜதுரை பவளம்

இணுவிலைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜதுரை பவளம் (18.01.2012) புதன்கிழமை காலமானார்.



அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு இராஜதுரையின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான வெள்ளையன்-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கதிர் காமு - சின்னப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் இராஜேஸ்வரி, விமலபாலச்சந்திரன், பாக்கியராஜ், குகேந்திரன், இராசநாயகி, காலஞ்சென்ற ஜெயந்தி மற்றும் லதா, பற் குணராஜ் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (22.01.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது மகளின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பன் இந்துமயானதுக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பண்டிதர் லேன்,
உரும்பிராய் மேற்கு,உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்

(1326/2-6-7)

# மரண அறிவித்தல்



## சின்னையா வேலாயுதம்

அராலி, செட்டியார் மடத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னையா வேலாயுதம் 15.01.2012 அன்று காலமானார்.

அன்னார் சின்னையா - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், இராசையா, ராசம்மா, முத்துலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும். கருணாகரன், கங்காதரன், தயாபரன் ஆகியோரின் அன்புத் தந்தையும். நிர்மலா, தார்ணி, சர்மிளா ஆகியோரின் அன்பு மாமனும். கனிஸ்யா, கஸ்வின், சௌமியா, சகீன், சதீன், பவிக்சன், சுகேஸ், பிரபின் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.01.2012) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அராலி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி பிள்ளைகள்

(சி/7900)(2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரான்லியை 146 ஓட்டங்களால் வென்றது ஸ்கந்தவரோதயா அணி

இலங்கைத் துடுப்பாட்டச் சங்கத்தால் நடத்தப்படும் 19வயதின்கீழ் அணிகளிற்கிடையேயான துடுப்பாட்டப் போட்டி ஒன்றில் கனகரத்தினம் மகாவித்தியாலயத்தைச் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி 146 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டி கடந்த 17,18 ஆம் திகதிக ளில் கனகரத்தினம் ம.வி. யில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கனகரத்தினம் மகாவித்தியாலயத்தின் வேண்டுகோளுக்கு இணங்க முதலிலே துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா அணி முதலாவது இனிங்சில் 45.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது. ஸ்கந்தாவின் துடுப்பாட்டத்தில் றொபேட் றிஷான் 5 பவுண்டரிகளுடன் 35 ஓட்டங்களையும் ஜே.ஜனக்ஷன் 6 பவுண்டரி களுடன் 30 ஓட்டங்களையும் ஈ.நிரோஜன் 2 சிக்ஸர் 2 பவுண்டரிகளுடன் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஸ்ரான்லி அணியின் பந்து வீச்சில் கே.ஹம்சிகாந் 10 ஓவர்கள் பந்து வீசி 35 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் சுரேஷ் 5.4 ஓவர்களில் 8ஓட்டங்களை மட்டும் விட்டுக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கலைச் செல்வன் 17ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் உதயன், பிரசாத், விதுர்சன் ஆகியோர் தலாஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப் பற் றினர்.



தொடர்ந்து தனது முதலாவது ஆவது இனிங் ஸிற்காகத் துடுப்பெடுத் தாடிய ஸ்ரான்லி அணி 39 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 81 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இந்த அணியின் சார்பாக கலைச் செல்வன் 21 ஓட்டங்களையும், பிரதாப் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஸ்கந்தா அணியின் பந்து வீச்சில் ரி.சிந்துஜன் 9.4 ஓவர்கள் பந்து வீசி 20 ஓட்டங்களை 4 விக்கெட் டுக்களைக் கைப்பற்றினர். ஜே.ஜனக்சன் 9 ஓவர்கள் பந்து வீசி 5 மெய்டி ஓவர்களுடன் 9 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் குமுதன் 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். சஞ்சயன் 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

முதல் இனிங்ஸில் 91 ஓட்டங்களால் முன்னிலை பெற் றிருந்த ஸ்கந்தா அணி 2 ஆவது இனிங்ஸில் மேலும் 185 ஓட்டங்களைக் குவித்தது.

இந்த அணியின் சார் பாக ஜே.ஜனக்ஷன் 1சிக்ஸர் 7 பவுண்டரிகளுடன் 53 ஓட்டங்களையும் கே.துபீசன் 14 பவுண்டரிகளுடன் ஆட்டமிழக்காது 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

ரி.சிந்துஜன் கே.றொபேட் றிஷான் ஆகியோர் முறையே 18, 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஸ்ரான்லி அணியின் பந்து வீச்சில் விதுர்சன் 11 ஓவர்களில் 39 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக் களையும் ஹம் சிகாந் 40 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். உதயசுபேசன், சுரேஸ் பிரதாப் ஆகியோர் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 276 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு 2 ஆவது இனிங்ஸில் 129 ஓட்டங்களுக்குள் சகல விக் கெட்டுக்களையும் இழந்து 146 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.


இந்த அணியின் சார்பில் பிரசாத் 2 சிக்ஸர்கள் 5 பவுண்டரிகள் உள்ளடங்களலாக 43 ஓட்டங்களைப் பெற்றார். பிரதாப் மாதவன் ஆகியோர் தலா 16 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஸ்கந்தா அணியின் பந்து வீச்சில் ரி.சிந்துஜன் 32 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக் களையும் ரி.சஞ்சயன் 20 ஓட்டங்களுக்கு 3விக்கெட்டுக் களையும் வீழ்த்தினர்.

குமுதன், ஜனக்சன் ஆகியோர் முறையே 2,1 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிக் கொண்டனர்.

(த-44)

# மாவட்ட மட்ட கரப்பந்தாட்டம்



யாழ்ப்பாணம்,ஜன.21

'தேசத்தின் மகுடம்' பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயது பிரிவு ஆண்களுக்கான மாவட்ட மட்டக் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இந்தப் போட்டியில் 1995 ஆம் ஆண்டும் அதற்குப் பின்னரும் பிறந்த வீரர்கள் பங்கு கொள்ள முடியும் எனவும் போட்டிக்ளில் பங்கு கொள்ள விரும்பும் பாடசாலைகள் அன்றைய தினம் காலை 8 மணிக்கு தங்களது வரவைப் பதிவு செய்து கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிக்கான ஒழுங்கு நிரல் அன்றைய தினமே தயாரித்து போட்டிகள் தொடர்ந்து நடைபெறும் எனப் போட்டி ஏற்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

(த-23)

# ஏழாலை கண்ணகி நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜன.21

ஏழாலைகண்ணகிவிளையாட்டுக் கழகம் நடத்தும் 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட 9 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை ஏழாலை மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் பங்கு கொள்ளும் அணிகளின் விவரங்கள் வருமாறு:

காலை 8.30 மணி

✱ சுன்னாகம் கலைவாணி விளையாட்டுக்கழகம் எதிர் மல்லாகம் சாளம்பை 'பி' அணி.

முற்பகல் 10 மணி

✱ யாழ்ப்பாணம் காமாட்சி விளையாட்டுக்கழகம் எதிர் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழகம்.

பிற்பகல் 3 மணி

✱ சுன்னாகம் 'ஏபி' விளையாட்டுக்கழகம் எதிர் கொட்டடி வளர்மதி விளையாட்டுக்கழகம்.

மாலை 4.15 மணி

யாழ்ப்பாணம் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் எதிர் யாழ்ப்பாணம் நொதேர்ன் விளையாட்டுக்கழகம்.

(த-23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திராட்சைத் தோட்டத்தில்...

டோனியை பொறுத்தவரை, தடை காரணமாக நிறைய நாள்கள் ஓய்வு கிடைத்துள்ளது. நேற்று முன்தினம் அடிலெய்ட்டில் உள்ள திராட்சை தோட்டத்துக்கு மனைவி சாக்ஷியுடன் சென்று சுற்றிப் பார்த்திருக்கிறார்.


ஆஸ்திரேலிய மண்ணில் சந்தித்த டெஸ்ட் தொடர் தோல்வியை எண்ணி டோனி கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அடிலெய்ட்டில் உள்ள திராட்சைத் தோட்டத்தில், மனைவி சாக்ஷியுடன் உலா வந்து உற்சாகமாகப் பொழுதை கழித்தார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 3 டெஸ்ட் ஆட்டங்களில் தோல்வி அடைந்த இந்திய அணி, தொடரை இழந்தது. இதில், பேர்த்தில் நடந்த மூன்றாவது டெஸ்டில் தாமதமாக பந்துவீசிய பிரச்சினையில் சிக்கிய, டோனிக்கு ஒரு ஆட்டத்தில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டது. எதிர்வரும் 24 ஆம் திகதி தொடங்கும் நான்காவது ஆட்டத்துக்கு சேவாக் அணித்தலைவராக செயல்பட உள்ளார். இந்த ஆட்டத்தில் பங்கேற்பதற்காக இந்திய வீரர்கள் அடிலெய்ட் வந்தனர்.

டோனியை பொறுத்தவரை, தடை காரணமாக நிறைய நாள்கள் ஓய்வு கிடைத்துள்ளது. நேற்று முன்தினம் அடிலெய்டில் உள்ள திராட்சைத் தோட்டத்துக்கு மனைவி சாக்ஷியுடன் சென்று சுற்றிப் பார்த்திருக்கிறார். இங்குள்ள மலைகளில் 50 இற்கும் மேற்பட்ட திராட்சைத் தோட்டங்கள் உள்ளன. இதில் இருந்து தயாரிக்கப்படும் 'வையின்' மிகவும் பிரபலம். கடந்த 1844 இல் விக்டோரியா மகாராணிக்கு அடிலெய்ட்டில் இருந்துதான் 'வைன்' அனுப்பப்பட்டதாம்.

தொடர் தோல்வியை அடுத்து, இந்திய வீரர்கள் ஆஸ்திரேலியாவுக்கு விளையாடச் சென்றார்களா? அல்லது 'ஹனி மூன்' சென்றார்களா? என்று விமர்சித்து வருகின்றனர். இந்த நிலையில் திராட்சைத் தோட்டத்தில் டோனி, உலா வந்தது விமர்சனங்களுக்கு வழிவகுத்துள்ளது.

இதற்கிடையே, திராட்சைத் தோட்டத்துக்கு வீரர்கள் யாரும் செல்லவில்லை என்று, இந்திய அணியின் ஊடக முகாமையாளர் ஜி.எஸ். வாலியா தெரிவித்துள்ளார். (15)



மனைவியுடன் டோனி.....

# மாற்றம் மாற்றம் தருமா?

இலங்கை கிரிக்கெட் தேர்வுக்குழுவின் புதிய தலைவராக அசந்த டி மெல் நியமிக்கப்பட்டுள்ளார். அமல் சில்வா, டொன் அனுரசிறி, ஹேமந்த விக்கிரமரட்ன ஆகியோர் இந்தக் குழுவின் உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் இலங்கை அணியின் புதிய தலைவராக மீண்டும் மஹேல நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய அணி கிண்ணம் வென்றது ஹொக்கியில்



அசர்பெய்ஜான் அணிக்கு எதிரான நான்காவது போட்டியிலும் இந்தியப் பெண்கள் ஹொக்கி அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதன் மூலம் தொடரை 4-0 என்ற கணக்கில் வென்று, கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இந்தியா, அசர் பெய்ஜான் அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகள் கொண்ட ஹொக்கி தொடர் டில்லியில் நடந்தது. முதல் 3 போட்டியில் வென்ற இந்திய அணி, நேற்று நான்காவது போட்டியில் பங்கேற்றது.

இதில் அபாரமாக ஆடிய இந்திய அணிக்கு 44 ஆவது நிமிடத்தில் ஜஸ்பிரீத் கவுர் முதல் கோல் அடித்து முன்னிலை பெற்றுத் தந்தார். பின்னர் போட்டி முடிய சில நிமிடத்துக்கு முன் (68 ஆவது) ராணி ராம்பால் ஒரு கோல் அடித்தார். இதற்கு அசர் பெய்ஜான் அணியினரால் பதிலடி தரமுடியவில்லை. முடிவில் இந்திய அணி 2-0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது.

இதையடுத்து தொடரை 4-0 என்று வென்ற இந்திய அணி, கிண்ணத்தை கைப்பற்றி அசத்தியது. (15)





# வாய்ப்புத் தாருங்கள்...!

இந்தியாவுக்கு எதிராக நடைபெறும் நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணியின் சுழற்பந்து வீச்சாளர் நதன் லியோன் விளையாடுகிறார். இதனால் தற்போது இருக்கும் 4 வேகப்பந்து வீரர்களில் ஒருவர் நீக்கப்படுவார் என்று தெரிகிறது.

பந்து வீச்சாளர் சிடிலுக்கு ஓய்வு கொடுக்க முடிவு செய்யப்பட்ட நிலையில் அவர் தான் விளையாட விரும்புவதாக தெரிவித்தார். இதனால் ரியான் ஹரிஸ் அல்லது ஸ்டார்க் நீக்கப்படலாம் என்று தெரிகிறது.

இந்த நிலையில் அடிலெய்ட் டெஸ்டில் தன்னை நீக்க வேண்டாம் என்று அணி நிர்வாகத்திடம் ஹரிஸ் கெஞ்சிக் கேட்டுள்ளதாக அந்த நாட்டு தொலைக்காட்சி தகவல் வெளியிட்டுள் ளது. (15)

# அப்ரிடிக்கு அதிக விலை



பங்களாதேஷ் கிரிக்கெட் லீக் (பீ.பி.எல்) தொடருக்கான வீரர்களின் ஏலத்தின்போது பாகிஸ்தானின் சகலதுறை வீரர் சயிட் அப்ரிடி அதிக விலைக்கு வாங்கப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் கடும் போட்டியில் 700,000 அமெரிக்க டொலர்களுக்கு டாக்கா அணி அப்ரிடியை வாங்கியது.

எனினும் இந்தத் தொடரில் தான் பங்குபற்ற போவதில்லை என்று சயிட் அப்ரிடி கூறியதாக 'த எக்ஸ்பிரஸ் ட்ரிபியுன்' தெரிவித்துள்ளது.

டுபாயில் நடைபெறவுள்ள பாகிஸ்தான் - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஒரு நாள் ஆட்டங்களில் தான் பங்குபற்ற வேண்டியிருப்பதே இதற்கான காரணம் என்று அப்ரிடி கூறியுள்ளார். புகழ்பெற்ற பல வீரர்களை விட தான் அதிக தொகைக்கு ஏலத்தில் வாங்கப்பட்டமை குறித்து பெருமிதம் அடைவதாக அப்ரிடி கூறினார். எனினும் இங்கிலாந்து- பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஆட்டங்களில் தான் கவனம் செலுத்தப்போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

'நான் எப்போதும் தேசிய அணிக்குத்தான் முன்னுரிமை வழங்கினேன். இங்கிலாந்துடனான ஆட்டங்களில் எனது சிறந்த பங்களிப்பை வழங்க முயற்சிக்கின்றேன்' என்று அவர் கூறியுள்ளார்.

டெஸ்ட் ஆட்டங்களிலிருந்து ஓய்வுபெற்றுள்ள அப்ரிடி தற்போது ஆஸ்திரேலியாவில் நடைபெறும் பிக் பாஷ் லீக் ஆட்டங்களில் பங்குபற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பங்களாதேஷ் பிரிமியர்லீக் ஆட்டங்கள் பெப்ரவரி 9 முதல் 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இங்கிலாந்து - பாகிஸ்தான் ஒரு நாள் தொடர் பெப்ரவரி 13 முதல் 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. பெப்ரவரி 23, 25, 27 ஆம் திகதிகளில் 'ரி - 20' ஆட்டங்கள் இவ்விரு அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் இங்கிலாந்து - பாகிஸ்தான் ஒருநாள் தொடர் ஆரம்பமாகுவதற்கு முன்னர் நடைபெறும் பங்களாதேஷ் பிரிமியர்லீக் ஆட்டங்களிலும் தான் பங்குபற்றப் போவதில்லை என்று அப்ரிடி உறுதிப்படுத்தியுள்ளார். அந்த நாள்களை தான் பயிற்சிக்காக ஒதுக்கப்போவதாக அவர் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற பங்களாதேஷ் பிரிமியர் லீக் ஏலத்தின்போது, சயிட் அப்ரிடிக்கான ஆரம்ப விலையாக 500,000 டொலர் நிர்ணயிக்கப்பட்டது. பரிஷால் அணியைத் தவிர்ந்த ஏனைய சகல அணிகளும் அப்ரிடியை வாங்குவதற்கு போட்டியிட்டன.

ஷில்ஹெட் அணி 10 டொலர்களை கூட்டி 500,010 டொலர்களுக்கு வாங்குவதாக அறிவித்தது. ராஜ்ஷாஹி அணி 540,000 டொலர்களுக்கு அப்ரிடியை வாங்க முன்வந்தது. சிட்டகொங் அணி அந்தத் தொகையை 600,000 டொலர்களாக உயர்த்தியது. குல்னா அணி 612,000 டொலர் வழங்க முன்வந்தது. எனினும் டாக்கா அணி 700,000 டொலர்களைக் கொடுத்து வாங்கியது. (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் அதிரடியில் சுருண்டது தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்க அணி நிர்ணயித்த 300 ஓட்டங்களுக்கு பதிலளித்து ஆடிய இலங்கை அணி டில்ஷானின் சிறப்பான ஆரம்பத்துடன் 48.4 பந்து பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 304 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய தென்னாபிரிக்க அணிக்கு அல்வ்ரோ பீற்றர்ஸன், ஸ்மித் ஜோடி அபாரமான தொடக்கத்தை கொடுத்தது. முதல் மூன்று ஆட்டங்களிலும் திணறிய ஸ்மித் நேற்றைய ஆட்டத்தில் இலங்கையின் பந்து வீச்சை போட்டுத் தாக்கினார். இருவரும் இணைந்து அதிரடியாய் ஓட்டங்களைக் குவிக்க 48 பந்துகளில் தென்னாபிரிக்க அணி 50 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. வேகமாகத் தொடர்ந்த இணைப்பு 79 பந்துகளில் 84 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் பிரிக்கப்பட்டது. பீற்றர்ஸன் 37 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து அணித்தலைவர் டீ வில்லியர்ஸ் நுழைந்தார். இவர் நுழைந்தபின்னர்தான் இலங்கை வீரர்கள் சிந்தித்திருப்பார்கள் பீற்றர்ஸனை ஆட்டமிழக்கச் செய்தது தவறு என்று. அந்தளவுக்கு இலங்கையின் பந்து வீச்சுக்கு ஒரு காட்டுக்காட்டினார் வில்லியர்ஸ். மறுமுனையில் ஆரம்பத்திலிருந்தே அசத்திய ஸ்மித் 45 ஆவது அரைச் சதத்தை 45 பந்துகளில் பூர்த்தி செய்தார். வேகமாகத் துடுப்பெடுத்தாடிய இந்த ஜோடி 22 ஆவது பந்து பரிமாற்றத்தில் துடுப்பாட்ட பவர்பளேயை தெரிவு செய்தது.

இதன் பின்னர் ஆபிரிக்காவின் அதிரடியின் வேகம் அதிகரித்தது. 23 ஆவது பந்து பரிமாற்றத்தை டில்ஷான் வீச விளாசித் தள்ளிய டீ வில்லியர்ஸ் 31 பந்துகளில் தனது 28 ஆவது அரைச்சதத்தை எட்டிப் பிடித்தார். அத்துடன் தென்னாபிரிக்க அணி 134 பந்துகளில் 150 ஓட்டங்களைத் தாண்டியது. 23 ஆவது பந்து பரிமாற்றத்தில் மாத்திரம் டில்ஷான் 19 ஓட்டங்களை வாரிஇறைத்தார்.

அடுத்த பந்து பரிமாற்றத்தை மலிங்க வீச ஸ்மித் ஆட்டமிழந்தார். 64 பந்துகளில் 87 ஓட்டங்கள் இரண்டாவது இலக்குக்காக பகிரப்பட்ட நிலையில் ஸ்மித் 68 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த இங்கிராம் குலசேகரவின் பந்து வீச்சில் ஒரு ஓட்டத்துடன் வெளியேறினார். அடுத்தடுத்து இலக்குகள் சரிக்கப்பட்ட போதும் நான்காவது இலக்குக்காக இணைந்த டுமினி, டீ வில்லியர்ஸ் ஜோடி பொறுப்பாக ஆடியது. இவர்களது சிறப்பான துடுப்பாட்டத்தின் உதவியுடன் ஆபிரிக்க அணி 182 பந்துகளில் 200 ஓட்டங்களை எட்டியது. மெல்ல அடங்கியது ஆபிரிக்காவின் அதிரடியாட்டம். நான்காவது இலக்குக்காக 60 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் டுமினி 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அணி 250 ஓட்டங்களை எட்டிய நிலையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய டீ வில்லியர்ஸ் 76 பந்துகளில் 3 ஆறு ஓட்டங்கள், 8 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 96 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பிளஸிஸ் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க ஆபிரிக்க அணி 252 ஓட்டங்களுக்கு ஆறு இலக்குகளை இழந்தது.

அதன் பின்னர் இணைந்த பார்னெல், ரொபின் பீற்றர்ஸன் இருவரும் தென்னாபிரிக்க அணியின் ஓட்டவேகத்தை குறையாமல் பார்த்துக் கொண்டனர். இறுதியில் பார்னெல் 17 பந்துகளில் 21 ஓட்டங்களுடன் ரன் அவுட்டானார்.

50 பந்து பரிமாற்றங்களின் நிறைவில் ஆபிரிக்க அணி 7 இலக்குகளை இழந்து 299 ஓட்டங்களைப் பெற்றது. ரொபின் பீற்றர்ஸன் 23 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார். பந்து வீச்சில் இலங்கையின் சார்பில் ஹேரத் 9 பந்து பரிமாற்றங்கள் பந்து வீசி 45 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், திஸ்ஸர பெரேரா 4 பந்து பரிமாற்றங்கள் பந்து வீசி 34 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், மலிங்க 10 பந்து பரிமாற்றங்களையும் வீசி 57 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினையும், குலசேகர 8 பந்து பரிமாற்றங்கள் பந்து வீசி 40 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினையும் கைப்பற்றினர். டில்ஷான் 8 பந்து பரிமாற்றங்கள் பந்து வீசி 60 ஓட்டங்கள் வழங்கியபோதும் இலக்கு எதனையும் வீழ்த்தவில்லை.

டில்ஷான் தென்னாபிரிக்காவின் பந்து வீச்சை போட்டு வாங்கினார். இருப்பினும் அணி 17 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தரங்க 6 ஓட்டங்களுடன் ரொஸ்ரோபேயின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து சங்ககார, டில்ஷானுடன் இணைந்து அதிரடியாகத் துடுப்பெடுத்தாடினார். ஆரம்பம் முதல் அதிரடியாக ஆடிய டில்ஷான் 50 பந்துகளில் தனது 25 ஆவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். இரண்டாவது இலக்குக்காக 79 பந்துகளில் 83 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் சங்ககார 31 பந்துகளில் ஒரு ஆறு ஓட்டம், 2 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 32 ஓட்டங்களுடன் சிறப்பான பிடியெடுப்பின் மூலம் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களம்புகுந்த சந்திமால் அணித்தலைவர் டில்ஷானுடன் சிறப்பான இணைப்பாட்டத்தை தொடர இலங்கை அணி 150 ஓட்டங்களைத் தாண்டியது. மூன்றாவது இலக்குக்காக 67 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் ஆரம்பம் முதல் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய டில்ஷான் 87 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள், 9 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 87 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தேநீர் இடைவேளைக்காக ஆட்டம் இடை நிறுத்தப்படும் போது 33 பந்து பரிமாற்றங்களில் இலங்கை அணி 3 இலக்குகளை இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.மீண்டும் களத்தில் சந்திமால் 81 பந்துகளில் 59, திரிமன்னே 13 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். தொடர்ந்து களமிறங்கிய வீரர்களான பெரேரா, மத்தியூஸ் முறையே 69, 21 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தனர். (15)


## கோட்டுவாசல் ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி தேவஸ்தானம்
## பருத்தித்துறை

**தை அமாவாசை அபிராமிப் பட்டர் விழா**

**காலம்: 22.01.2012 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணி**

சபரிமலை குருசாமி சிவதர்ம சாஸ்தா ஆலய
தேவஸ்தானபதியினதும் மூலஸ்தான
பதியினதும் வேத அருள் அமுதுடனும்
சிவஸ்ரீ தா.வாசுதேவக்குருக்கள்
தலைமையில் அதி விமர்சையாக நடைபெறும்.

பி.பகல் 3 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனை வசந்த மண்டபத்தில்

4.30 மணிக்கு சொற்பொழிவு
சரபோஜி மஹாராஜனும் அபிராமிப்பட்டரும்
வழங்குபவர்
யோகா ஆசிரியர் திரு.மா.இரத்தினஜோதி அவர்கள்

பி.ப 5 மணிக்கு எம்பெருமாட்டி வசந்த மண்டபத்தில் வீற்றிருக்க இசை ஆராதனை - அபிராமி அந்தாதி 100 பாடல்களும் சிறப்புப் பாடல்களும்
வழங்குபவர் சங்கீத வித்துவானும் யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளருமான திரு.A.K.கருணாகரன் அவர்களும் பக்கவாத்தியக் குழுவினரும்.

அந்தண சிவாச்சாரிய சிரேஸ்டர்களும் அருளாளர்களும் இசையாளர்களும் தவில் நாதஸ்வர விற்பனர்களும் எம்பெருமாட்டியின் பேரருள் சுரக்க வைப்பார்கள். அம்பாள் அடியவர்கள் அனைவரும் இத்தினத்தில் அம்பாளைத் தரிசித்து பேரருள் சுவைத்து சுபீட்சமான வாழ்வு வாழ்வீர்களாக. அதனைத் தொடர்ந்து அம்பாள் திருவீதி உலா நடைபெறும்.

விழா உபயகாரர்
(C/8012) இரகுல சூரியன்ஸ்




## வெற்றித் தேர்வு தொடர் பரீட்சைகள் ஆரம்பமாகின்றது!

2012 தரம்: 5, தரம்: 4 மாணவர்களுக்கான தனியார் கல்வி நிறுவனங்களுக்கான வெற்றித் தேர்வு வினாப்பத்திரங்கள் 15 உள்ளடங்கலாக 30 வினாப் பத்திரங்கள் கொண்ட தொடர் போடிப் பரீட்சையும் விசேட வினா விடை வகுப்பும் ஆரம்பம்

2012 - தரம் 5 பரீட்சை 01
22.01.2012 ஞாயிற்றுக்கிழமை

பதிவுகளை இன்றே மேற்கொள்ளுங்கள்
நேரம்: 6.00 AM, 8.00 AM, 10.00 AM, 2.00 PM, 4.00 PM
பரீட்சை நிலையம்:
**சயன்ஸ் அக்கடமி - நல்லூர்**
குறிப்பு: பாடசாலைக்கான வினாப்பத்திரங்கள் பரீட்சைக் காக வழங்கப்படமாட்டாது.
மேலதிக விவரங்களுக்கு: (13312)
021 222 9016, 0775388471, 0773126807


## முத்தே உமை இழந்து முழுசாய் ஒரு மாதம் !



அமரர்
### க.முத்துச்சாமி
(பிரபல விஷகடி வைத்தியர்)

**மண் மகிழ : 23.03.1928**
**கண் நெகிழ : 22.12.2011**

*சொத்தே! எம் சொந்தமே! சோதி மணி விளக்கே! சொந்தமாய் நின்ற துரையே! தூயவரே! சித்த மருத்துவத்தின் தேர்ந்த வைத்தியரே! சிந்தையெல்லாம் அன்பால் நிறைந்த நித்திலமே! முத்தே! உமையிழந்து முழுசாய் ஒரு மாதமெல்லோ! முழு நிலவே! உம் நினைவு வாழும். புகழ் ஆளும்! உத்தமரே உம்பாதம் வணங்கி அஞ்சலித்து உயரிறைவன் பாதம் நீரமர வழுத்தினமே!*

இன்று (21.01.2012) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அல்லாரை வடக்கு,
கொடிகாமம். (11563) (6,7,10)

பிரிவால் துயர் சுமக்கும்,
அன்பு மனைவி,
அருமைப் பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### கந்தசாமி சிறீதரன்



கோப்பாய் வடக்கு, பூதர்மடத்தைப் பிறப்பிடமாகவும் திருவையாறு, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சிறிதரன் நேற்று (20.01.2012) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் அருட்செல்வியின் (ஆசிரியர், கிளி.திருவையாறு மகா வித்தியாலயம்) பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - திலகவதி தம்பதியரின் இளைய மகனும் கனகாம்பிகை, பிரபாகரன், கருணாகரன், கிருபாகரன், லலிதாம்பிகை காலஞ்சென்ற மீனாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும் அருளம்பலம் மற்றும் காலஞ்சென்ற றாஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் அருளீஸ்வரன், அருள் ராஜேஸ்வரன், அருளேஸ்வரி, அருளாம்பிகை, அருள்நந்தினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (22.01.2012) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இரணைமடு பொதுமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

212/2, திருவையாறு,
கிளிநொச்சி. (C/13328)

தகவல்:
குடும்பத்தினர்.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
**ஏல விற்பனை**

*விஞ்ஞானபீடம் மற்றும் மருத்துவபீடம் ஆகியவற்றில் உள்ள பாவிக்கப்பட்ட பொருள்கள்*

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாவிக்கப்பட்ட பொருள்கள் 25.01.2012 (புதன்கிழமை) அன்று பின்வரும் நேரங்களில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

விஞ்ஞான பீடம் - முற்பகல் 9.30 - 11.30
மருத்துவ பீடம் - பிற்பகல் 01.30 - 3.30

1. மின்சார உபகரணங்கள் (குளிரூட்டிகள், மின் விசிறிகள், மின்னடுப்பு முதலியன)
2. கணினியும் கணினிசார் உபகரணங்களும்
3. ஆய்வுகூட உபகரணங்கள்
4. தளபாடங்கள் (மேசைகள், கதிரைகள் முதலியன)
5. அலுவலக உபகரணங்கள்

மேற்படி பொருள்களை 24.01.2012 செவ்வாய்க்கிழமை அன்று பின்வரும் நேரங்களில் அவ்வப் பீடங்களில் பார்வையிடலாம்.

விஞ்ஞான பீடம் - முற்பகல் 9.30 - 10.30
மருத்துவ பீடம் - முற்பகல் 11.00 - 12.00

மேற்படி பொருள்கள் அவ்வத் திணைக்கள ரீதியாகவும் பொருள் ரீதியாகவும் வகைப்படுத்தப்பட்டு மொத்தமாகவே விற்பனை செய்யப்படும். ஏலத்தில் வெற்றி பெறுபவர்கள் பணத்தை பல்கலைக்கழக நிதியாளரிடம் செலுத்தி பொருள்களை 27.01.2012 அன்று பிற்பகல் 4.30 மணிக்கு முன்னர் அப்புறப்படுத்தல் வேண்டும்.

பதிவாளர்.
20.01.2012 (C/8018)



க.பொ.த உயர்தர பெறுபேற்றுக்கமைய 100% வரை Scholorship
After A/L O/L
Engineering-USA ICTA Scholorship
BIT University of Colombo
CIMA-UK Only Rs 14,400 Per Level
University A/L Students } 50% Off
மாணவர்கள் BCS - UK, IELTS, TOEFL, CCNA, Java, ICDL, கற்கைநெறிகளையும் கற்கைநெறிக்கட்டணமின்றி கற்கலாம்.
UK, USA பல்கலைக்கழகங்களில் Master Degree
Qualified Lectures Panel, Passing Guarantee,12 Years Experience
Listed college-CIMA UK, Silver Award-Microsoft-USA, Best performance Award-University of colombo



MCS
Supported By UNDP/IRRP
324, Palaly Road, Parameswara Junction
தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.
Free5 Course fee*
Diploma Courses..
*MsOffice, AutoCAD, *Web Designing *Hardware *Accounting *DTP *English
SMS Your name & Course to 772395895 & Get Scholorship


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமைவாய்ந்த வாகனங்கள் விற்பனைக்கு



*100 வருடங்கள் பழமை வாய்ந்த இங்கிலாந்து (AUSTIN7) ஒஸ்டின் 7 கார், B.S.A மோட்டார் சைக்கிள்கள் என்பன காட்சிப்படுத்தலும் விற்பனையும்*

**ஶ்ரீ மோட்டோ வேக்ஸ்**
*இல. 70, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.*

(13316)


### உண்டியல் உடைத்தவர் பிடிபட்டார்

யாழ். வண்ணை தண்ணீர்க் கிணற்றடி ஞானவைரவர் ஆலய உண்டியலை உடைத்துப் பணத்தை திருடிய நபர் ஆலய பூசகரால் மடக்கிப் பிடிக்கப்பட்டார். உண்டியலை உடைத்த சமயத்தில் ஆலயப் பூசகரின் மனைவி கண்டு அங்கே வந்துள்ளார். அதையடுத்து அந்த நபர் ஓடித் தப்ப முயற்சித்துள்ளார். துரத்திச் சென்ற ஆலயப் பூசகர் திருடனை ஆஸ்பத்திரி வீதியில் வைத்து மடக்கினார்.






*இன்று 23½ லட்சம் உங்கள் கையிலிருந்தால் G.K ஆங்கில இலக்கமுடைய டொல்பின் வாகனமொன்றுக்கு நீங்கள் சொந்தக்காரர் ஆகலாம்.*

*பெறுமதியின் மிகுதிப் பணம் பினான்ஸ் முறையில் செலுத்தும் வாய்ப்பு உண்டு.*

*மிகவும் நல்ல நிலையில் உள்ள டொல்பினை இப்போதே நீங்கள் பார்வையிடலாம்.*

உடன் தொடர்புகொள்ளுங்கள்: 0770230101 ZAHIR

(13323)


## மரண அறிவித்தல்கள்

### இராமலிங்கம் கோகிலராசன்



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் கோகிலராசன் நேற்று (20.01.2012) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - கனகம்மா தம்பதியரின் மூத்த புதல்வரும் கமலாதேவி (ஆஸ்திரேலியா),சௌந்தரராஜன் (விவசாய போதனாசிரியர், யாழ்ப்பாணம்), தேவராஜன், பத்மாவதி (ஜேர்மனி), நற்குணராசன் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற குணரட்ணம், தயாறதி, சிவமலர், தவேஸ்வரன், சசிகலா ஆகியோரின் மைத்துனரும் சுஜீரா, கஜிதா, மேனன், பிரசாத், பிரசாந்தி, பிரதாப், பிரதீப், பிரகாஷ், அபித்தா, பிரவீன் ஆகியோரின் பெரியப்பாவும் நவசீலன், இன்பசீலன், சுசீலன், டயானி, கபிலன், சுமன் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.01.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி சிவியாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்-சகோதரர்கள்
இ.சௌந்தரராஜன், இ.தேவராஜன்
(விவசாயப் போதனாசிரியர்)

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

### திருமதி கணபதிப்பிள்ளை திலகவதி



சரசாலையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை திலகவதி நேற்று (20.01.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் கணபதிப்பிள்ளையின் பாசமிகு மனை வியும் சிவசங்கரநாதன், காலஞ்சென்ற ரதிதேவி மற்றும் இரஞ்சினிதேவி, சத்தியதேவி, ஜெயதேவி (அமெரிக்கா), கெங்காதேவி (நோர்வே), செந்தில்வேல் (லண்டன்), நளாயினி ஆகியோரின் பாசமிகு தாயும் நாகேந்திரராசா, குமுதினி, சிவகுமாரன், ஐங்கரன், பிறேமாவதி, சத்தியசங்கரா ஆகியோரின் அன்பு மாமியும் வாகீஸ்வரி, விதுரன், நிறஞ்சனா, வித்தியா, கிருத்திகா, கிருஷ்ணா, அர்ச்சுனா, கரன், வனஜா, சிந்துஜா, லக்ஷணா, சேந்தன், நந்திகேஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற கணேசர் மற்றும் நடேசர், சிவஞானவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற வர்களான நமசிவாயம், நடேசர், சாந்தநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2012) சனிக்கிழமை நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணிக்கு தகனக் கிரியைக்காக ஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரசாலை மத்தி,
சரசாலை.

தகவல்
ச.கணபதிப்பிள்ளை

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தவமணி தங்கராஜா

(ஓய்வுபெற்ற ஆசிரியை, சென்.ஜோன்ஸ் கல்லூரி)

இல 11/8, சந்தனமாதா கோயில் ஒழுங்கை, சுண்டுக்குழியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தவமணி தங்கராஜா நேற்றுமுன்தினம் (19.01.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கராஜாவின் அன்பு மனைவியும் நகுலாம்பிகையின் (ஆஸ்திரேலியா) அன்புத் தாயும் சிவதிருவாசகம் (ஆஸ்திரேலியா) அவர்களின் அன்பு மாமியும் கஜன், மிதுனா, மகிஷா, டானியன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.01.2012) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

11/8, சந்தனமாதா
கோயில் ஒழுங்கை,
சுண்டுக்குழி,
யாழ்ப்பாணம்.

தகவல்
திருமதி நகுலாம்பிகை
திருவாசகம் (மகள்)

### சுவர்ணஜோதினி லைமன்

உடுவில் வீதி, மானிப்பாயைச் சேர்ந்த சுவர்ணஜோதினி லைமன் நேற்று (20.01.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலம் சென்ற யோகரட்ணம் லைமன் - ஜெயராணி லைமன் (ஆணல்ட்) தம்பதியரின் அன்பு மகளும் ஜெயமோகன் லைமன் (HNB, கொழும்பு) அவர்களின் பாச மிகு சகோதரியும் காலம் சென்ற Rev.J.V.J ஆணல்ட், திருமதி சமாதானராணி ஆணல்ட் தம்பதியரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.01.2012) சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு இணுவிலில் உள்ள வயோதிபர் இல்லத்தில் இருந்து அவரது இல்லத்திற்கு எடுத்துவரப்படும்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் (Peacelyn, Uduvil Road, Manipay) நடைபெற்று மானிப்பாய் சேமக்காலையில் நல் லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
ஜெயமோகன் லைமன் சகோதரன்
A.C ஆணல்ட்

## கண்ணீர் அஞ்சலி



**திருமதி புஸ்பலதிகவதி கணேசலிங்கம்**
*(ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்)*
*எமது விவசாய பீடத்தின் பீடாதிபதி திருமதி சிவமதி சிவச்சந்திரன் அவர்களின் அன்புத் தாயார்*
**திருமதி புஸ்பலதிகவதி கணேசலிங்கம்**
*அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

விவசாய பீட மாணவர்கள்
யாழ்.பல்கலைக்கழகம்

(13314)

## கண்ணீர் அஞ்சலி



*திருமதி புஸ்பலதிகவதி கணேசலிங்கம்*
*(ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்)*
*எமது விவசாய பீடத்தின் பீடாதிபதியும் பயிரியல்துறைத் தலைவருமாகிய திருமதி சிவமதி சிவச்சந்திரன் அவர்களின் அன்புத் தாயார்*
**திருமதி புஸ்பலதிகவதி கணேசலிங்கம்**
*அவர்களின் பிரிவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

**பயிரியல்துறை**
**விவசாய பீடம்.**

(13320)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவசுப்பிரமணியம் பாலசவுந்தரி



காரைநகர் பொன்னாவளையைப் பிறப்பிடமாகவும் பயரிக்கூடலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் பாலசவுந்தரி (19.01.2012) வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நல்லதம்பி - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், சிவசுப்பிரமணியத்தின் பாசமிகு மனைவியும், அருட்குமரன் (லண்டன்), அருட்செல்வி (ஆசிரியை, வலந்தலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை), அருட்சோதி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், சந்திராதேவி (லண் டன்), யோகேஸ்வரன் (மொபிற்றல் டீலேஸ், யாழ்ப்பாணம்), கிருஷ்ண தாஸ் (சுவிஸ்) ஆகியோரின் மாமியும் சந்தோஸ், சருஷன், மயூரி, கிசால்வன், தேசிகன், சுஜீவன், கார்த்திகன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி காலஞ்சென்றவர்களான லிங்கேஸ்வரன், மகேஸ்வரி மற்றும் அம்பிகைபாகன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (22.01.2012) ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.சிவசுப்பிரமணியம் (கணவர்)
பிள்ளைகள், மருமக்கள்.

பயரிக்கூடல், (C/8016)
காரைநகர்.

### இராமநாதன் (சின்னையர்) கனகநாதன்



மண்டைதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் பொற்பதி வீதி, 106ஆம் இலக்க இல்லத்தில் வசித்தவருமான இராமநாதன் கனகநாதன் 20.01.2012 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு.

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க அதிகாரிகள் குழு அரச அதிபருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன.21

யாழ்.மாவட்டத்தின் தற்போதைய நிலைமை தொடர்பாக ஆய்வு செய்வதற்காக அமெரிக்கத் தூதரகத்தைச் சேர்ந்த 4 அதிகாரிகள் இருநாள் பயணமாக நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர்.

அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் ஆலோசகர் போல் எம்.கார்ரர், ஜன நாயகம் மற்றும் மனித உரிமை, தொழிலாளர் விவகாரங்களுக்கான பதில் செயலர் தோமஸ் ஓ மெலியா, தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பதில் செயலாளர் அலிஷா சுயர்ஸ், யு.என். எயிட் திட்ட இயக்குநர் ஜேம்ஸ் எப்.பெட்னர் ஆகியோரே வருகை தந்திருந்தனர்.



நேற்றுநண்பகல் யாழ்.மாவட்ட செயலகத்துக்குச் சென்று இந்தக் குழுவினர் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாருடன் 15 நிமிடங்கள் வரையில் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பாக அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகளை நேரடியாக ஆய்வு செய்வதற்காக அவர்கள் வருகை தந்துள்ளனர்.

குடாநாட்டில் மீள்குடியமர்வு நடவடிக்கைகள் தொடர்பாக விரிவான தகவல்களைப் பெற்றனர்.

மேலும் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பிலும் சுருக்கமாகக் கேட்டறிந்து கொண்டனர்.

மேலும் இங்குள்ள மக்களது செயற்பாடுகள், இராணுவத்தினரின் இருப்புத் தொடர்பிலும் கேட்டறிந்தனர் - என்றார். (த-15)

## சு.கவாலேயே முடியாதது உறுமயவால் சரிவருமா?

1 »

திகதிகளில் நடைபெற இருந்த பேச்சுக்களில் அரசு பங்கேற்கவில்லை.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு என்பது தீர்வைத் தாமதப்படுத்துவதற்கான மற்றொரு முயற்சி என்றும் அவர் சொன்னார். பேச்சுக்களை நிறுத்தியதற்கான காரணத்தை அறிய அரச தரப்புடன் தொடர்பு கொள்ள எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியிலேயே முடிந்துள்ளன.(உ-01)

## திடீர் டெங்குச் சோதனை நேற்று 776 வீடுகளில்

1 »

செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் 25 ஆம் திகதி இவர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த பொதுச் சுகாதார பரிசோதகர் உள்ளடங்கலாக 25 பேரும் திருநெல்வேலி முத்துத்தம்பி பாடசாலை, கல்வியங்காடு செங்குந்தா இந்துக் கல்லூரி மாணவர்கள் சுமார் 40 பேரும் இணைந்து இந்த பரிசோதனை நடவடிக்கையை நேற்று மேற்கொண்டனர்.

கோப்பாய் பொலிஸாருடன் திருநெல்வேலிப் பொலிஸாரும் இணைந்து திருநெல்வேலிப் பகுதியிலுள்ள கிராம அலுவலர் பிரிவுகளான ஜே/110, ஜே/111, ஜே/112, ஜே/113, ஜே/114 ஆகிய ஐந்து பிரிவுகளில் இந்த சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர் (ஒ-14)

## அதிகாரப் பகிர்வு அவசியம்

1 »

யைத் தருவதாக அமைந்தன. தமிழர்களுக்கு அதிகாரத்தைப் பகிர்வதற்காக 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இதனை நடைமுறைப்படுத்துவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்னிடம் உறுதியளித்துள்ளார். அரசியல் தீர்வு தொடர்பில் உள்ள சந்தேகங்களை தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் என்னிடம் தெரிவித்தனர். அவை குறித்து ஜனாதிபதி மஹிந்தவிடம் நான் சுட்டிக்காட்டினேன்.

இந்தியா சார்பில் இலங்கையில் செய்யப்பட்டுவரும் வளர்ச்சிப் பணிகளில் திருப்தியளிக்கும் வகையில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. பொதுவாகக் கூறுவதென்றால் பிரதமர் மன்மோகன் சிங்கால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தும் தீவிரமாக நடை முறைப்படுத்தப்பட்டு வருகின்றன- என்றும் குறிப்பிட்டார் கிருஷ்ணா. (ஒ-சி)

# கனடா சென்றுள்ள சுமந்திரன் அந்நாட்டு எம்.பிக்களுடன் பேச்சு

றொரண்ரோ, ஜன.21

கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இலங்கையின் தற்போதைய அரசியல் நிலவரங்கள் குறித்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சட் டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் பேச்சு நடத்தவுள்ளார்.

கனேடிய நாட்டில் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ள கலை, கலாசார நிகழ்வில் கலந்துகொள்வதற்காக அங்கு சென்றுள்ள சுமந்திரன், அந்த நிகழ்வில் முக்கிய உரையொன்றையும் நிகழ்த்தவுள்ளார் எனத் தெரியவருகிறது.

இந்தக் கலை, கலாசார நிகழ்வில் அந் நாட்டின் முக்கியஅரசியல் பிரமுகர்கள் கலந்துகொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. நிகழ்வு முடிவடைந்தவுடன் சுமந்திரன் கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேசுவார் என அறியவந்தது. இந்தப்பேச்சில் அந்நாட்டின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசனும் பங்குபற்றுவார் எனக் கனேடிய நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சந்திப்பின்போது, இலங்கை அரசுடன் இடம்பெற்றுவரும் அரசியல் தீர்வுப்பேச்சின் தற்போதைய நிலைமை, நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை உட்பட் இலங்கையின் சமகால அரசியல் விவகாரங்கள் தொடர்பாக சுமந்திரன் பேச்சு நடத்துவார் என்றும், அது குறித்து கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிலைப்பாட்டைக் கேட்டறிவார் என்றும் கூறப்படுகின்றது. (ஒ-சி)

## கடத்தல்களுக்கு அரசே பொறுப்பு

1 »

இவர்களின் கடத்தல்களைத் தான் கடுமையாகக் கண்டிக்கிறார் என்று தெரிவித்த சரத் பொன்சேகா, அதற்கான முழுப் பொறுப்பையும் அரசே ஏற்க வேண்டும் என்றார்.

யாழ்ப்பாணத்தில் தற்போதுள்ள இராணுவத்துக்குத் தளபதியாக இருப்பவரே இந்தக் கடத்தல்களுக்குக் காரணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். ''யாழ்ப்பாணத்தில் உள்ள தளபதி கொழும்பில் உள்ள பயங்கரவாதத் தலைவரிடம் இருந்து போர்க் காலத்தில் மாதாந்தம் 30,000 ரூபா பெற்று வந்தார். அவர்தான் இந்தச் சம்ப வங்களின் பின்னணியில் இருக்கி றார்'' என்றார் பொன்சேகா.

இலங்கை இராணுவத்துக்கு சரத் பொன்சேகா தளபதியாக இருந்தபோதும், கடத்தல்கள் மற்றும் காணாமல் போதல்கள் குறித்த குற்றச்சாட்டு அதன் மீது தொடர்ச்சியாகச் சுமத்தப்பட்டு வந்துள்ளது.

இதேவேளை, காணாமல்போனவர்களின் பெற்றோர் மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆட்கொணர்வு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். தமது பிள்ளைகளை நீதிமன்றில் முற்படுத்துமாறு யாழ்ப்பாண இராணுவத் தளபதிக்கு உத்தரவிடுமாறு நீதிமன்றிடம் அவர்கள் கோரியுள்ளனர்.

யாழ்ப்பாணக் குடாநாடு இராணுவத்தின் முழுமையான கட்டுப்பாட்டில் இருக்கும் நிலையில் அங்கு நடக்கும் எந்தவொரு சம்பவத்துக்கும் அவர்களே பொறுப்பு என்று மனுதாரர்கள் வாதாடியுள்ளனர். (உ-01)

## செனட் சபை யோசனையை நிராகரித்தது கூட்டமைப்பு

1 »

யக் கூட்டமைப்பு, மாகாண சபைகளுக் கான அதிகாரப் பகிர்வுக்கும் செனட்சபைக்கும் எதுவித சம்பந்தமுமில்லை. இதுகுறித்து எமது உறுதியான நிலைப்பாட்டை அரசிடம் ஆணித்தரமாக எடுத்துரைத்துள்ளோம் என்றும் அறிவித்துள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு செனட்சபை அமைக்கப்படுவதை இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளது என இலங்கை அரசுதான் கூறுகின்றது. அதனை இந்தியா கூறவில்லை என்று தமிழ்க் கூட்டமைப்பு தக்கவகையில் பதிலடி கொடுத்துள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் மீண்டும் செனட்சபை ஒன்று அமைக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. அரசின் இந்த முன்மொழிவை இந்தியாவும் ஏற்றுக்கொண்டுள்ளது என்றும் அது கூறியுள்ளது. இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் குறித்து இலங்கை அரசு வெளியிட்டுள்ள கருத்து தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவென்பது தொடர்பில் கேட்டபோதே, கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரான சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் 'உதயனு'க்கு கூறியவை வருமாறு:-

அரசுடன் பேச்சு இடம்பெற்ற காலகட்டத்தில் இந்த செனட்சபை குறித்து அது யோசனைகளை முன்வைத்தது. நாம் அதற்கு மிகவும் தெளிவானதொரு பதிலை வழங்கினோம்.

செனட்சபை என்பது மத்தியில் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வதாகும். மாகாணசபைகளுக்கான அதிகாரப் பகிர்விற்கும் அதற்கும் சம்பந்தமே இல்லை. செனட்சபைக்கு எதிரானவர்கள் நாங்கள் அல்லர் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

மாகாணசபைகளுக்கான சுயாட்சியை நாம் கோரிநிற்கின்றோம். அதிகாரப்பகிர்வென்பது எமக்கு அவசியம்.

பொலிஸ், காணி அதிகாரங்கள், நிதி, கல்வி, வேலைவாய்ப்பு உட்பட முக்கியமான சில விடயங்களை நிர்வகிக்கக்கூடியதொரு தீர்வையே நாம் எதிர்பார்க்கின்றோம்.

செனட்சபை என்பது முழுமையான அதிகாரப் பகிர்வின் ஒரு பகுதியே. எனவே, அதிகாரப்பகிர்வுடன் அதனைப்போட்டு அரசு குழப்பிக்கொள்ளக்கூடாது. தீர்வு விடயத்திற்கு செனட்சபை அமைப்பதானது முட்டாள்தனமான விடயமாகும்.

அரசுக்கு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என உண்மையானதொரு அக்கறையில்லை. எனவேதான், முட்டாள்தனமான கருத்துகளை வெளியிட்டு வருகின்றது. அதனை நம்புவதற்கு நாம் ஒன்றும் முட்டாள்கள் அல்லர் என்பதை அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

### அமைச்சர் பஸிலுக்குப் பதிலடி

இதற்கு முன்னர் இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா இங்கு வந்தபோது, அவருடன் இணைந்து நாம் உழவு இயந்திரங்களைக் கையளித்தோம். அவை தென்பகுதிக்குத்தான் சென்றன. இந்த விடயம் அமைச்சர் பஸிலுக்குத் தெரியாதா?

தற்பொழுது சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன. அந்த சைக்கிள்களும் எங்கு செல்லுமோ என்பது அவர்களுக்குத்தான் வெளிச்சம்.

வடபகுதியில் இடம்பெற்ற நிகழ்வுகளை நாம் புறக்கணிக்கவில்லை. எமக்கு சரியான நேரத்திற்கு அழைப்பு கிடைக்கவில்லை. இதுதான் உண்மையும் கூட- என்றார் எம்.பி.

## வடக்கில் அனைத்திலும் இராணுவத்தின் தலையீடு

1 »

காரங்களுக்கான பதில் செயலாளர் தோமஸ் ஓ மெலியா, தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பதில் செயலர் அலிசா சுயர்ஸ், யு.எஸ்.எயிட் திட்ட இயக்குநர் ஜேம்ஸ் பெட்னர் ஆகியோர் அடங்கிய குழு நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தது. இந்தக் குழுவுக்கும் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று நண்பகல் 12.15 மணி முதல் 1.15 மணிவரை இணைய அலுவலகத்தில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பின்போதே அமெரிக்கப் பிரதிநிதிகளுக்கு மேற்குறித்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன.

வடக்கின் தற்போதைய நிலை, தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மக்களை மீள் குடியமர்த்துவதில் காட்டப்படும் தாமதம் உட்பட பல்வேறு அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பாக இணையப் பிரதிநிதிகள் அமெரிக்கக் குழுவிடம் விவரமாக எடுத்து விளக்கினர்.

இந்தக் கலந்துரையாடலில் இணையப் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டதாவது:-

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று விரைவாக எட்டப்பட வேண்டும். தனித்துவமான அடையாளங்களுடன் தமது விடயங்களை தாமே தீர்மானிக்கக் கூடிய கட்டமைப்பைக் கொண்ட அரசியல் தீர்வு ஒன்றையே தமிழ் மக்கள் விரும்புகிறார்கள். அந்தத் தீர்வானது சமஷ்டி என்றும் அழைக்கப்படலாம். அல்லது வேறு பெயராலும் அழைக்கப்படலாம். அந்தத் தீர்வை அடைய மேற்கு நாடுகளின் பங்களிப்பு மேலும் மேலும் தேவைப்படுகிறது. தமிழ் மக்களுக்கு ஒரு நீதியான தீர்வு கிடைக்க மேற்கு நாடுகள் நிச்சயம் உதவும் என்ற எதிர்பார்ப்பு அவர்களிடம் உள்ளது. அதனைப் புரிந்து கொண்டு அந்த நாடுகள் தமது பங்களிப்பை மேலும் வலுப்படுத்த வேண்டும்.

வடக்கில் சிவில் நிர்வாகம் என்பது வெறும் வாய்ப்பேச்சில் மட்டுமே உள்ளது. மக்கள் தாம் விரும்பும் எந்தவொரு விடயத்தையும் சுயமாகச் செய்யமுடியாத நிலையில் இராணுவ நெருக்குவாரம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அனைத்திலும் இராணுவ மயம். இராணுவத்தினர் அழைக்கப்படாமல் எந்தவொரு நிகழ்வும் இங்கு இடம்பெறுவதில்லை.

இப்போது தமிழ் மக்களின் காணிகளை படைத்தரப்புக்கு அபகரிக்கும் முயற்சிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பெருந்தொகையான காணிகளை படைத்தரப்புக்கு ஒதுக்குமாறு அரச உயர் மட்டத்தில் இருந்து சுற்றுநிருபங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இது ஒரு திட்டமிட்ட அபகரிப்பு. எனினும் அச்சம் காரணமாக இவற்றைத் தட்டிக் கேட்க முடியாத நிலையில் மக்கள் உள்ளனர்.

மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கையிலும் எந்த வித முன்னேற்றமும் இல்லை. அவர்கள் அன்றாட உணவுக்கே கஷ்டப் படுகிறார்கள். அவர்களது பொருளாதார நிலைமை படுமோசமாக உள்ளது. சில இடங்கள் இன்று வரை மீளக்குடியமர அனுமதிக்கப் படாத நிலையில் உள்ளன. இந்த இடங்களின் இராணுவ பிரசன்னத்தை அதிகரிப்பதற்காகவே இந்த அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு பல்வேறு வழிகளிலும் நெருக்குவாரங்கள், அச்ச நிலை, பயமுறுத்தல் அகியவற்றுக்கு உட்பட்டே வடக்கில் தமிழ் மக்களின் வாழ்க்கை நகர்கிறது. - இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

இணையப் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை அமெரிக்கக் குழுவினர் கவனமாகச் செவிமடுத்தனர்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் சார்பில் சி.வி.கே. சிவஞானம், ஜேசன் செல்வராஜா, எஸ்.றமணதாஸ், பொன்மலர் இரா[illegible] ராஜா, எஸ்.திலகரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலண்டன் விசா

A/L மட்டுமே போதுமானது,
பல்கலைக் கழகம் ஒன்றில்
22.01.2012 உடனடி அனுமதி

**திசைகாட்டி பிறைவேற் லிமிட்டெட்**
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
021 221 9016

## ஆஸ்திரேலியா குடும்ப விசா

குடும்பமாக ஆஸ்திரேலியா
செல்ல 5 வருட விசாவிற்கு சட்ட
ரீதியான ஆலோசனை.

**திசைகாட்டி பிறைவேற் லிமிட்டெட்**
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
021 221 9016


# சேந்தாங்குளம் தாக்குதல் சம்பவம்

# ஜனாதிபதிக்கு வலி.வடக்கு பிரதேச சபை கண்டன அறிக்கை அனுப்பத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜன.21

டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் போது வலி. வடக்கு பிரதேச சபையின் தலைவர் சோ. சுகிர்தன் மற்றும் ஆளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான சி.ஹரிஹரன் ஆகியோர் சேந்தாங்குளத்தில் வைத்து படையினரால் தாக்கப்பட்டமையை வன்மையாகக் கண்டிப்பதோடு, இது தொடர்பில் சம்பந்தப்பட்ட கடற்படை அதிகாரிகளுக்கு எதிராக ஜனாதிபதி உடனடியாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறு வலி. வடக்கு பிரதேச சபையில் நேற்று மாலை இடம்பெற்ற விசேட அமர்வின் போது ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது-

கடற்படையினரின் தாக்குதலைக் கண்டித்து கண்டனத் தீர்மானத்தை ஆளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான வ.முருகேசு முன்மொழிந்து உரையாற்றினார். அவர் தனது கண்டனத் தீர்மானத்தில், பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் சக உறுப்பினர் கடற்படையால் தாக்கப்பட்டமை வண்மையாகக் கண்டிக்கதக்க செயலாகும்.

இவ்வாறான சமூக செயற்பாட்டில் ஈடுபட்டவர்கள் தாக்கப்பட்டமை மிகவும் கண்டனத்துக்குரியதாகும். இது தொடர்பாக ஜனாதிபதி உடனடியாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்- என்றார். (ஓ-15)





APRIL/MAY INTAKES IN PROGRESS

100% வீசா உத்தரவாதம் | 100% Guaranteed

**SETTLEMENT VISA -**
(கணவன் - மனைவி) மூலம் UK செல்பவர்களுக்கான வீசா தொடர்பில் ஆவணங்கள் வெற்றிகரமாகச் செய்து தரப்படும்.

**TOURIST VISA**
உட்பட அனைத்து நாடுகளுக்குமான வீசாவுக்களுக்குமான ஆலோசனைகளும், ஆவணங்களைத் தயார்படுத்துதல் தொடர்பில் நிபுணத்துவமான சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்.

**ENGLISH COURSES**

ENGLISH LANGUAGE COURSES – பிரபலமான ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது

A1–SETTLEMENT VISA வில் செல்பவர்களுக்கானது – 100% Success Rate

B1 / IELTS – STUDENT VISA வில் வெளிநாடு செல்பவர்களுக் கானது.

SPOKEN ENGLISH WITH GRAMMAR – அடிப்படையில் இருந்து ஆங்கில இலக்கண உரைநடையுடன் பேச விரும்புபவர்களுக்கானது.

**Eisc EXPRESS**
**INTERNATIONAL STUDIES & CONSULTANTS**
30-1/14, W.A.De Silva Mawatha Colombo-06 (Above Hotel Green Palace)
Tel: 2500207 E-mail: eisc_2007@yahoo.com Robin-0777 222 422 Selva-0714 299 935
Web: www.expresslanka.com

## அலுவலர் வெற்றிடம்

நெல்லியடி, சாவகச்சேரி, சங்கானை,
அச்சுவேலி மற்றும் யாழ் அலுவலகங்களில்
ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும்
பணிசெய்ய A/L படித்தவர்கள்
விண்ணப்பிக்கலாம்.
சுயவிபர கோவையுடன் நேரில் வரவும்

**MyWay English**
182, ஸ்ரான்லி வீதி, யாழ்பாணம்
077 33 63 456 021 2229505

## SHAMROCK

ஈச்சமோட்டை, யாழ்

A/L 2014 கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகளுடன்English & GIT

- Gr. 1 முதல் O/L வரை
- Eng. med. Gr.6 to 11
- Eng. Lit Gr.10 to 11
- புலமைப் பரிசில் Gr. 5
- I.C.T (செயன்முறைகளுடன்)
- சிங்களம்
- Spoken English

## கார் வாடகைக்கு உண்டு



திருமண வைபவங்கள் மற்றும் அதிவிசேட வைபவங்களுக்கான புத்தம் புதிய 2011 HYBRID கார் (வெள்ளை நிறம்) வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0777289283
(13167) S.மதன் 0778096873

நாட.அரங்கியல்
S.R.ரமேஷ்
Paper Class
ஆரம்பம் 21.01.2012 (Sat.12)
Sat., Sun. 12.00 - 1.00pm.
புதிய
பொருளியல் கல்லூரி
மணிக்கூட்டு வீதி, யாழ்.
(பெருமாள் கோயில் அருகில்)

## ஆங்கிலம் விற்பனைப்பொருள் இல்லை

MyWay மாணவர்களை விட சரளமாக கதைக்க அல்லது எழுத வேறு தனியார் கல்விநிறுவன மாணவர்களால் முடியுமாய் இருப்பின் முதல் நபருக்கு ஒரு இலட்சம் ரூபாய் பரிசு வழங்கப்படும் (தை 31 வரை)
மாணவர் பயிற்சியில் சேர்ந்த திகதி, பயிற்சிபெற்ற காலம், சேர்ந்து பயிற்சி பெற்ற மாணவர் விபரத்துடன் எந்தவொரு தனியார் கல்வி நிறுவனமும் மாணவரை போட்டிக்கு அனுப்பலாம்

**SPOKEN ENGLISH**
**WITH DIPLOMA CERTIFICATE**

சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் (இன்று)

NSB அருகில், கொடிகாமம் வீதி, நெல்லியடி காலை 8.00 – 9.00
நகரசபை அருகில், ஸ்ரேசன் வீதி, சாவகச்சேரி 10.00 – 11.00
182, ஸ்ரான்லி வீதி, யாழ்பாணம் மாலை 2.00 – 3.00
இலங்கை வங்கி மேல்மாடி, சங்கானை மாலை 4.00 – 6.00

**MyWay** 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

## பதவி வெற்றிடம்

SWISS TEK ALUMINIUM LTD நிறுவனத்துக்கு வடமாகா ணத்தில் 'விற்பனைப் பிரதிநிதி' ஆகப் பணிபுரியக் கூடிய ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் 18-27 வயதுக் கிடைப்பட்டவராகவும் க.பொ.த (சாதாரண தரம்) அல்லது உயர்தரத்தில் சித்தியடைந்தவராகவும், ஆங்கிலம் அல்லது சிங்கள மொழியில் தேர்ச்சிபெற்றவராகவும் மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கு சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். தகைமைச் சான்றிதழ்கள், சுயவிபரக்கோவை என்பவற்றுடன் 23.01.2012 அன்று 469, K.K.S வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள LANKA TILES SHOW ROOM அலுவலகத்தில் சமூகமளிக்குமாறு வேண்டுகிறோம்.

**NARAYANA HARDWARE TRADERS**
NO. 115, Stanley Road, Jaffna.
T.P:- 021 222 5390

## அரிய சந்தர்ப்பம்

A/L பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் செல்ல முடியாத மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

1) Telecommunication Systems Eng
2) Civil engineering / Quantity surveying
3) Electrical & Electronics Engineering

ஆகிய துறைகளில் தமிழ் மொழி விளக்கங்களுடன் கொழும்பில் உள்ள APPS நிறுவனத்துடன் இணைந்து City & Guilds exam (London) இற்கு பயிற்றுவிக்கப்படுகின்றது. பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு அந்தந்தத் துறைகளில் அதிகூடிய சம்பளத்துடன் வேலை வாய்ப்பு பெற்றுத்தரப்படும்.

அல்லது

London இல் மேற்படிப்பினைத் தொடர்வதற்கு Visa பெற்றுத் தரப்படும்.

வகுப்புக்கள் ஆரம்பம் 21.01.2012

விவரங்களுக்கு நேரில் வரவும்.

**JAFFNA TECHNICAL INSTITUTE**

கிளை: 92/1, இராமநாதன் வீதி, (கலட்டிச்சந்தி அருகில்) யாழ்ப்பாணம். T.P.: 0215670345

இல.45, மணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோயில் முன் வீதி) யாழ்ப்பாணம். T.P.: 0718561654, 0778249949

## G.A.Q. & B.A.

(யாழ்ப்பாணம், பேராதனை)

**தமிழ்**
சிவலிங்கராஜா
(இளைப்பாறிய தமிழ்த்துறைப் பேராசிரியர்)
ஜீவன்.

**பொருளியல்**
வரதராஜன்
(முன்னாள் விரிவுரையாளர்)

**மெய்யியல்**
S.S. மனோகரன்

**வரலாறு**
S.K. கமலநாதன்
(MA Hist)
விக்கி
(BA Hist Hons)

**அரசியல்**
சுகாஸ்
(L.L.B)

**இந்தநாகரீகம்**
ரமணன்

**அடிப்படைப் புள்ளிவிவரவியல்**
தவசேகர்

ஆரம்பம்
ஜனவரி 28

**BEACON**
(பட்டப்படிப்புகள் பிரிவு)
(வெலிங்டன் சந்தி)

*தனித்துவமான ஆசிரியர் குழு சங்கமமாகிறது*

**விக்னா கல்வி நிறுவனம்**
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

**A/L 2012 Day Class with Rivision**

*A/L 2013, 2014* — வர்த்தகப் பிரிவு

*Eco -M.C.சுதாகரன் (யாழ்.மாவட்ட பிரபல ஆசிரியர்)*
*Bist - S.முகுந்தன் (கொழும்பு, யாழ். பிரபல ஆசிரியர்)*
*Acc-M.R.றொஜிந்தன் (வலி:மேற்கின் பிரபல ஆசிரியர்)*

ஆரம்பம் 21.01.2012 சனிக்கிழமை
A/L 2012 (11 மணி), A/L 2012 Day class.
2013, 2014 நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.



## கலைமகள் அழகு நிலா BEAUTY ACADEMY

*மகளிருக்கான புதிய பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்*
1ஆம் பிரிவு - 23.01.2012
2ஆம் பிரிவு - 28.01.2012

3 மாத கால முழுமையான செயன்முறைப் பயிற்சியாகும், பயிற்சியின் நிறைவில் Diploma சான்றிதழ் வழங்கப்படும். வயதெல்லை கிடையாது. பயிற்சியினை விரும்பும் மாணவர்கள் அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும். சனி, ஞாயிறு தினங்களில் வகுப்புகள் இடம்பெறும்.

**பயிற்சிகள்**

- Facial (15 type)
- Laser treatment
- Laser Facial
- Bleaching (4வகை)
- Face Cleaning
- Pimple treatment
- Eyebrow threading
- கண் கருவளைய treatment
- Waxing
- Hair colouring
- Hair curling
- Hair Stratening
- Hair Perming (2வகை)
- Hair Cutting
- Mahicure pedeicure
- தலைமுடி உதிர்வுக்கான Oil Massage
- Hair dressing
- Bridal make up (6வகை)

பயிற்சி நேரம் - முற்பகல் 10 தொடக்கம் ஒரு மணிவரை, 2 மணி தொடக்கம் 4.30 மணி வரை

தொடர்பு- 0773719071, கலைமகள் அழகு நிலா, 390, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

கொஞ்சம் வைத்திருப்பவன் ஏழையல்ல. அதிகம் விரும்புகிறவன் தான் ஏழை.
*கன்பூசியஸ்.*


# வார வசந்தம்

01

உதயன் | 21 ஜனவரி 2012 | சனிக்கிழமை | பக்கங்கள்: எட்டு




# பறிக்கப்பட்ட நிலங்கள்...

ஈழத்து மண்ணில் பிறந்த பலர் சொந்த நிலம் கூட இல்லாமல் உறவினர் வீடுகளிலும், நண்பர்கள் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். தமிழ் மக்களின் காணிகள் இராணுவத்தால் அபகரிக்கப்பட்டுப் பல வருடங்கள் ஆகிவிட்டன. போர் முடிவடைந்து 3 வருடங்கள் கழியும் நிலையிலும் இதுவரையில் இராணுவத்தினரால் பொதுமக்களின் காணிகள் வழங்கப்படவில்லை. பொது மக்களின் வீடுகளில் இராணுவத்தினர் முகாம் அமைத்து தங்கியுள்ளனர்.

**இழக்க இனி எதுவுமில்லை**

மூன்று தசாப்த காலம் இடம் பெற்ற போரில் இடம்பெயர்ந்து இடம்பெயர்ந்து மக்கள் தாங்கள் சேகரித்து வைத்திருந்த சொத்துக்கள் அனைத்தையும் இழந்து நடுத்தெருவில் நிற்கிறார்கள். மக்கள் இடம்பெயரும்போது அவர்களுடைய காணிகளையும் வீடுகளையும் கைப்பற்றிக் கொண்ட இராணுவம் இன்னும் விடுவதாக இல்லை. பொது மக்களின் அன்றாட வாழ்வைத் தீர்மானிக்கும் சக்தியாகவே இலங்கை இராணுவம் தமிழர் பிரதேசத்தில் இருக்கிறது. இராணுவ முகாம்களை மூடுவதற்குப் பதில் புதிய இராணுவ முகாம்களை அமைப்பதில் தான் முன் நிற்கிறது. இராணுவ முகாம்களை மூடி விடமுடியாது என்று வெளிப் படையாக சொல்லும் மஹிந்த அரசு உள்ளளவில் தமிழர்களின் வீடுகளையும் காணிகளையும் வழங்க முடியாது என்று சொல்லி இருக்கிறார்.

விடுதலைப் புலிகள் இல்லாத இந்தக் காலப் பகுதியில் தான் அதிகளவிலான இராணுவத்தினர் தமிழர் பகுதியில் இருக்க வேண்டும் என்று மஹிந்தா சொல்லுகிறார்.

கடந்த டிசெம்பர் 21 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்ற வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் நிதியமைச்சர் என்கிற முறையில் பதிலளித்துப் பேசிய மஹிந்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார்.

பொதுமக்கள் வாழும் பிரதேசத்தில் இராணுவத்தைத் தக்க வைத்திருப்பதால் மக்கள் இராணுவ அடக்கு முறைக்கே உள்ளாக்கப்படுவார்கள். சிங்கள அரசின் கொடுங்கோல் ஆட்சியே நடைபெறும். இராணுவ முகாம்களையும் சோதனைச் சாவடிகளையும் மூடுவதன் மூலம் இராணுவப் பிரசன்னத்தைக் குறைப்பதன் மூலமாகத்தான் பிரச்சினைக்கு ஒரு முற்றுப் புள்ளியை வைக்க முடியும்.

அதைவிட்டு விட்டு இராணுவ முகாமை மூட முடியாது என்று அடம்பிடித்தால் இலங்கை மீண்டும் பழைய நிலமைக்கே திரும்பும் என்பது எவராலும் மறக்க முடியாது.

**650 ஏக்கர் காணி முல்லைத்தீவில் அபேஸ்**

வடக்கில் தமிழ் மக்கள் அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர இராணுவத்தினர் இன்னும் முழுமையாக அனுமதி வழங்காத நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் ஆகக் குறைந்தது 650 ஏக்கர் காணியை முப்படையினர் மற்றும் பொலிஸார் பயன்பாட்டுக்காகப் பாதுகாப்பு அமைச்சு கையகப்படுத்தி இருக்கிறது. இவை அனைத்தும் அரச காணிகள் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதற்கு மேலாகப் பொதுமக்களுக்கே சொந்தமான 260 ஏக்கர் காணியைப் பலவந்தமாகப் பெறும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

துணுக்காய் அமைதிபுரம் கிராம சேவையாளர் பிரிவில் சுமார் 200 ஏக்கர் அரச காணி கொமாண்டோ றெஜிமன்ட் படைப்பிரிவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அதே போன்று தென்னியங்குளம் கிராம சேவையாளர் பிரிவில் 46 ஏக்கர் அரச காணி படையினரின் பாவனைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. கோட்டை கட்டிய குளம் பகுதியில் 150 ஏக்கர் அரச காணியை தமக்கு வழங்குமாறு படையினர் விண்ணப்பித்திருக்கின்றனர். எனினும் அந்தக்காணி மக்களின் மீள்குடியமர்வுக்கு உரிய காணி என பிரதேச செயலகத்தில் தெரிவிக்கப்பட்டு அது படையினருக்கு வழங்கப்படவில்லை.

பழைய முறிகண்டி கிராம அலுவலர் பிரிவிலும் 80 ஏக்கர் அரச காணி படையினரின் பாவனைக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

தேறாங்கண்டல் பகுதியில் 250 ஏக்கர் அரச காணி 53 ஆவது படைப் பிரிவின் பாவனைக்கு எனவும் அதே இடத்தில் மேலும் 50 ஏக்கர் அரச காணி ஆயுதப் படையினரின் பாவனைக்கும் வழங்கப்பட்டுள்ளன.

அதேபோன்று ஆலங்குளம் கிராம அலுவலர் பிரிவில் 112 ஏக்கர் அரச காணியைப் படையினர் கோரியுள்ளனர். எனினும் அது தமிழ் மக்களின் அனுமதிப் பத்திரக் காணி எனத் தெரிவித்து அதனை வழங்கப் பிரதேச செயலகம் மறுத்துவிட்டது. அனிஞ்சியன் குளம் பகுதியில் பொலிஸ் திணைக்களத்துக்கு என 0.805 ஹெக்ரெயர் அரச காணி வழங்கப்பட்டுள்ளது. ஐயன்குளம் பகுதியில் 0.78 ஹெக்ரெயர் அரச காணி பொலிஸாரின் பாவனைக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அனிஞ்சியன் குளம் பகுதியில் மேலும் 25 பேர்சஸ் அரச காணி புலனாய்வுப் பிரிவின் பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளது.

**பிரதேச செயலகங்கள் ஊடாக நகர்வு**

துணுக்காய் பிரதேச செயலகம் ஊடாகவே இந்தக் காணிகளைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகளைப் பாதுகாப்பு அமைச்சு மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகின்றது. இதேபோன்று முல்லைத் தீவின் ஏனைய பிரதேச செயலகங்கள் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அரச காணிகளை இனங்கண்டு அவற்றைப் படையினரின் பாவனைக்காக கையகப்படுத்தும் நடவடிக்கைகளை பாதுகாப்பு அமைச்சு முன்னெடுத்து வருகிறது.

அந்தந்தப் பிரிவு பிரதேச செயலகங்கள் ஊடாக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நம்பகரமாக அறிய வந்துள்ளது. யாழ்.மாவட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தினுள் அடங்கும் பலாலி உயர் பாதுகாப்பு முகாம் பகுதி தவிர்ந்த பிரதேசங்களில் பொதுமக்களின் ஆயிரம் சொத்துக்கள் படையினர் மற்றும் பொலிஸாரின் ஆக்கிரமிப்பில் இருப்பதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. அவற்றில் 551 குடியிருப்பு வீடுகளும் உள்ளடக்கம்.

பொதுமக்களின் இந்தச் சொத்துக்களைப் படையினர் ஆக்கிரமித்திருப்பதால் 809 குடும்பங்களைச் சேர்ந்த 2,519 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலர் தமது சொத்துக்கள் மூலமான வருமானங்களை இழந்து நிர்க்கதியாகி உள்ளனர்.

**சொத்துக்களைக் கோரும் பொதுமக்கள்**

யாழ்ப்பாணத்தில் 435 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளன. அவற்றில் 153 பிரிவுகளில் பொதுமக்களின் சொத்துக்கள் படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ளன. அதாவது குடாநாட்டின் மூன்றிலொரு பகுதியில் பொதுமக்களின் சொத்துக்கள் படையினரின் வசம் சிக்கியுள்ளன. படையினர் வசம் உள்ள சொத்துக்கள் 551 வீடுகள், 308 காணிகளை மற்றும் தோட்டங்கள், 60 வியாபார நிலையங் கள் மற்றும் கடைகள் உள்ளடக்கம் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இவற்றில் சில சொத்துக்கள் மட்டுமே அவற்றின் உரிமையாளர்களின் விருப்பத்துடன் படையினருக்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டுள்ளன. ஏனையவர்கள் தமது சொத்துக்கள் தம்மிடம் உடனடியாக ஒப்படைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்.

இப்படியாக வடக்கில் தமிழரின் வீடுகள், காணிகள் படையினரின் வசம் உள்ளன. விடு தலைப் புலிகள் நிலத்துக்காக போராடினார்கள். ஆனால், அது முடியாமல் போனது. இன்று தமிழ் மக்கள் நிராயுதபாணியாக நின்று எப்படி முடியும். இந்த பலவீனத்தைப் பயன்படுத்தியே படையினர் இன்னும் பல தமிழர்களின் வீடுகளையும், காணிகளையும் கைப்பற்ற முடியும். அதற்கான செயற்பாடுகளே இடம்பெறுகின்றன.

**சொந்த நிலத்தில் அவல நிலை**

கீரிமலை சேந்தாங்குளம் பகுதியில் மக்கள் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு அந்தப் பகுதி கடற்படை அதிகாரி ஒருவரின்

**துன்னாலைச் செல்வம்**

அனுமதியுடன் பற்றைகள் மற்றும் குப்பைகளை எரியூட்டிய சமயம் கடமையில் நின்ற கடற்படையினர் சிலர் ''யார் இங்கே எரியூட்டியது. உடனே அணைத்து விட வேண்டும்'' என்று கட்டளை யிட்டவாறு அந்தப் பகுதியில் நின்ற மக்களைத் தாக்கினர்.

மக்கள் உடனடியாகப் பயத்தில் தீயை அணைத்த பின்னரும் தாக்கினர். சம்பவத்தை கேள்விப்பட்டு அங்கே சென்ற வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவரும் படையினரின் தாக்குத லுக்கு இலக்கானார்.

தமது சொந்தக் காணியில் நின்றவர்களுக்கே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. கேட்பதற்கு யாரும் இல்லாமல் அந்தப் பகுதி மக்கள் தவிக்கின்றனர். இந்த நிலைமைதான் இனிவரும் காலங்களில் தமிழ் மக்களுக்கு நிகழப்போகிறது என்பது கசப்பான செய்தி ஆகும். இதனைத் தடுக்க மக்களுக்காக எவருமே வரமாட்டார்கள். தாங்கள் நினைத்ததையே செய்வோம் என்ற இறுமாப்பில் படையினர் இருக்கப் போகின்றார்கள். விடுதலைப் புலிகளின் போராட்டம் முடிவடைந்து மூன்று வருடங்கள் கழிந்த நிலையில்தான் கூடுதலாகத் தமது நிலங்களை இழந்துள்ளனர். படையினர் கையகப்படுத்தியுள்ளனர். போராட்டம் நிகழ்ந்த காலப் பகுதியில் இது எங்கட நிலம் என்றிருந்த மக்கள் இன்று போராட்டம் முடிவடைந்த காலப் பகுதியில் நிலத்தைப் பறிகொடுத்து நிற்கிறார்கள். ✱


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்டத்தை கணிப்பிடுங்கள் (20)

**புதன் ஆதிக்கத்தில் பிறந்தவர்களின் பலன்கள் குறித்த விவரங்கள் மேலும் தொடர்கின்றன.**

**பெயர் எண் 59**

நகைச்சுவையுடன் எழுதும் ஆற்றல் இருக்கும். மக்கள் வசியம் மிக்க எண்ணாகும். எழுத்தின் மூலம் பிரபலஸ்தராக்கும். கதை, காவியம், கட்டுரை, கவிதை எழுதுவதில் தனித்திறமை பெற்றிருப்பார்கள். எழுத்துலகின் மேதையாவார்கள்.

**பெயர் எண் 68**

ஓரளவு அதிர்ஷ்டமான எண்ணாகும். தெய்வ பக்தி கூடிக் கொண்டேயிருக்கும். சிக்கனம் மேலோங்கியிருக்கும். நேற்று வரை பெரிய அந்தஸ்தான இடத்தில் இருந்தவர்கள் திடீரென்று கீழ்நிலைக்கு வரக்கூடும். முன்னேற்றம் நிலையாக இருக்காது.

**பெயர் எண் 77**

சுய முயற்சியும், தன்னம்பிக்கையும், தெய்விக ஈடுபாடும் இருக்கும். உழைப்பு அதிகமிருக்கும். நீதி நேர்மைக்குக் கட்டுப்பட்டு நடப்பார்கள். நல்ல வாழ்க்கைத் துணையை அடைவார்கள். புகழுடன் வாழ்வார்கள்.

**பெயர் எண் 86**

ஆரம்ப வாழ்க்கை துன்பத்துடனும், போகப் போக முன்னேற்றமும் கிட்டும். அரசாலும், பெரிய மனிதராலும் ஆதரவுகள் கிடைக்கும். கஷ்டப்பட்டு உழைத்து உன்னத நிலையை அடைவார்கள்.

**பெயர் எண் 95**

கடமை, கட்டுப்பாடுகளுடன் வீரதீரச் செயல்கள் புரிவார்கள். எப்போதும் சுறுசுறுப்புடன் இயங்குவார்கள். மக்கள் மத்தியில் விளம்பரம், நாகரிகமான தொழில்கள் செய்து முன்னேற்றமடைவார்கள்.

**பெயர் எண் 104**

ஆரம்பத்தில் கம்பீரமான வாழ்க்கை வாழ்வார்கள். எதிர்பாராத மாறுதல்கள் உண்டாகும்.

**புதன் ஆதிக்க எழுத்துக்களின் குணாதிசயங்கள்**

E--- உலக சுகம், கற்பனை, தெய்வீகம் மூன்றும் கலந்தது. அலைபாயும் மனதுடையவர்கள். தெய்வீக ஈடுபாடு இருக்கும். மனதில் படபடப்பும், ஒருவித பயமும் இருக்கும். ஆனால் வெளிக்காட்டிக் கொள்ள மாட்டார்கள். மனம் ஏதாவது காரியத்தைத் தூண்டிக் கொண்டேயிருக்கும். சதா எதையாவது ஒன்றை அடைய முற்படுவார்கள். பிறருக்கு விட்டுக் கொடுத்து அனுசரித்துப் போவார்கள். எழுத்து ஆராச்சித் துறைகள் கை கொடுக்கும்.

H--- நடக்கப் போகும் நிகழ்ச்சியை முன்கூட்டியே ஊகித்து அறியும் ஆற்றல் அதிகமிருக்கும். பாதுகாப்புடன் ஜாக்கிரதையாகவும் நடந்து கொள்வார்கள். சுகமான வாழ்க்கையும், தீர்க்க தரிசனமும் கிடைக்கும். சாமர்த்தியசாலிகள். எடுக்கும் காரியத்தில் பின்வாங்க மாட்டார்கள். சந்தர்ப்ப சூழ்நிலைகளைச் சரியாகப் பயன்படுத்தி வாழ்க்கையில் வெற்றிக்கொடி நாட்டுவார்கள். சுகமான சூழ்நிலையும், இல்லறமும் அமையும். வெற்றியை நோக்கியே இவர்களின் சிந்தனை இருக்கும். இல்லறத்தில் இன்பமும், பொது வாழ்க்கையில் புகழும் உண்டாகும். கலை ஆர்வமிக்கவர்கள்.

N--- வேகமான இதய உணர்ச்சியைப் பிரதிபலிக்கும். ஸ்திரமில்லாத மனோபாவத்தைக் குறிக்கும். பொருளாதாரம் நிலையாக இருக்காது. சுதந்திரமான மனப்பான்மை உடையவர்கள். தன்னிச்சையாக அனைத்துக் காரியத்தையும் செய்வார்கள். இந்த எழுத்து பெயரில் அதிகம் இடம்பெற்றால் உஷ்ணம், நரம்புச் சோர்வு, இரத்த ஓட்டப் பாதிப்பு, வாயுப்பிடிப்பு போன்ற நோய்கள் தாக்கும்.



X--- சதா மாறுபடும் குணமுடையதாகும். குழந்தை மனம் படைத்தவர்கள். உலக இன்பங்களை குறைவில்லாமல் அனுபவிப்பார்கள். அயராத உழைப்பாளிகள். மற்றவர்களை எளிதில் நம்பமாட்டார்கள். எடுத்த காரியத்தை முடிக்கும் வல்லமை படைத்தவர்கள்.

**பிறப்பு எண் 5 விதி எண் 1**

புதன் சூரிய ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் மிகுந்த சுறுசுறுப்புடன் இயங்குவார்கள். தான் செய்யும் காரியம் அனைத்தையும் விரைவில் செய்ய வேண்டுமென்று எண்ணுவார்கள். அயராத உழைப்பாளர்கள். பல தொழில் செய்யும் பண்பாளர்கள். மூளை மின்னல் வேகத்தில் செயல்படும். காரியங்கள் தாமதமானால் பிடிக்காது. சிந்தனை வளமிக்கவர்கள். கடினமான உழைப்பாளிகள்.

மற்றவர்கள் செய்ய முடியாத காரியங்களை எளிதில் செய்து முடிப்பார்கள். தன்னம்பிக்கையும், தளராத ஊக்கமும் உடையவர்கள். மூளை மின்னல் வேகத்தில் வேலை செய்யும். நுண்ணறிவு மிக்கவர்கள். தீவிர உழைப்பாளிகள்.

**அதிர்ஷ்ட தேதிகள்**

1,10,19,28,5,14,23

**அதிர்ஷ்ட நிறங்கள்**

மஞ்சள், வெளிர்நீலம், சந்தனம், பொன்னிறம், பச்சை, வெளிர்பச்சை, சாம்பல்.

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**

மாணிக்கம், கனகபுஷ்பராகம், தங்கபுஷ்பராகம், ஒபல், சூரியகாந்தக்கல், வைரம், சிர்க்கான்.

**பிறப்பு எண் 5 விதி எண் 2**

புதன் சந்திரன் ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் எப்போதும் ஏதாவதொரு சிந்தனையிலேயே மூழ்கி இருப்பார்கள். எதிலும் முன்னெச்சரிக்கை உள்ளவர்கள். நல்ல லட்சியங்கள் உடையவர்கள். தானே எந்தவொரு காரியத்தையும் முன்னின்று நடத்துவார்கள். முன்கோப மிக்கவர்கள். வேகமான முன்னேற்றத்தில் குறிக்கோளாக இருந்து வெற்றி பெறுவார்கள். நகைச்சுவை கலந்த பேச்சு இருக்கும்.

எளிதில் யாரிடமும் பழகி விடுவார்கள். பேச்சாற்றல் மிக்கவர்கள். மனோசக்திகளுக்குக் கட்டுப்பட்டவர்கள். தெய்வ நம்பிக்கை மிக்கவர்கள். மிகவும் கடினமாக உழைக்கக் கூடியவர்கள். நல்ல வாழ்க்கைத் துணை அமையும்.

**அதிர்ஷ்ட தேதிகள்**

1,10,19,28,6,15,24,5,14,23

**அதிர்ஷ்ட நிறங்கள்**

மஞ்சள், வெளிர்நீலம், சந்தனம், பொன்னிறம், பச்சை,சாம்பல் நிறம், பச்சை, வெளிர் பச்சை, வெள்ளை.

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**

முத்து, வைரம், சந்திரகாந்தக்கல், ஓபல், வைடூரியம், அக்கோமரின், டைகர்ஸ்ஐ, சிர்க்கான்

**பிறப்பு எண் 5 விதி எண் 3**

புதன் குரு ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் கட்டுப்பாடான வாழ்க்கை வாழ்வார்கள். இறைபக்தி மிகுந்தவர்கள். எதிலும் அவசரப்பட மாட்டார்கள். நிதானமாக யோசித்து ஒருநல்ல முடிவுக்கு வருவார்கள். அமைதியாகப் பேசக்கூடியவர்கள்.

தோல்விகளைக் கண்டு துவள மாட்டார்கள். அஞ்சா நெஞ்சம் கொண்டவர்கள். அதிகம் பேசமாட்டார்கள். உடல் பலத்தைவிட மனபலம் மிக்கவர்கள். கடினமான உழைப்பாளிகள். மிகவும் நாணயமிக்கவர்கள்.

துணிந்து எந்தக் காரியத்திலும் செயலாற்றி வெற்றி பெறுவார்கள். அதிர்ஷ்டக் குறிப்புக்களை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

**அதிர்ஷ்ட தேதிகள்**

1,10,19,28,3,12,21,30,9,18,27,5,14,23

**அதிர்ஷ்ட நிறங்கள்**

வெளிர்நீலம், மஞ்சள், ரோஸ், ஆரஞ்சு, கத்திரிப் பூ நிறம், சாம்பல் நிறம்.

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**

கனகபுஷ்பராகம், மஞ்சள் புஷ்பராகம், தங்கபுஷ்பராகம், எமிதிஸ்ட், வைரம், சிர்க்கான். *(தொடரும்)*

# நிலைத்திருக்கும் நினைவுகள்

தமிழ்க் கவிதை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பாரம்பரியம் உடையது. அன்று தொட்டு தமிழ்க் கவிதைகள் சிறிய சிறிய வடிவமாற்றங்களுடன் வளர்ந்து வந்து இன்று புதுக் கவிதையாக பரிணமித்துள்ளது. மகாகவி பாரதி கவிதைக்கு - புதுக்கவிதைக்கு அடியெடுத்துக் கொடுத்ததன் பின், தமிழ்க் கவிதையைப் பொறுத்தவரை புதுக் கவிதை பலருக்குக் களம் அமைத்துக் கொடுத்துள்ளது. அந்த வகையில் ஈழத்து தமிழ்க் கவிதையும் பல புதுக்கவிஞர்களைத் தந்துள்ளது. ''மகாகவி'' என அழைக்கப்படும் உருத்திரமூர்த்தி, நீலாவணன் சி.நடராசா, முருகையன் போன்றோர் ஈழத்துக் கவிதையை அலங்கரித்தவர்கள். அவர்களுக்குப்பின் பல கவிஞர்கள் ஈழத்துக் கவிதையை அலங்கரிக்க முயன்று கொண்டிருக்கின்றனர். அந்த வகையில் பல புதிய கவிஞர்கள் கவிதையாற்றல் மிக்கவராக இருப்பினும் வெளியீட்டு வசதி, ஏனைய வசதிகள் இல்லாத இடர்பாட்டால் தமது கவிதைகளை வெளியுலகுக்கு வெளிப்படுத்தாமல் இலைமறை காயாகி மறைந்து வாழ்கின்றனர். இதனால் ஈழத்தில் தரமான கவிதைகள் தமிழ் இலக்கிய உலகை அலங்கரிக்காமல் மறைந்தே விடுகின்றன. இந்த வகையில் தான், நான் எனது வாழ்க்கையில் கண்ட ஒரு கவிஞரை வெளியுலகிற்கு தெரியப்படுத்த விழைகின்றேன்.

''நிலைத்திருக்க'' என்ற கவிதைத் தொகுப்பை, திருமதி. ஜெயக்குமாரி கந்தவேள் வெளியிட்டுள்ளார். ஒரு நாள் ஒரு குறள் என்பது போல் ஒரு நாள் ஒரு கவிதை படித்து குறிப்பெடுத்தேன்.

''நிலைத்திருக்க...'' கவிதைத் தொகுப்பின் உள்ளே சென்றேன். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈஸ்வர நாதபிள்ளை குமரன் அணிந்துரை வழங்கி கவிஞரை வெளியுலகுக்கு காட்டியிருந்தார்.

இருபத்தொரு கவிதைகள் நூலை அலங்கரித்தன. முதலாவது கவிதை ''கடவுள்'' பற்றியது. அடுத்து ''அன்னை'' பற்றியது.

கவிதைகளை விளக்க சித்திரம் சேர்த்திருப்பது கவிஞரின் சிறந்த உத்தியாகும்.

மௌனத்தின் வரிகள் சில

*''..... காலங்கள் மாறின*
*மண்டையோடுகள்*
*மண்ணில் விதைக்கப்பட்டன*
*அது வளர மனிதனே*
*செந்நீரூற்றினான்*
*வானம்..... மௌனமானது....''*

*''பெண்ணினம் இன்றும்''* என்ற கவிதையில் சமகால யாழ்ப்பாண சமுதாயத்தில் பெண்ணின் நிலை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

''கலியுகக் கண்ணன்'' என்ற கவிதையில்

*''கெயிட்டியில்*
*எத்தனை எத்தனை*
*கண்ணன்கள்*
*தளிர்கள் முதலாக*
*பழுப்பேறிப்போன*
*இலைகள் வரையாக*
*பசிப்பிணிக்கு மருந்தாக*
*மண்ணை உண்டனவாம்''*

இது போன்ற கவிதை வரிகள் இன்றைய கவிஞரிடம் எதிர்பார்த்து இருப்பது எட்டாக் கனியாக இருக்கின்ற வேளையில் ஜெயக்குமாரி கந்தவேளிடம் மட்டும் கவிதைத் துளியாகக் கிடைக்கின்றது.

மொத்தத்தில் அனைத்துக் கவிதைகளும் ''கவிதை'' என்பதற்கு இலக்கணமாக அமைந்துவிட அவை கவிதைத் தொகுப்பினுள் வார்க்கப்பட்டு கவிஞரின் கவியாற்றலையும் படைப்பின் சிறப்பையும் வெளி உலகுக்கு காட்டியுள்ளன.


இவர்கள் போன்ற கவிஞர்களை இலக்கிய வட்டங்கள் கண்டு கொள்ளாதிருப்பது இலக்கிய ஆர்வலர்களிடையே பல வினாக்களை எழுப்புமா? ஏனெனில் அவ்வட்டங்கள் தங்கள் பணியைச் சரியாகச் செய்யும் போது தான் இலை மறை காய்போன்று இருக்கின்ற பல கவிஞர்கள் இலக்கிய உலகுக்கு வெளிக்கொணரப்படுவர் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும்.

**பா.பாலகணேசன்**
**விரிவுரையாளர்(தமிழ்)**
**யாழ்.தேசிய கல்வியியற்கல்லூரி**
**கோப்பாய்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைப் பாம்பும் மான் குட்டியும்





(கடந்த வாரத் தொடர்ச்சி)

''ஆமாம் ஏன் அழுகிறாய்'' என்று கேட்டது குறட்டி. மான் தனது அழுகையை நிறுத்திவிட்டு உறுதியான குரலில் சொன்னது. ''இப்போது சாவு என்பது நிச்சயமாகி விட்டது. சாகும் முன்னர் அம்மாவின் உயிரைக் காப்பாற்றிய பெருமையாவது என்னைச் சேரும். நீங்கள் மனது வைத்தால் எனக்கு உதவலாம்'' என்றது.

''நான் எப்படி உதவ முடியும்? என்றது. குறட்டி. ''மொட்டச்சி அம்மன் பாறைக்குச் சென்று நாவல்பழங்களை எடுத்து என் அம்மாவிற்கு கொடுத்துவிட்டு மீண்டும் இங்கு வந்து சேருகிறேன். பின்னர் உன் விருப்பப்படி என்னைக் கொன்று சாப்பிடு'' என்றது மான். ''நீ மீண்டும் என்னிடம் திரும்பி வருவாய் என்பதற்கு என்ன உத்தரவாதம்?''

''நான் சொல்வதில் உனக்கு நம்பிக்கை இல்லை என்றால் நீ என் கூடவே வா... நாவல் பழங்களை என் தாயிடம் சேர்த்ததும் நீ என்னைக் கொன்று சாப்பிடு'' ''உன்னை விட்டால் என்னால் பிடிக்க முடியாது? உன் வேகம் என்ன, என் வேகம் என்ன?'' என்றது குறட்டி. ''என் மீது நம்பிக்கை இல்லை என்றால் நீ என்ன சொல்கிறாயே அதற்கு நான் கட்டுப்படுகிறேன்''

''நான் உன் உடலை சுற்றியபடியே இருப்பேன் என்னைச் சுமந்தபடியே செல்ல வேண்டும்'' என்று சொன்னது குறட்டி. மான் அதற்கு ஒப்புக்கொண்டது. குறட்டியைச் சுமந்தபடியே சென்றது மான். மொட்டச்சி அம்மன் பாறைக்குச் சென்று மான் நாவல்பழங்களை சேகரித்துக் கொண்டது.

மலைப்பாம்பு தன் உடலைச் சுற்றியிருக்க, உற்சாகத்துடன் நடந்தது. தனது அம்மாவுக்காகத் தன்னுடைய உயிரைக் கொடுக்க ஒரு வாய்ப்பு கிடைத்தது அதற்கு சந்தோஷமாக இருந்தது.

மான் தன் இருப்பிடத்திற்கு அருகில் வந்தது. தன் இருப்பிடத்தையும், படுத்துக் கிடக்கும் அம்மாவையும் காட்டியது. குறட்டி அதன் உடம்பிலிருந்து மெல்ல இறங்கியது.

(தொடரும்)

# பொது அறிவுக் களஞ்சியம்

01. சிகிரியாக் குகை வடிவங்களை வடிவமைத்தவர் யார்?
02. மூவின மக்களும் வழிபடும் புனிதமான மலை எது?
03. ஏழு வெந்நீர் ஊற்றுக்கள் உள்ள இடம் எது?
04. சிங்கள மொழித்துறைக்கு அளப்பரிய சேவையாற்றியவர் யார்?
05. இலங்கையில் உள்ள ஒரே ஒரு குடா நாடு எது?
06. ஒட்டுமொத்தமாக தேவைப்படும் மின்சக்தியில் 24 வீதமானது பெறப்படும் துறை எது?
07. இலங்கையின் மகளிர் அபிவிருத்திக்காக தம்மை அர்ப்பணித்த முதல் பெண்மணி யார்?
08. வெண்புறாவே வெண்புறாவே எனத் தொடங்கும் இலங்கையின் சமாதான பாடலுக்கு குரல் கொடுத்தவர் யார்?
09. பலநோக்குத் திட்டங்களை உருவாக்கியவர் யார்?
10. இலங்கையில் நுகர்வோரை பாதுகாக்கும் சட்டம் எது?

*01. காசியப்பன்*
*02. சிவனொளிபாதமலை*
*03. கன்னியா (திருகோணமலை)*
*04. பேராசிரியர் எதிரி வீர சரத்சந்திர*
*05. யாழ்ப்பாணம்*
*06. நீர்*
*07. விஷியன் குணவர்த்தனா*
*08. நிரோசா விரோஜினி*
*09. டி.எஸ். சேனநாயக்கா*
*10. 1979 ஆம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்*

ஏ.எறிக்.

# பிறேசில்



பிறேசிலின் தலை நகரமான பிரேசிலியா அமைந்துள்ளது. இதன் பரப்பளவு 8511965 சதுர கிலோ மீற்றராகும். இங்கு வாழும் சனத்தொகை 159.1 மில்லியன். இங்கு வாழும் எழுத்தறிவு 81 வீதம், ஆயுள் காலம் 67 ஆண்டுகள். இங்கு பயன்படுத்தப்படும் நாணயம் ரியால். ஐரோப்பியர், ஐரோப்பிய இந்தியர்கள் என்ற பிரிவை உடைய இன மக்கள் வாழுகின்றனர். இந்த மக்கள் கத்தோலிக்க மதத்தை பின்பற்றுகின்றனர். பிரேசில் தென் அமெரிக்காவிலுள்ள பெரிய நாடாகும். இங்குதான் அமேசன் நதி பாய்கிறது. இது உலகில் சனத்தொகை கூடிய நாடுகளில் ஏழாவது இடத்தை பிடிக்கிறது. இது ஒரு விவசாய நாடாகும். கோதுமை, கோப்பி, பால்பொருள்கள் போன்றன இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன.

சா.ஜிந்துஜா,
கோண்டாவில்.

# விடுகதைகள்

1. கூவி அழைப்பான்; கூடி உண்ணுவான் அவன் யார்?
2. அவனுக்கு வீடு, மற்றவருக்கு வலை அது என்ன?
3. கண்ணீர் விட்டே கடைசிவரை ஒளி தருவான் அவன் யார்?
4. ஆட்டு வித்தால் ஆடாமல் இருக்காது அது என்ன?
5. வீடு வாசல் காப்பான், விசுவாசமாய் இருப்பான்; கடிக்கவும் மாட்டான்; குரைக்கவும் மாட்டான், கதவை ஒட்டிக் கிடப்பான் அவன் யார்?
6. வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ, அது என்ன?
7. உயிரில்லாத நீதிபதி, ஒழுங்காய்த் தீர்ப்பு வழங்கிறார் அவர் யார்?

*1. காகம் 2. சிலந்தி 3. மெழுகுவர்த்தி*
*4. ஊஞ்சல் 5. பூட்டும், சாவியும்*
*6. சிரிப்பு 7. தராசு*

பா.தமிழிசை
தரம்-4, புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை.

# நாடுகளின் தேசிய விளையாட்டுக்கள்


1. இலங்கை - எல்லே, கரப்பந்தாட்டம்
2. இந்தியா - கொக்கி, கபடி
3. ஜப்பான் - கராத்தே
4. ஆஸ்திரேலியா - கிரிக்கெட்
5. துருக்கி - மல்யுத்தம்
6. பாகிஸ்தான் - கொக்கி
7. ஸ்பெயின் - ஜல்லிக்கட்டு
8. கனடா - பனிக்கொக்கி
9. ஐக்கிய அமெரிக்கா - பேஸ் போல்
10. ஸ்கொட்லாண்ட் - கால்பந்து

யோ.அ.ஜெனோஷன், 9 A
புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.



மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் கால்கோள் விழாவின் போது தரம் ஒன்று புதிய மாணவர்களை தரம் இரண்டு மாணவர்கள் பாடசாலையில் உள்ள ஆஞ்சனேயர் ஆலயத்தில் இருந்து அழைத்து வருகின்றனர். இதன் போது மாணவி ஒருவர் உரை நிகழ்த்தினார். (100)

# முயல்




குட்டி முயல் பாருங்கள்
குதித்து குதித்து ஓடுது
பஞ்சு போன்ற வெண்முயல்
பதுங்கி பதுங்கி ஓடுது
குட்டிக் குட்டிப் பல்லினால்
கரட் கடித்து தின்னுது
குண்டு போன்ற கண்களை
உருட்டி உருட்டிப் பார்க்குது

த.பிரணவி
யா/ திருஞானசம்பந்த வித்தியாசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னனின் நகர சோதனை

மன்னனுக்குப் பயங்கர கோபம், அவர் புறப்பட ஆயத்தமாக, சூழ நின்ற அமைச்சர், பிரதானிகள் அவரை வழி மறித்தார்கள். அவரது கடமையுணர்வுக்குத் தடை போட்டார்கள், வாசற் கதவை சாத்திவிட்டார்கள். மன்னனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை, புரியவில்லை, குழப்பம் (இப்படியாக இருந்தால்தான் மன்னன் ஆக முடியும்) ஏன் என்னைத் தடுக்கின்றார்கள்? எவ்வளவு மாதங்களாகிவிட்டது? நாட்டு மக்கள் என்னைப் பற்றி, என் ஆட்சியைப் பற்றி என்ன நினைப்பார்கள்? இவர்களுக்கு எனது நிலை புரியவில்லையா? மன்னன் பற்களை நறநறவெனக் கடித்தான்; அவனது பெரிய மீசை துடிதுடித்தது; மார்பு விம்மித் தாழ்ந்தது; புஜங்கள் புடைத்து நின்றன; அங்கும், இங்கும் மன அமைதியின்றி நடை பயின்றான். விழிகளை நாலாபக்கமும் சுழற்றினான். (அரசனைப் பற்றி இப்படித்தான் எழுத வேண்டும், நாடகங்களில், கதைகளில் இப்படித்தான் சொல்கின்றார்கள். நான் மன்னனை நேரில் பார்த்தவனில்லை)



''ஏன் அமைச்சரே என்னைத் தடுக்கின்றீர்கள்? எனக்கு என் தொழிலே மறந்துவிடும் போல் உள்ளது. எனக்கு இன்று காரணம் சொல்ல வேண்டும்... பிறகு... என் வாளுக்கு வேலை கொடுத்து விடாதீர்கள்." மன்னன் கோபாவேசமாகக் கத்தினான். மற்றவர்களும் நடுங்கிப் போனார்கள். இனியும் ஒழிக்க முடியாது. உண்மையைச் சொல்லியே ஆகவேண்டும். அமைச்சர் சொல்லத் தொடங்கினார்.

''மன்னா! நான் சொல்வதைப் பொறுமையாகக் கேளுங்கள். பிரபு, தங்களை நகர சோதனைக்குப் புறப்படாமல் தடுப்பதற்கான காரணத்தைச் சொல்கின்றேன். நாட்டில் மக்கள் தொகையை விட நாய்களின் பெருக்கம் அதிகமாகிக் கொண்டு வருகின்றது. தெருவில், சந்துபொந்துகளில் நாய்களின் ராஜ்ஜியம்தான் நடக்கின்றது. வெளியில் நாட்டு மக்கள் தலைகாட்ட முடியாமல் (முன்பு அடையாள அட்டைப்பிரச்சினை) வீட்டிலே முடங்கிக் கிடக்கின்றார்கள். தெருவுக்குப் போனால் நாய்களினால் கடியுண்டுபோகின்றனர். தினமும் இரண்டாயிரம் பேர் இந்த நிலைக்கு ஆளாகின்றார்கள்.

இதைத் தவிர தெருவில் குறுக்கே ஓடும் நாய்களினால் வீதி விபத்துக்கள். நாய்களினால் பாதிப்படைந்தவர்களுக்காக தனியாகச் சிகிச்சை நிலையம் அமைத்து இருக்கிறோம் மன்னா. எமது நாட்டில் 30 இலட்சத்துக்கு மேல் கட்டாக்காலி நாய்கள் இருப்பதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. பாவம் எமது அரண்மனை ஊழியர்கள் கூட நாய்களினால் கடியுண்டு சிகிச்சை பெறுகின்றார்கள். இதனால் பல மக்களது சேவைகள் முடங்கிப் போயுள்ளன; காலையில் மக்கள் சேவல் கூவும் சத்தத்தை விட்டு, நாய்களின் ஊளைச் சத்தத்தில்தான் கண் விழிக்கின்றார்கள்..... எனவே இந்த நிலையில் தாங்கள் இரவில் நகர சோதனைக்கு புறப்படுவது.....''

மன்னன் திகைத்தான். நிலைமை இப்படி விபரீதமாகப் போய்விட்டது. என்ன செய்வது? எவ்வாறு தீர்வு காண்பது? இந்தியாவை உதவி கேட்கலாமா? சீனாவை உதவி கேட்கலாமா? அல்லது அமெரிக்காவை...? நாய்களுக்கு இரண்டு கால்களெண்டால் உடனே உதவி கிடைத்திருக்கும். அதுவும் அவை தமிழில் பேசியிருந்தால் சொல்லத் தேவையில்லை.

''நாய்கள் மேல் இரக்கம் கொண்டது, இப்போது பிரச்சினையை உருவாக்கி விட்டது. அவைகளின் உயிர்களுக்கு மதிப்புக் கொடுத்தேன் சரி நான் இதற்காக பிரச்சினை வராமல் தடுக்க, நாய்களின் இனப்பெருக்கத்தைத் தடுக்க தடுப்பூசி போடும் நடவடிக்கைகளை செய்யும்படி ஆணையிட்டு இருந்தேனே. அந்த நடவடிக்கை ஒழுங்காக நடைபெறவில்லையா? அந்த நடவடிக்கை சரியாக நடைபெற்று இருந்தால் நாய்களின் பெருக்கம் அதிகரித்திருகாதே?''

மன்னன் இவ்வாறு சொல்லியபடி அமைச்சர், பிரதானிகளைப் பார்த்தான்.

''உண்மைதான் மன்னா, தாங்கள் மிகவும் பொறுப்புடன் உத்தரவு போட்டீர்கள், அது சரிவர அதிகாரிகளினால் நடைமுறைப் படுத்தப் படவில்லை. சிலவேளை தடுப்பூசியை நாய்களுக்கு போடாமல் வேறு ஜீவராசிகளுக்குப் போட்டுவிட்டார்களோ தெரியாது. மன்னன் ''சரி எனக்கு நாட்டின் தற்போதைய நிலை புரிந்து விட்டது. எனக்கு நகர சோதனைக்கு புறப்பட மனம் துடிக்கின்றது. என்னுடன் நீங்களும் நகர சோதனைக்கு வாருங்கள்.'' என்றார். அமைச்சர், பிரதானிகள் திகைத்துப் போனார்கள். வேறு மாற்று வழியில்லை. விதியை மாற்ற முடியுமா? புறப்பட்டார்கள். அவர்கள் சென்ற இடமெல்லாம் ''நாய்களின் வரவேற்பு அமர்க்களமாய் இருந்தது. கூட்டம் கூட்டமாய் கட்சிபேதமின்றி மகத்தான வரவேற்பு. நகர மாந்தர்கள் ஒருவரையும் வெளியில் காணவில்லை. நாய்களின் கடியிலிருந்து தப்புவது பெரும்பாடாய் இருந்தது. மன்னன் நாட்டின் ஒரு குடிமகனோடு தன்னும் கதைக்கவேண்டுமென விரும்பினான். பிரதான வீதியிலிருந்து குச்சொழுங்கைக்குத் திரும்பினான்.

ஒரு வீடு தென்பட்டது. வாசலில் நாய்கள் நாக்குகளைத் தொங்கப் போட்டபடி நின்று குரைத்தன. வீட்டின் உள்ளேயும் விதம் விதமான நாய்கள் சுற்றித்திரிந்தன. மன்னனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. வீட்டிலிருந்து ஒரு வயோதிப மாது வந்தாள். மன்னனைக் கண்டாள். (மன்னர் மாறுவேடத்தில் இருந்தார் அடையாளம் தெரியவில்லை) விவரம் கேட்டாள். மன்னன் கதை கேட்க அவளிடம் பேச்சுக் கொடுத்தார். ''ஏனம்மா இவ்வளவு நாய்களை வளர்க்கிறீர்கள்? உங்களுக்கு நாய்களெண்டால் அவ்வளவு விருப்பமா?''

''வாயை மூடுங்கள், இவையெல்லாம் என் நாய்கள் அல்ல. எனக்கு நாய்களைக் கண்டால் பிடிக்காது. அயலட்டையில் நாய்களை வளர்த்தவர்கள் சொல்லிக்கொள்ளாமல் கொழும்பு, வெளிநாடென்று போய்விட்டார்கள். அதுகள் அலைந்து திரிந்து கடைசியில் என்னோடு ஒட்டிக்கொண்டு விட்டன. நானும் தனிய என்ன செய்வது? நானும் போட்டனென்டால் உதுகளை யார் பார்க்கிறது? எல்லாம் அநாதைகளாய்ப் போய்விடும். பெத்த பிள்ளையளை விட உந்த வாயில்லா சீவன்கள் தானே சொன்ன சொல்லுக் கேக்குதுகள். எனக்கு இப்ப சரியான பணப் பிரச்சினை. இவையளைப் பராமரிக்கக் கஸ்ரமாய் இருக்கு. வெளிநாடு போன பிள்ளையளும் காசு அனுப்பிறேல்லை. மன்னனிடம் இதுகளுக்காக 'நிவாரணம்' கேட்க வேண்டியதுதான்'' என்றாள். நிவாரணம் என்றவுடன் மன்னன் அதிர்ச்சியடைந்தான். நாடு இருக்கும் நிலைக்கு இது பெரிய சிக்கலாகிப்போய் விடும். மாற்று வழியை யோசிக்கத் தொடங்கினான். நாய்களை ஒழிப்பதற்கு ஒரு நாடாவது உதவி செய்யாமலா விடப்போகிறது?

**தொல்புரம்.சி.கதிர்காமநாதன்**

# மனப்பாடப் பகுதிகளை நினைவுபடுத்துவது எப்படி?

வார்த்தைக்கு வார்த்தை நினைவுபடுத்தவேண்டிய தேவை பொதுவாக மாணவ மாணவியருக்குத்தான் ஏற்படும். அதிலும் குறிப்பாகத் தேர்வில் நிறைய மதிப்பெண்கள் எடுக்கவேண்டியிருப்பதற்காகச் செய்யுள் பகுதிகள், மேற்கோள் காட்டப்படவேண்டிய வாக்கியங்கள். இவற்றை மனப்பாடம் செய்தாகவேண்டிய கட்டாயம் இருக்கிறது. இதற்கு நேரடியாக நினைவாற்றல் பயிற்சி முறைகளைப் பின்பற்றுவதற்குப் பதிலாக பழக்கவழக்கமே நினைவாற்றல் என்ற தலைப்பின் கீழ் கூறியுள்ளபடி இவற்றை வழக்கத்திற்குட்படுத்திக்கொள்ள வேண்டும். நாம் தினமும் 'தமிழ்த்தாய் வாழ்த்து' மற்றும் 'தேசிய கீதம்' பாடும்போது எப்படி அதை நினைவில் வைக்கிறோம் எனச் சற்றுப் புரிந்துகொண்டிருப்பீர்களானால் மனப்பாடப் பகுதிகளை எப்படிப் படித்து மனதில் நிறுத்துவதென்பது மிகவும் எளிது என்பதை உணர்வீர்கள்.

சிறு வயதிலிருந்தே அடிக்கடி கேட்டும், தொடர்ந்து பாடியும் வந்திருப்பதால் நம்மால் இதை மனப்பாடமாக பாடவோ, சொல்லவோ முடிகிறது. அவ்வாறே திருக்குறளின் முதற் குறளான ''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு'' என்று நம்மால் மனப்பாடமாகச் சொல்ல இயலும். அதற்குக் காரணம் ஒவ்வொருமுறையும் திருக்குறளை வாசிக்கும்போதும் முதல் குறளிலிருந்துதான் தொடங்கியிருந்தோம். அடிக்கடி தொடர்ந்து வாசித்தோ கேட்டோ பழக்கப்பட்டிருந்ததால் அந்தக் குறள் நமக்கு எளிதாக நினைவுக்கு வருகிறது. பள்ளியின் தொடக்கத்திலிருந்தே மனப்பாடப் பகுதிகளைத் தினமும் காலையிலும் மாலையிலும் அல்லது ஏதாவது ஒரு முறை அல்லது இரண்டு முறை தொடர்ந்து உரக்கப் படித்தால் தேர்வு நெருங்கும் நேரத்தில், விழுந்து விழுந்து படிக்க வேண்டிய அவசியமில்லை. மனப்பாடப் பகுதிகளைச் சொந்த வார்த்தையில் எழுதுவதென்பது சாத்தியப்படாது. எனவே உள்ளதை உள்ளவாறே எழுத அதைப் பழக்கத்துக்கு உட்படுத்துவதே சிறந்தது.

அவ்வாறே நீங்கள் நல்ல பேச்சாளராகவோ நல்ல எழுத்தாளராகவோ மாற விரும்பினால் பிரபலமானவர்கள் கூறிய அல்லது எழுதிய ஏராளமான மேற்கோள்களை (Quotes) காட்டவேண்டிய நிலை ஏற்படும்.

நீங்கள் ஏற்கனவே வாசித்த அல்லது கேட்ட நல்ல மேற்கோள்களைத் தினமும் காலையிலும் மாலையிலும் பிறருக்கு வகுப்பு எடுக்கும்போதும் அடிக்கடி வாய்ப்புக் கிடைக்கும்போதும் பேசிப் பழக்கப்பட்டிருந்தால் அந்த மேற்கோள்கள் உங்கள் மனதில் நிலையாகப் பதிந்துவிடும். தேவையான நேரங்களில் இந்த மேற்கோள்களைப் பயன்படுத்தி உங்கள் உரையைக் கேட்டுக்கொண்டிருக்கும் நண்பர்களை அல்லது மாணவர்களை அசத்தலாம்.



அவர்களை உற்சாகப்படுத்தலாம். இப்படிப் பாரதியார் பாடல்கள், பாரதிதாசன் பாடல்கள், பட்டுக்கோட்டைப் பாடல்கள், திருக்குறள், சித்தர் பாடல்கள் மட்டுமன்றித் தரமான திரைப்படப் பாடல் வரிகளையும்கூட மேற்கோள் காட்டி நீங்கள் புகழ் பெறுவீர்கள். பழக்கத்துக்குட்பட்ட எதுவும் உங்கள் நினைவை விட்டு அகலாது. எனவே தான் ''தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்'' என்று மூத்தோர் மொழிகளில் கேள்விப்படுகிறோம். நல்லவற்றைப் பழக்கப்படுத்துங்கள். அதுவே நினைவாற்றலைச் சரியாகப் புரிந்துகொண்டீர்கள் என்பதற்கான நல்ல அடையாளம்.

# ஆசை

-பாஷோவின் கரும்பலகை-

படிப்பு முடிந்ததும் அந்த இரண்டு மாணவர்களும் பாஷோவிடம் விடைபெற்
முதல் மாணவரைப் பார்த்து பாஷோ கேட்டார்.

''நீங்கள் என்னவாக ஆகப் போகிறீர்கள்?...''

''கலெக்டர்...''

''பத்து வருடங்கள் கழித்து உங்களை கலெக்டர் அலுவலகத்தில் சந்திக்கிறே

இரண்டாவது மாணவர் வந்தார்.

''நீங்கள் என்னவாக ஆகப் போகிறீர்கள்...''

''திட்டம் எதுவும் இல்லை... எதிலாவது பெரிய ஆளாக வர வேண்டும்... அ

''மன்னிக்கவும்... உங்களை என்னால் சந்திக்க முடியாது...''

பாஷோவின் உதவியாளர் கேட்டார்.

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?...''

''முதல் மாணவனுக்கு கலெக்டர் ஆக வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. ஒ வது வெற்றியின் முதல்படி. இரண்டாவது மாணவனிடம் குறிப்பிட்ட திட் இல்லை. இலக்கு இல்லாவிட்டால் பயணம் அலட்சியமாகவும், சோம்பேறித்தன மாகவும் இருக்கும் . எதையும் சுலபத்தில் அடைய முடியாது. தோல்வியின் சத விகிதம் அதிகமாகிவிடும்...''

பாஷோ தனது கரும்பலகையில் எழுதினார்.

ஒன்றை அடைய வேண்டுமென்றால் அதன்மீது ஆசைப்படுங்கள்.
தீவிரமாக ஆசைப்படுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# அவனருளின்றி அவனடி தாழ்தல் அரிது

(சென்றவாரத் தொடர்ச்சி)

நாமும் அரஹர மகாதேவா என்று கோஷமிட்டோம். இத் தரிசனம் நிழற்படங்களில் கைலயங்கிரியைத் தரிசிப்பதுபோல இருந்தது.

கேதாரநாதரை இங்கு தரிசித்த பின்னர்தான் இங்கிருந்து பஞ்ச பாண்டவர்கள் மகாப்பிரஸ்தான யாத்திரை மேற்கொண்டதாகவும், மற்றவர்கள் இறக்க தர்மர் மட்டும் இவ்வழியாகச் சுவர்க்கலோகத்திற்குச் சென்றதாகவும் கூறினார்கள். மேலும் பூலோகத்தில் சிவன் உறையும் இடங்களில் கேதாரநாத்திற்கு நிகராக வேறு எந்த இடமும் இல்லை என்று வியாச முனிவர் பாண்டவர்களுக்கு எடுத்து உரைத்ததாகவும் கூறுகின்றார்கள்.

ஆலயத்திற்குச் சற்றுத் தொலைவில் மந்தாகினி ஓடிக்கொண்டிருக்கிறாள். முதலில் நாம் நீராடுவதற்காக உரிய இடத்துக்குச் சென்றோம். ஆற்று நீரானது ஐஸ்கட்டிபோல ஜில் என்று குளிர்ந்துகொண்டிருந்தது. அத்துடன் எமது உடலும் நடுங்கிக்கொண்டிருந்தது. ஆனால் இவ்வளவு தூரம் வந்து வாழ்வில் ஒரு தரமாவது மந்தாகினி ஆற்றில் ஸ்நானம் செய்யாவிட்டால் மனிதப் பிறவி எடுத்ததால் என்ன பிரயோசனம் என்று யோசித்து கேதாரநாதரைச் சிந்தித்தபடி ஆற்றங்கரையில் இருந்த சங்கிலியைக் கையால் பிடித்தவண்ணம் நீரில் இறங்கி நீராடினோம். சிலர் அருகில் இருந்தவாறு செம்புகளினால் அள்ளித் தலையை நனைத்து நீராடினார்கள். பின் கேதாரநாதரின் பாதக்கமலங்களை வணங்கித் தரிசிப்பதற்காகச் சென்றோம். முதலில் ஆலய சந்நிதியில் கேதாரநாதரைப் பார்த்தவாறே வீற்றிருந்த நந்திதேவனையும், விநாயகப்பெருமானையும் தரிசித்து வணங்கித் தெற்கு நோக்கிய வண்ணம் வீற்றிருக்கும் கேதாரநாதரை எமது பிறவிப் பிணி தீரவேண்டும் என இறைஞ்சி வணங்கினோம். மேலும் சுற்றுப் பிரகாரத்தில் அமைந்திருக்கும் உமாமகேஸ்வரர், முகுந்த பைரவர், துவாரபாலகர்கள் மற்றும் சிறிய பாறை வடிவத்தில் அமைந்துள்ள சிவலிங்கப் பெருமானையும் பாண்டவர்களால் உருவாக்கப்பட்டு பின் திருத்தங்கள் செய்யப்பட்ட மூலஸ்தான தூபியையும் தரிசித்து வணங்கினோம்.



அங்கிருந்து அருகிலுள்ள மலைத்தொடரைப் பார்த்தபோது அதுவும் சிவலிங்கம் போலவே தோன்றியது. அத்துடன் அம்மலையிலிருந்து ஓடிவரும் பால் கங்கை, சுவர்ண கங்கை, சரஸ்வதி கங்கை, தேன் கங்கை ஆகிய நான்கும் மந்தாகினியுடன் கலப்பதால் இத்தலத்தின் பெருமையை அளவிட்டுக் கூறமுடியாதென வழிகாட்டி கூறினார். நாம் கூர்ந்து நோக்கினால் இங்குள்ள சிவலிங்கமானது எருமைக்கடாவின் பின்பக்கத்தைப்போலக் காட்சிதருவதாகக் கூறுகின்றார்கள்.

பன்னிரண்டு ஜோதி லிங்கங்களுள் கேதார லிங்கமும் ஒன்றாகும். இங்குள்ள லிங்கத்தின் வடிவம் பற்றி நாம் விசாரித்தபோது பாரதப்போர் நிறைவேறிய பின்னர் பஞ்ச பாண்டவர்கள் இங்கு வந்ததாகவும் அவர்களைக் கண்டவுடன் சிவபெருமான் எருமைக்கடா உருவமெடுத்து ஓடியதாகவும், பாண்டவர்கள் அதனைத் துரத்திச்சென்றபோது சிவன் பூமிக்குள் மறைந்துவிட எண்ணியதாகவும் ஆனால் அவர் மறைவதற்கிடையே வீமன் எருமைக்கடாவின் வாலைப் பிடித்து இழுத்ததினால் பின்பகுதி மட்டும் இங்கே தங்கியதாகவும் முன்பகுதி பூமிக்குள் மறைந்துவிட்டதாகவும் முன்பாகம் நேபாளத்தில் இருப்பதாகவும் கூறினார்கள்.

*(தொடரும்)*

# வரலாற்றுச் சிறப்புமிக்க சிவதொண்டன் நிலையம்

யோக சுவாமிகள் திருவடி அடைந்த ஆயிலிய நட்சத்திரப் பூஜை, சிவராத்திரி, நவராத்திரி, திருவெம்பாவை நாள்களிலும் விசேட பூஜைகள் நடைபெறுவதைக் காணலாம்.

மேற்கொண்டு யோக சுவாமிகளின் நற்சிந்தனைகள் சிலவற்றை நோக்குவோம்.

''வெற்றி உன் சொந்தம்''
''எத்தனைமுறை தவறினாலும்
காரியத்தைக் கைவிடாதே''
''தவறுகள் சடசம்பந்தமானவை''
''நீயோ சித்துப் பொருள்'' (அறிவுப்பொருள்-
நீயொரு நாளும் அழியமாட்டாய்)
''எழுந்திரு!
விழித்துக்கொள்!
காரியம் கைகூடட்டும்
வழியிலே தங்கிவிடாதே!
உற்சாகத்தோடு முன்னேறிச்செல்.
உனக்கு சகல சக்தியும்
கட்டுப்படுவதைக் காண்!''
''வீண்வாதங்களில்
நாளைப் போக்காதே!
நீ எங்கே போகிறாயோ
அங்கே பகவான் உன்னுடன்
வருவான்''
''உடல் பொருள் ஆவி மூன்றையும்
பகவானுக்கு ஒப்படை
அதன் பின் உன்னைப்பற்றிய
காரியங்களைக் கைவிடு''
''அனைத்தும் அவனே பார்!''
என்பவற்றை குறிப்பிடலாம்.

இவரது நற்சிந்தனைகளைச் சில தொண்டர்கள் கற்பகதருவெனப் போற்றினார்கள்.

சிவதொண்டர் சபை யாழ்ப்பாணத்தில் இயங்கிவருகின்றது. இச்சபை வெளியிடுகின்ற ஆன்மீக சஞ்சிகையான 'சிவதொண்டன்' திங்கள் தோறும் சிவ பக்தர்களின் கரங்களில் தவழுவதையும் காணமுடிகின்றது.

சிவதொண்டன் நிலையத்தின் குருமுதல்வராக விளங்கியவர் யோகர்சுவாமிகளே. சுவாமிகள் ஆன்மீகரீதியில் யதார்த்தங்களை பாவடிவிலும் உரைவடிவிலும் பக்தர்களுக்கு உணர்த்தினார்.

சிவதொண்டன் நிலையம் சுவாமிகளின் திருவுளப்படியே சிவபக்தர்களுக்கு தியானஞ் செய்ய உகந்த மையமாகத் திகழுகின்றதென்பது மறுப்பதற்கில்லை.




உலகைத்திருத்த முனைவான் ஏன்? என்ற வினாவிற்கு ஆசான் கீழ்க்காணும் அருள் மொழியைப் பதிலாகத் தருகின்றார். அதாவது ''உலகம் ஒரு ஒழுங்கில் தான் நடைபெறுகின்றது. கலகம் செய்பவன், களவெடுப்பவன் ஆகிய அனைவரும் ஒழுங்குடன்தான் இருக்கிறார்கள். அருமையான உலகம்''

''ஒரு பொல்லாப்புமில்லை''
''அனைத்தும் சரியாகவும் ஒழுங்கிலுமே
நடைபெறுகின்றன'' என்கின்றார்.

சிவதொண்டன் நிலையமானது சிவபக்தர்களின் சிவ வழிபாட்டிற்கு உன்னத ஊன்றுகோலாக விளங்குகின்றது என்பது சிவாச்சாரிகளின் ஒருமித்த கருத்தாகும்.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தகசாலை

# கலைமலர்

**வெளியீடு: கோப்பாய் ஆசிரிய கலாசாலை**




கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்களால் 42 ஆவது கலைமலர் வெளியிடப்பட்டுள்ளது. அழகிய வர்ண அட்டையுடன் ஆசிரிய மாணவர் களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் ஆக்கங்கள் அதில் இடம்பெற்றுள்ளன. கலாசாலை மாணவரின் பயிற்சிக் காலத்தின் கண்ணாடியாக அவை திகழ்கின்றன.

கல்லூரி அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளையின் ஆலோசனை வழிகாட்டல்களுடன் ஆக்கப்பட்டுள்ள மலரின் உள்ளே கலாசாலை விரிவுரையாளர்களின் ஆக்கங்கள் மாணவர்களுக்கு மட்டுமன்றி ஏனையோருக்கும் பயன்தருவனவாக அமைந்துள்ளன. ''கூழங்கைத் தம்பிரான் முதல் பண்டிதர் வீரகத்திவரை இலக்கண உலகுக்கு ஈழத்தமிழரின் பங்களிப்பு'' எனும் ஆய்வுக் கட்டுரையை விரிவுரையாளர் முருகேசு கௌரிகாந்தன் எழுதியுள்ளார்.

அதில் தமிழ் இலக்கண நூலாசிரியர்களையும் அவர் தந்த நூல்களையும் தகவல்களாகத் தந்துள்ளார். அவை இலக்கணத் தமிழின் வளர்ச்சிக்கும் இரும்புக்கும் உதவுவனவாகும். ''கோளமயமாதலும் இலங்கையின் அண்மைக்காலக் கல்வித் திட்டமிடல்களும் ஒரு நோக்கு'' எனும் தலைப்பிலான கட்டுரையில் விரிவுரையாளர் த.கோபாலகிருஷ்ணனின் இன்றைய இலங்கையின் கல்வித் திட்டமிடல் பற்றிய ஒரு பார்வை தெரிகிறது. மலரின் வாழ்த்துச் செய்திகளுடன் ஆசிரிய மாணவர்களின் ஆக்கங்களான கவிதைகள், கட்டுரைகள் என்பனவும் சிறுகதைகள், நாடகம் என்பனவும் இதில் நிறைவைத் தருகின்றன. அவை மலையகம்,வன்னி, புத்தளம், யாழ்ப்பாணம், தீவகம், மன்னார், திருமலை ஆகிய ஈழத்தின் பல திசையிலிருந்தும் பயிற்சியில் கூடிய ஆசிரிய மாணவர்களின் உளச் சிறப்புக்களை வெளிப்படுத்துகின்றன. அன்பு, ஒற்றுமை, அமைதி இவைகளுடன் கல்வி, கலை, மொழி, இஸ்லாம் சார்ந்த ஆக்கங்கள் நிறையவே உள்ளன. பேராசிரியர் சிவத்தம்பியின் பணிகள் பற்றிய கட்டுரையும் விரிவுரையாளர் மகேஸ்வரி சுப்பிரமணியத்தின் இசைப்பணி பற்றிய நேர்காணலின் வழி பிறந்த கட்டுரையும் மலரின் சிறப்பைக் காட்டும் சில துளிகளாகும். 2012 ஜனவரி மூன்றில் மணிவிழாக் காணும் நடனத்துறை விரிவுரையாளர் கலாகீர்த்தி ஸ்ரீமதி சாந்தினி சிவநேசனின் பணிச்சிறப்பை பாராட்டி வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ள கல்லூரிச் சமூகத்தை மலரில் பார்க்கின்றோம்.

வழமை போல் கலாசாலையின் மன்ற அறிக்கைகளும் மாணவர்களின் பெயர் விவரங்களும் அடங்கிய பட்டியல் மலரின் இறுதியில் இடம் பெற்றுள்ளன. ஆசிரிய மாணவர்களால் சேகரிக்கப்பட்டுள்ள விளம்பரங்கள் அவர்களின் தொடர்பாடல் மதிப்பையும் ஊரையும் அவ்வூர்களின் வர்த்தக விரிவாக்கத்தையும் எமக்கு விளக்குகின்றன. மலரில் இணைக்கப்பட்டுள்ள ஆசிரிய மாணவரினதும் விரிவுரையாளர்களினதும் அவர்கள் கற்ற ஆரம்பக் கல்வி, சங்கீதம், மனைப்பொருளியல், நடனம், சித்திரம், தமிழ்மொழி, சமூக விஞ்ஞானம், வர்த்தகம் ஆகிய துறைசார்ந்த குழுக்களினதும் புகைப்படங்களும் அவர் தம் ஆக்கங்களும் நிறைவாக ஒரு காலத்தின் பதிவெனினும் அதில் ஈடுபட்டுழைத்தோருக்கு சிறப்பான ஒரு பதிவேடாக உயர்ந்துள்ளது. பயன் பல விளைக்கும் இம் மலர் பாதுகாக்கப்பட வேண்டிய கலைமலராகும்.

**- மகேஷ்**

# ஸ்ரீமுத்துக்குமார சுவாமிகளின்

## அருள்ஒளி நயினையில் வீசுகிறது

**நாளை குருபூசை**

''சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன் எனக் கருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே'' என மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தில் சித்தர்கள் என்பதை எடுத்துக்காட்டியுள்ளார்.

சித்தர்கள் மனிதன் வகுத்த வரம்புகளையும், சடங்குகளையும் சம்பிரதாயங்களையும், பாகுபாடுகளையும் பாரபட்சங்களையும் கடந்தவர்கள். சித்தர்களுக்கு சாதி, சமய, பேதம் எதுவும் இல்லை. அவர்கள் எல்லா உயிர்களிலும் இறைவனைத் தரிசித்தவர்கள். உலகம் நலமடைய வேண்டும் என்று உயர்ந்த பிறவியான மானிடப் பிறவி பெற்றவர்கள். சித்தர்கள், ஞானிகள், ரிஷிகள், முனிவர்கள் தோன்றி வாழ்ந்த இடங்கள் புண்ணிய இடமாக மாற்றமடைந்திருப்பது வரலாற்று ரீதியான உண்மை. இத்தகைய சித்தர்கள் ஈழத்தில் வாழ்ந்துள்ளனர் என்பதை வரலாற்று ரீதியாகவும் கர்ண பரம்பரைக் கதைகள் மூலமாகவும் அறியமுடிகின்றது.

நயினாதீவில் ஈழத்துச் சித்தர்கள் வரிசையில் நயினாதீவுச் சுவாமிகள் என அழைக்கப்படுபவருமாகிய நயினை ஸ்ரீ முத்துக்குமாரசுவாமிகள் ஆறுமுகம் பார்வதி தம்பதியருக்கு ஆறாவது பிள்ளையாக 1896 இல் அவதாரம் செய்தார். இவர் சிறுவயதில் நயினாதீவு தில்லையம்பலம் பாடசாலையில் கல்வி பயின்றார். இளவயதில் இருந்தே இவரிடம் ஆன்மிக நாட்டமும் கவிபாடும் திறனும் இருந்தன. கல்வியில் நாட்டம் குறைந்து ஆன்மிகத் தாகம் மிக்கவராய் மாறி வந்த இவரை தமையனார் கொழும்பில் உள்ள தனது கடைக்கு உதவியாளராக அழைத்துச் சென்றார். இக்காலத்தில் இந்தியாவில் இருந்து வந்த பெரியார் ஒருவருடன் இவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. இப்பெரியாரே தன்னை ஆள வந்த 'சற்குரு' என்பதை அவர் அறியவில்லை.

இவர்கள் இருவருக்கும் இறுக்கமானதொரு ஆன்மிகத் தொடர்பு ஏற்படலாயிற்று. அந்தப் பெரியாரும் முத்துக்குமாருவும் ஒருநாள் திடீரென கதிர்காமத்துக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். அங்கு கதிரமலைக்குச் செல்லும் வழியில் ஒரு மரத்தடியில் இருவரும் தங்க நேரிட்டது. அந்தத் தனிமையான சூழலிலும் நிசப்த இடத்தில் முத்துக்குமாருக்கு தீட்சையும் குரு உபதேசமும் கொடுக்கப்பட்டன. முத்துக்குமாரு குருபாத சேவை செய்து ஆத்ம ஈடேற்றத்தைப் பெற எண்ணினார். தன் எண்ணத்தையும் விருப்பத்தையும் குருவானவருக்கு எடுத்தியம்பித் தன்னுடன் தங்குமாறு வேண்டி நின்றார். வந்த வேலை முடிந்தது என்று எண்ணிய பெரியவர் ஒருநாள் காலை வெளியில் சென்று திரும்பி வரவில்லை. முத்துக்குமாரரோ தம்மையாட்கொண்ட சற்குருவை எங்கு தேடியும் காணாமல் பித்தர் போல் ஆனார். ஒருநாள் கிறுக்கல் கவிதை ஒன்றை எழுதி வைத்து விட்டுச் யாருக்கும் கூறாமல் கடையை விட்டுச் சென்றுவிட்டார். முத்துக்குமாரு தன் ஞான குருவைத் தேடி இந்தியா புறப்பட்டுச் சென்றுவிட்டார். தான் தேடிச் சென்ற குருவைக் கண்டார். அவர் நிழலில் பல வருடங்கள் தங்கி பக்குவ நிலை எய்தினார். அருணாசலக் குகைகளில் சில வருடங்கள் சமாதி நிட்டையில் அமர்ந்திருந்தார்.

சுவாமிகள் தன் இறுதிக் காலத்தில் யாழ். வண்ணார் பண்ணையில் சிவலிங்கப் புளியடியில் உள்ள தன் அடியார் சிவசுப்பிரமணியம் அவர்களது இல்லத்தில் தங்கியிருந்து அடியவர்களுக்கு அருள் ஆசி வழங்கினார். சுவாமிகள் இயல்பாகவே கவிபாடும் திறமை வாய்ந்தவர் இவரால் பாடப்பெற்ற நமச்சிவாய மாலை, நாகேஸ்வரி தோத்திரம், நாகபூஷணி அந்தாதி என்பனவாகும்.

சுவாமிகள் சிவலிங்கப்புளியடியில் சிவசுப்பிரமணியம் அவர்கள் இல்லத்தில் சர்வதாரி வருடம் உத்தராயண காலமாகிய தைத்திங்கள் 13ஆம் நாள் 26.01.1949 புதன்கிழமை இரவு 12 மணிக்கு பத்மாசன மிட்டுத் தியானத்தில் இருப்பது போல் அமர்ந்திருந்தவறே உலக வாழ்வை விட்டு விதேகமுத்தியடைந்தார். நிஷ்டையில் இருந்தவாறே அவரது பூதவுடலை அலங்கரித்து கண்ணாடிப் பெட்டியில் வைத்து பக்தர்கள் தோளில் சுமந்து வந்து அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் ஊர்காவற்றுறை மார்க்கமாக நயினாதீவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு சமாதியடைந்த மூன்றாம் நாள் சகல விதிப்படியும் வடிவேற்சுவாமிகளின் வழிகாட்டல்களுக்கிணங்க சமாதியை நிலைப்படுத்தினார். சுவாமிகளின் வேண்டுகோளின் பிரசாரம் நயினை காட்டுக் கந்தசாமி கோயிலின் பின்புறம் நான்கு பக்கமும் வாசல் வைத்து கிழக்கு நோக்கியவாறு சமாதி வைக்கப் பட்டது. சுவாமிகள் வைத்து பூசை செய்த விக்கிரகங்கள் வைக்கப்பட்டு இந்தச் சமாதி கோயில் சோமஸ்கந்த ஈஸ்வரம் என்ற பெயரோடு விளங்குகிறது. இங்கு நித்திய பூசையும் நடை பெற்று வருகிறது. வருடா வருடம் சுவாமிகளின் குருபூசை சுவாமிகளின் சமாதி ஆலயத்திலும் அவரின் வழித்தோன்றல்களாலும் அடியவர்களாலும் நடத்தப்படுகின்றது.

**- நயினை நாக கோபாலகிருஷ்ணன்**

# விமர்சனம் ஒரு பார்வை

**வா**சிப்புப் பழக்கம் கொண்ட தமிழ் சமூகம் சிந்தனைகளின் எல்லையில் நின்று தன்னை விட்டுக் கொடுக்காது பயனுள்ளதாக மாற்றம் பெறும் போது தனக்கென ஓர் இடத்தைப் பெற்றுவிடும். புதியதொரு சிந்தனையின் அடிப்படையில் ஒரு சமூகம் தன்னை வெளிப்படுத்தி நிற்கின்ற போது கூடுதலான புத்தகங்களை வெளியிட முடியும். கவிதைத் தொகுப்பாக இருக்கலாம் அல்லது சிறுகதைத் தொகுப்பாக இருக்கலாம் அல்லது கட்டுரை தொகுப்பாக இருக்கலாம். எதுவானாலும் வாசகர்களின் விமர்சனப் பார்வையில் விழும்போதுதான் தொகுப்பின் பெறுமதி தெரிய வருகின்றது. ஒரு தொகுப்பின் தேவை அதன் மீது சமூகத்தின் பார்வை உள்ளடக்கம் போன்ற கருத்து மட்டத்தில் நோக்குகின்ற போது கூடுதலான வாசகர்களைக் கொண்டதாக அமையும் போது அத்தகைய தொகுப்பு பேசப்படும். ஓர் எழுத்தாளன் தன்னை திருப்திப்படுத்தும் விடயங்களில் கூடுதலான ஈடுபட்டாலோ அல்லது பிறர் விடயங்களின் பார்வையில் கூடுதலாக ஈடுபட்டாலோ தனது எழுத்துக்களில் சரியானதொரு முடிவை பெற முடியாமல் தொடர்ந்து எழுதிக் கொள்ள வைக்கின்ற போதுதான் அவன் எழுத்துக்கள் எல்லோரின் கவனத்துக்குள்ளும் கையாளப்படுகின்றன. ஒவ்வொரு எழுத்தாளனும் ஒவ்வொரு கண்ணோட்டத்தில் எழுதுகின்ற போதுதான் அதன் பார்வை கடைசியில் ஒன்றாகத்தான் இருக்கிறது. அதன் விளைவு வாசிப்புப் பழக்கத்தாலும் ஏற்படலாம். உனது எழுத்து நடை இன்னொரு எழுத்தாளனின் நடையைப் போன்றது என்று கூறும் போதுதான். அந்த எழுத்தாளன் புதிதாக ஒன்றையும் எழுதவில்லை என்பது புலனாகிறது.

ஒவ்வொரு எழுத்தாளனின் எழுத்துக்களும் ஏதோ ஒரு விதத்தில் எமக்குப் பயனுள்ளதாகத்தான் அமைகின்றன. வாசகனின் கூடுதலான தேடல் ஓர் எழுத்தாளனின் எழுத்தைக் கூட்டி விடுகிறது எனலாம். வாசகனின் தேடலுக்கு அமைய ஓர் எழுத்தாளன் எழுத முடியாது. ஓர் எழுத்தாளனின் எழுத்துக்கமைய ஒரு வாசகன் உருவாக முடியும். இன்றைய காலம் எதை முக்கியத்துவப்படுத்துகின்றது என்று பார்த்து ஒரு எழுத்தாளன் தன்னைத் தயார்படுத்தி எழுதுகின்ற போது பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது. ஓர் எழுத்தாளனும் அவனது புத்தகமும் என்று பார்த்தால் அவனது செயற்பாடும் எழுத்தும் ஒரே விதமாக இருக்கும் என்று சொல்வதற்கில்லை. ஆனால் அவனது செயற்பாடும் எழுத்தும் ஒரே விதமாக இருக்கின்ற போதுதான் சமூகத்தில் எழுத்தாளனுக்குரிய மதிப்பும் அவனது எழுத்துக்குரிய பெறுமதியும் தெரிய வருகிறது. புத்தக விமர்சனப் பார்வையில் ஒருவரால் மட்டும் கணிப்பிட முடியாது. பலரால் பேசப்படும் போதுதான் எழுத்தாளன் தனது எழுத்தில் என்னென்ன மாற்றங்களைக் கொண்டு வர வேண்டுமென்று சிந்திக்க முடிகிறது. எழுத்தாளன் அடிமைப்பட்ட சமூகத்தின் விடுதலையை மையப்படுத்தி எழுதுகின்ற போதுதான் எழுத்தாளனும் அவனது எழுத்துக்களும் பேசப்படும். பல தரப்பட்ட கருத்து நீரோட்டத்தில் சேர்ந்து கொண்டு சரியான வழியைத் தேர்ந்தெடுக்கும் எழுத்தாளனின் எழுத்துக்கள் நல்ல அறுவடையாக புத்தகமாக விளைந்து காணப்படும்.

நீரோட்டத்தில் தோணி சென்று வர பயன்படுவது போல சமகால வாழ்வில் அடையாளங்களை நிலைநிறுத்தி கடக்கின்ற காலங்களில் எழுத்தாளர் தனது எழுத்துக்களைச் சரியான வழியில் வழிநடத்திச் செல்ல விமர்சனம் துடுப்பாக அமையும். ஆழம் கூடிய பகுதியிரும் ஆழம் குறைந்த பகுதியிலும் அளவாகத் தனது அசைவை மேற்கொள்வது போல் விமர்சனங்கள் பார்வைக்குள் புத்தகங்கள் விழும் போது சிறந்த முறையில் விமர்சனம் அமைகிறது. ஈழத்தில் புத்தங்கள் வெளிவருவது குறைவாக இருப்பதற்குக் காரணம் புத்தகத்தை அச்சிட்டு விற்க முடியாமல் போய்விடுகின்றமையே. இங்கே எழுத்தாளனுக்கு ஊக்குவிப்பு தளம் இல்லாத காரணத்தால் எழுத்தாளனும் வாசகனும் குறைவாக இருக் கிறார்கள். தமிழ் நாட்டில் எழுத்தாளர்களுக்குப் பல தளம் உள்ளது. ஒரு கவிதை எழுதுபவர் களாக இருந்தால் கூட அந்த எழுத்தாளனுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படுகின்றது. அதனால் அங்கே எழுத்தாளர்களும் வாசகர்களும் கூடவாக இருக்கிறார்கள். ஈழத்தில் அப்படிச் சிந்திப்பதற்கு எவருமே முன்வருவதில்லை. இதனால் எமது சமூகத்தில் வாசிப்பு பழக்கமும் குறைவடைந்து எழுத்தாளர்களும் குறைவடையப் போகிறார்கள். இதனால் எமது சமூகம் அறிவு மட்டத்தில் வீழ்ச்சி அடையப் போகிறது.

**-செல்வா**

# சவால்களை வெற்றிகரமாக கையாண்ட சாதனையாளர் அமரர் சுப்பையா சிவசுப்பிரமணியம்

வடபுலத்துக்குக் கூட்டுறவாளர்கள் கடந்த அரை நூற்றாண்டு காலத்தின் முன் எப்போதும் இல்லா சவால்களை எதிர்கொள்ள நேர்ந்தது. இந்தச் சவால்களுக்கு சர்வதேசிய, தேசிய, பிரதேசிய மட்டங்களில் கொள்கை வகுப்போரும் அவற்றைச் செயல்படுத்தியோரும் காரண கர்த்தாக்களாகத் திகழ்ந்தனர். அவரின் சேவையை காத்திரமான பங்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையிலும் சிக்கனகடன் வழங்கு சங்கங்களின் சமாசத்திலும் பாதிவாகியுள்ளது.

1989 யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையாக விடப்படும்வரை வடமாகாண ஐக்கிய மேற்பார்வை சங்கத்தால் நடத்தப்பட்ட பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராகவும் பின் கல்லூரியின் பொறுப்பாளராகவும் செயற்பட்டார். வீரசிங்கம் மண்டபத்தில் யுத்தத்தின் காரணமாகச் சிதைந்து சின்னாபின்னமான வேளை அதன் புனரமைப்பு, அப்பணிப்புடன் செயற்பட்டமை.

## நீத்தார் நயப்புரை

சபைக்கு ஏற்பட்ட நிதி நெருக்கடியிருந்து மீள அச்சகம் ஒன்றை உருவாக்கிச் செயற்பட்டமை. பல்லாயிரம் பணியாளர்களை பயிற்றுவித்ததுடன் பல தலைவர்களையும் உருவாக்கியமை

கூட்டுறவை ஜனநாயகப்படுத்தி பரவலாக்க கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், பயிற்சிப் பட்டறைகள், மாநாடுகள் நடத்தியமை. கூட்டுறவு மகளிர் அமைப்புக்களை உருவாக்கியதோடு ஏழைப் பெண்களுக்கு வாழ்வாதார உதவி, குடும்பப் பெண்களுக்கு மனை முகாமைத்துவப் பயிற்சி, தொழிலற்ற பெண்களுக்குச் சுயதொழில் பயிற்சி போன்றவற்றை முன் முயற்சி எடுத்துச் செயற்பட்டமை. இவற்றை விட சிக்கன கடன்வழங்கு சங்கங்களில் சமாத்துடன் இணைந்து பல்வேறு பணியாற்றினார்.

கூட்டுறவுச் செயற்பாட்டை வெற்றிகரமாகச் செயற்படுத்த அவரின் மிதவாத அரசியல் சிந்தனை துணை நின்றது. கூட்டுறவு விரோத அரசியல் செயற்பாட்டை அவர் ஆதரித்ததற்கு ஆதாரம் இல்லை. மாறாக சமய நீதியையும் சமூக நிதியையும் பேணும் வகையில் கூட்டுறவுச் சமூகத்தை உருவாக்க உதவக் கூடிய எல்லா நடவடிக்கைகளையும் ஆதரித்தார். அவரின் சிந்தனைப் போக்கை உள்வாங்கி அவர் விட்ட இடத்திலிருந்து தொடர்வதுதான் நாம் அவருடைய ஆத்மா சாந்தியடையச் செய்யும் பணியாகும்.

**சி.இராமச்சந்திரா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவ்வுயிரும் தம்முயிர் போல்

ஒரு தந்தை தன்னுடைய பிள்ளையை மிகவும் தைரியசாலியாக வளர்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். அதற்காக அவனைக் கூப்பிட்டு உட்கார வைத்து உபதேசம் செய்தார். " இதோ பாருங்கள் மகனே! நான் உன்னைப் போன்று சிறுவனாக இருக்கும்போது எதற்கும் பயப்படமாட்டேன். மிகவும் துணிச்சலாக இருந்தேன். ஒரு நாள் ஓர் அப்பாவி எலியை ஒரு பூனை துரத்திக் கொண்டு ஓடியது. உடனே நான் என்ன செய்தேன் தெரியுமா? அந்தப் பூனையைப் பிடித்து அதன் வாலில் ஒரு பட்டாசுச் சரத்தைக் கட்டி கொழுத்தி விட்டேன். படபடவென்று வெடிக்க பூனை துள்ளிக் கொண்டு அங்கேயும் இங்கேயும் ஓட ஒரே சந்தோசஷம்" என்றார்.

இப்படிச் சொல்லிக் கொண்டு மகனைப் பார்த்து " இதைக் கேட்கும்போது உனக்குத் துணிச்சல் வருகிறதா?" என்று கேட்டார். "வருகிறது" என்றான் மகன். "எப்படி?" என்றார் அப்பா. "எலியை விரட்டியதற்காகப் பூனை வாலில் பட்டாசு கொழுத்தினீர்கள்; நீங்கள் பூனையை விரடியதற்காக நான் உங்கள் கழுத்தில் பட்டாசுச் சரத்தை மாட்டினால் என்ன என்று எனக்குத் தோன்றுகிறது " என்றான் மகன்.

பையனின் துணிச்சல் அப்பாவையே நடுங்க வைத்துவிட்டது. ஒரு அப்பா பிள்ளைக்கு இப்படியா உபதேசம் செய்வது. எல்லோருடனும் அன்பாகப் பழகுவது எப்படி என்று சொல்லிக் கொடுக்கவேண்டும். பிஞ்சு உள்ளங்களில் நஞ்சைக் கலக்கக் கூடாது.

ஒரு நாள் விநாயகர் ஒரு பூனையுடன் விளையாடிக் கொண்டிருந்தாராம். அப்படி ஆசையாக விளையாடிக்கொண்டிருந்த போது அவருடைய கை நகம் தவறுதலாகப் பூனையின் முகத்தில் பட்டுவிட்டதாம். அதனால் ஒரு சின்னக் கீறல் உண்டாகிவிட்டது. அப்போது அவர் அதைப் பெரிதுபடுத்தவில்லை. சிறிது நேரத்துக்குப் பின் விநாயகர் வீட்டுக்கு வந்தார். அங்கு அவர் அம்மா பார்வதி தேவியைப் பார்த்தார். பார்வதி தேவியின் கன்னத்தில் விரலால் கீறிய ஓர் அடையாளம் இருந்தது. விநாயகருக்கு அதிர்ச்சி, ஆச்சரியம் கலந்து ஏற்பட்டன. "எங்கள் அம்மா இந்த உலகத்துக்கே தாய். அப்படிப்பட் அம்மாவின் முகத்தில் கீறலை உண்டாக்கக் கூடியவர் யாராக இருக்க முடியும் ?" என்று யோசித்தார். " தாயே! உன்னுடைய கன்னத்தில் இந்த வடு எப்படி அம்மா ஏற்பட்டது?" என்று கேட்டார். குழந்தாய்! இது நீ செய்த காரியம் தானப்பா. உன் கை நகம் கீறியதால் ஏற்பட்ட வடுதான் இது" என்றார்.


விநாயகர் திடுக்கிட்டுப் போய்விட்டார். " நான் எந்தக் காலத்திலும் உங்களுக்கு கீறியதாக நினைவு இல்லையே?" என்றார். இன்றைக்கு காலையில் ஒரு பூனையைக் கீறியதை மறந்துவிட்டாயா ?" என்றார் பார்வதி விநாயகர் திகைத்துப் போய் நின்றார். பார்வதி தேவி சொன்னார் இதோ பார் மகனே ? இந்த உலகத்தில் உள்ள எல்லா உயிர்களிலும் நான் இருக்கிறேன். நான்தான் இந்த உலகமாக ஆகியிருக்கிறேன். ஆகையால் நீ யாரைத் துன்புறுத்தினாலும் அது உண்மையிலேயே என்னைத் துன்புறுத்தியதாக முடியும் " என்றார்.

விநாயகர் மனதுக்குள் ஒரு வெளிச்சம் ஏற்பட்டது. அதன்பின் அவர் யாரையும் திருமணம் செய்து கொள்ளாததற்கும் அது தான் காரணமாம். இந்த உலகத்தில் உள்ள எல்லாவற்றையும் தாயின் வடிவமாகப் பார்க்க ஆரம்பித்து விட்டார். ஸ்ரீ ராம கிருஷ்ணர் இந்தக் கதையை எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

நபிகள் நாயகம் ஒரு தடவை ஒரு நாற்காலியில் உட்கார்ந்து ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். "அப்போது அவருடைய உடையில் ஒரு கீழ்ப் பகுதி தரையில் படிந்திருந்தது. அங்கே விளையாடிக் கொண்டிருந்த ஒரு பூனை அதன் மேல் படுத்துத்தூங்கிவிட்டது. தொழுகை செய்யவேண்டியநேரம் வந்துவிட்டது. நபிகள் நாயகம் எழுந்திருகப் பார்த்தார். அப்போதுதான் பூனை தன்னுடைய உடைமேல் தூங்கிக்கொண்டிருப்பதைப் பார்த்தார். அவர் பூனையின் தூக்கத்தைக் கலைக்க விரும்பவில்லை; தம் சகோதரியை ஒரு கத்தரிக்கோள் எடுத்துவரச்சொன்னார் இப்போது பூனை படுத்திருந்த உடைப்பகுதியை மட்டும் கத்தரித்து விட்டு தொழுகைக்குப் போய்விட்டார். பிற உயிர்களிடம் எப்படி அன்புகாட்டவேண்டும் என்பதைப் பெரியவர்கள் எவ்வளவு விதத்தில் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இருந்தாலும் எத்தனைபேர் மனதில் அதெல்லாம் உறைத்திருக்கும்?.

பூனை படுத்திருந்தால் ஒரு கத்தரிக்கோலைத் தான் எடுத்து வரச் சொல்வோம். துணியை வெட்டுவதற்காக அல்ல பூனையின் வாலை வெட்டுவதற்காக.

ஓர் ஆள் மிகவும் பிரியமான ஒரு பூனையை ஆற்றில் அமுக்கி அமுக்கிக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தான். அப்போது அந்த வழியாகப் போன பெரியவர் ஒருவர் " பூனையை ஆற்றுத்தண்ணீரில் அமுக்கி குளிப்பாட்டாதே; மூச்சுத்திணறி செத்துப்போய் விடும்" என்றார். "நீ போய் உன் வேலையைப் பார்; எனக்கு எல்லாம் தெரியும்" என்றான். அவர் சிறிது நேரத்துக்குப் பின் திரும்பி அந்த வழியாக வந்துகொண்டிருந்தான். ஆற்றில் பூனையைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தவன் அழுது கொண்டிருந்தான். பக்கத்தில் பூனை செத்துக் கிடந்தது. இதைப் பார்த்த பெரியவர் " நான்தான் அப்போதே சொன்னேனே; அந்தப் பூனையை ஆற்றிலே அமுக்காதே என்று! அதைக் கேட்டிருந்தால் இப்படி ஆகியிருக்குமா? " என்றார்.



அதற்கு அந்த ஆள் கோபமாக இவரை முறைத்துப் பார்த்துக்கொண்டு "போய்யா! இந்தப் பூனை ஆற்றில் குளித்ததனால் செத்துப் போகவில்லை. குளித்ததன் பின் அதன் உடம்பு ஈரமாக இருக்கிறதே என்று பிழிந்தேன்; அதனால் தான் இப்படி ஆகிவிட்டது - என்றார்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# வாசகர் திருமுகம்

## ஆசிரியர் இடமாற்றம் கவலை தரும் விடயம்

தங்களின் பத்திரிகையைத் தொடர்ந்து வாசித்து வரும் நான் சில விடயங்களை சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது பத்திரிகை தொடர்பாக அல்ல; செய்திகளின் சாராம்சம் தொடர்பாக

* இலங்கையின் அரசியல் சட்டம் தொடர்பாக மக்கள் பூரண அறிவைக் கொண்டிருக்கவில்லை என்பதோடு பலரது அரசியல் கட்டுரைகளில் சட்டம் தொடர்பான மயக்க நிலை ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது கட்டுரையாளரின் தனிப்பட்ட கருத்தாக இருந்தாலும் பத்திரிகை வாயிலாக அதனை அறியும்போது அதில்தெளிவின்மை இருப்பின் மக்கள் குழப்பமடைவார்கள்.

* மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் தொடர்பாக வாசித்தபோது அதில் குறிப்பிட்ட விடயம் தனியே அரசியல் கட்சிகளின் கூட்டம் அல்ல என்பதோடு, இது மாவட்ட மக்களின் பிரதிநிதிகள் கூட்டம் இதற்கு தலைமை தாங்குபவர் இந்த மாவட்டத்தில் பெரும்பான்மை அங்கத்தவர்களைக் கொண்ட கட்சி உறுப்பிணர்களாகத் தான் இருக்கவேண்டும்.

அதனை விடுவித்து குறைந்த அங்கத்தவர்களைக் கொண்ட கட்சி அல்ல ( அவர் அமைச்சர் என்பதற்காக தலைவராக இருக்கவேண்டும் என்று இல்லை) ஆனாலும் அவர் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்துபவர் என்பதை ஏற்றுக் கொண்டாலும் ஆளுனர் இதற்கு ஏன் மூக்கை நுழைக்கின்றார் (இணை தலைமை) புரியவில்லை புரிந்தால் அரசியல் அறிஞர்கள் / விற்பன்னர்கள் தெளிவு படுத்துவார்கள் (இது எனது ஆசை மட்டுமல்ல முழு மக்களின் ஆசையும் கூட.)

* ஆசிரியர்களாக இடமாற்றம் தொடர்பாக வரும் செய்திகள் மனதுக்கு கவலைஅளிக்கின்றது ஏன் எனில் எமது காலத்தில் ஆசிரீயர்கள் தமது தொழிலை புனிதமாக கருதினார்கள்(மாதா, பிதா,குரு, தெய்வம்) இங்கு தாய் தந்தையருக்கு பின்பு குருவுக்கு (ஆசிரியர்கள்) மதிப்பு கொடுப்பட்டது தெய்வம் அடுத்த நிலையில் தான் இருந்தது ஆனால் இன்று ஆசிரியர் தொழில் ஓர் கேவலமான தொழிலாக மாறிக்கொண்டிருப்பதைக் காணலாம். சரி விடயத்துக்கு வருகிறேன் இந்த இடமாற்றம் என்பது சரியா? தவறா? என்று விவாதிக்க வில்லை ஆனாலும் இதிலும் ஆளுநர் மூக்கை நுழைப்பது ஆச்சரியமான விடயம் மட்டுமல்ல சித்திக்கவும் தூண்டுகிறது.

ஏன் எனில் தமிழ் மாணவர்களின் கல்விச் சிறப்பை கீழ் நிலைக்குச் செல்ல வைப்பதற்கான சூழ்ச்சி எனக் கூடச் சிந்திக்க வேண்டியுள்ளது. அதாவது சிறந்த ஓர் ஆசிரியரைத் தற்போது கற்பிக்கும் பாடசாலை மட்டுமே முன்னேற்றம் காண்பது என்பது சரியானாலும் மனரீதியாக அந்த ஆசிரியர் விருப்புடன் தனது கல்விச் செயற்பாட்டை முன்னெடுப்பார். தனது கல்வி புகட்டும் செயற்பாட்டில் 75 வீதம் திருப்தி காணப்படும் நிலையில் உள்ள இந்த ஆசிரியரை தொலைதூர இடம் ஒன்றுக்கு மாற்றம் வழங்கும்போது அங்கு அவர் சென்று தனது கல்விச் செயற்பாட்டில் முழுமையாக ஈடுபடுவர் என எவ்வாறு எண்ணத் தூண்டும். ஏன்னெனில் குடும்பம் மற்றும் பிரயாணத் தூரம் அலைச்சல், களைப்பு என ஆசிரியர்களின் மனநிலை குழம்பும்போது இடமாற்றம் பெற்றஇடத்தில் ஒழுங்காக கற்பிக்க முடியாது (திங்கள் காலை 11 மணிக்குச் சென்று வெள்ளி மதியம் 12 மணியுடன் வீடு திரும்புவோம் என்றுதான் இருப்பார்) இப்போது சிறந்த ஆசிரியர் எனப் பெயரெடுத்த இந்த ஆசிரியர் 25 வீதம் கல்விச் செயற்பாட்டுடன் தான்தனது புதிய பாடசாலையில் கற்பிக்கிறார். ஏனெனில் அவருக்குக் கூட தனது சொந்த இடத்திலிருந்து தொலை தூரமாக இந்தப் பாடசாலை இருக்கலாம். இதனால் பாதிப்படைவது இந்தப் பாடசாலை மாணவர்கள் மட்டும் அல்ல இவர் மாற்றம் பெற முன்பு இருந்த பாடசாலை மாணவர்களும் தான்.

எனவே இங்கு எங்கு பாதிப்பு வந்தாலும் இதில் தமிழ் மாணவர்களே பாதிப்புஅடைபவர்களாக மாறுவர் மாணவர்களின் கல்வித்தரம் குறைவடைய வாய்ப்புகள் அதிகரிக்கும் எனவேதான் நான் செல்கின்றேன் இதில் உள்நோக்கம் உண்டு என்று. இவ்வளவு பிரச்சினைக்கும் தீர்வு காணப்படவேண்டும் எனில் இலங்கையின் அரசியல் சட்டம் தொடர்பாக ஓரளவு மக்களும் அறிய வேண்டியுள்ளது. இதற்கு தங்களின் பத்திரிகை மூலம் இந்தச் சட்டம் தொடர்பாக மக்கள் விளங்கக்கூடிய விதத்தில் தொடர் கட்டுரைகளை பிரசுரித்தல் நன்று என எண்ணுகின்றோம்.

என்றும் தமிழ் உணர்வுடன்
நா.சிவகடாச்சம்

## நெருக்கடியின் போது அதிகரித்த சேவை

போக்குவரத்துத் துறை தனியார் மயப்படுத்தப்பட்டதன் மூலம் மக்கள் நன்மை அடைவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும் அது இன்றுவரையில் யாழ்ப்பாணத்தில் எட்டப்படவில்லை.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் அரச, தனியார் பேருந்துச் சேவைகள் இடம் பெறுகின்றபோதும் இரண்டினதும் மக்களுக்கு பூரணமான சேவைகள் கிடைக்கப்பெறுகின்றனவா என்பது கேள்விக்குறியே.

நான் தினமும் அலுவலகத்துக்கு பேருந்தில் செல்பவன். தெல்லிப்பழை- யாழ்ப்பாண பேருந்து சேவை ஒழுங்காக இடம்பெறுகின்றது. இருப்பினும் நெருக்கடியான நேரத்தில் அதாவது காலையில் பாடசாலைக்குச் செல்லும் நேரம், அலுவலகங்கள், வைத்தியசாலைக்கு செல்லும் நேரங்களில் மிகுந்த நெருக்கடி நிலை ஏற்படுகின்றது.

குறிப்பிட்ட நேர இடைவெளியில்தான் பேருந்து சேவைகள் இடம்பெறுவதால் இவ்வாறான அவசர நேரங்களில் மக்கள் நெரிசலுடனேயே பயணம் செய்யவேண்டி ஏற்படுகின்றது.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் நெருக்கடியான நேரத்தில் அதிகளவான பேருந்துச் சேவையை நடத்துவதன் மூலம் மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை தவிர்க்க முடியுமல்லவா?

இதனால் மாணவர்கள் மட்டுமன்றி பொது மக்களும் நன்மையடைவார்கள் . தீர்வு கிடைக்குமா?

தனுசன்
குப்பிளான்.

## சின்னத்திரையை ஆண்கள் பார்க்க வேண்டும்

தொலைக்காட்சி பார்ப்பதனால் இடியப்பம், தோசை அவிப்பதை விட்டு-பிட்டு அவிக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டு ஆண்களால் எழுகிறது. இந்த இடியப்பம், தோசை சமையல் காலை ஆறு ஏழு மணிக்குள் முடிந்துவிடும். அதன் பின்தானே தொலைக்காட்சி இரவு பிட்டு அவிப்பார்கள். ஏன் சிலசமயம் பாணும் வாங்கக்கூடும். 24 மணித்தியாலமும் பெண்கள் சமையலறையில் தான் இருக்கவேண்டும் என்று சில ஆண்கள் நினைக்கிறார்கள். தோசை, இடியப்பம் சாப்பிடாதவர்கள் போன்று புலம்பல். பல ஆண்கள் ஊரெல்லாம் சுற்றிவிட்டு வர பொழுது போய்விடும். வீட்டில் சமையல் அறையில் அடைந்து கிடக்கும் பெண்கள் சிறுமாறுதலுக்காக ரி.வி. பார்க்கக் கூடாது என நினைக்கின்றார்கள் ஆண்கள்.

மாதத்தில் ஒரு தடவையோ- வருடத்தில் ஒரு தடவையோ- மனைவி பிள்ளைகளை வெளியே அழைத்துச் செல்வதுண்டா? அப்படிப்பட்டவர்களை விரல்விட்டு எண்ணலாமா? ரி.வியை வாங்கி வீட்டில் வைத்துவிட்டு அதைப் பார்க்காதே இதைப்பார்க்காதே என்று கெடுபிடி. ரி.வியில் என்று ஒரு நாடகம் ஏழரை மணிக்குத் தொடங்கும். அதில் அம்மா மகன் இருவரின் பிடியில் மருமகள். மகனுக்கு அம்மா சொல்வது வேதவாக்கு. பச்சை நிறத்தை சிவப்பு நிறம் என்று அம்மா சொன்னால் ஓமோம் அது சிவப்பு நிறம் தான் என்பான் மகன்.


மாமியாரின் கொடுமைகளை அந்த நாடகம் சித்தரித்துக் காட்டுகிறது. அந்த நாடகத்தை மனைவிமார் போட்டதும் கணவன்மார் கத்துவார்கள். "உதை நிற்பாட்டு, பிள்ளையள் படிக்கவேண்டும்" என்று. ஏனெனில் அதில் செல்லம்மா மாமி வருவாள்! "செல்லம்மா மாமி வந்து விட்டா" என்று மனைவிமார் கணவன் காது கேட்கச் சொல்வார்கள்.

நாடகத்தில் அவளது கணவனும் தாயும் செய்த கொடுமை கொஞ்சநஞ்சமா என்ன? அதனால்தான் ரி.வி.யை நிற்பாட்டச் சொல்வது- பிள்ளைகள் படிக்கவேண்டும் என்பதற்காக அல்ல. உண்மையில் இப்படியான நாடகங்களை ஆண்கள்தான் பார்க்கவேண்டும்- திருந்த வேண்டும்? -பெண்கள் பார்த்து என்ன பிரயோசனம்?

ஞானாம்பிகை
உரும்பிராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# முகம் பளிச்சிட பிளீச் செய்யுங்கள்

இப்போதெல்லாம் எல்லோரும் தங்களை அழகாக மாற்றிக் கொள்ள ஆர்வம் காட்டுகின்றனர். அழகு நிலையத்திற்குச் செல்ல வேண்டும் என்ற ஆசை அதிகரித்துள்ளது. இருந்தாலும் தேவையில்லாமல் எதையாவது செய்து சருமத்தைக் கெடுத்துக் கொள்வோமோ என்ற பயமும் உள்ளது. முக்கியமாக முகங்களுக்குப் பயன்படுத்தப்படும் கிறீம்களாலும் கருவி களாலும் பாதிப்பு வருமோ என்ற சந்தேகங்கள் உள்ளன. அதே போல ஒரு தடவை பேஷியல், பிளீச் செய்து கொண்டால் தொடர்ந்து அதை செய்ய வேண்டும் இல்லையென்றால் சருமம் கெட்டுவிடும் என்ற தவறான நம்பிக்கை உள்ளது. பேஷியல் பிளீச் செய்யும் போது முகம் பொலிவடைந்து அழகாகத் தெரிவதால்தான் மீண்டும் மீண்டும் செய்து கொள்கின்றார்களே தவிர தொடர்ந்து செய்ய வேண்டிய கட்டாயம் இல்லை.

**பிளீச் செய்தால் சருமம் பாதிப்படையுமா?**

முகத்தில் உதட்டிற்கு மேலே தாடைகளில் கன்னங்களில் லேசாக முடி வளர்ந்திருக்கும்.

இதனை வக்ஸிங், திரட்டிங் மூலம் எடுக்க விரும்பாதவர்கள் பிளீச் செய்து முடியை மறைக்கலாம் பிளீச் செய்யும்போது முடியின் கறுப்பு நிறம் மறைந்து சரும நிறத்திற்கு ஏற்றவாறு மாறிவிடும் முடி இருப்பதே தெரியாது. முகம் பளிச்சென்று ஆகிவிடும் ஆனால் இந்த நிறமாற்றம் ஒரு மாதத்திற்குத்தான் இருக்கும். பிறகு மீண்டும் முடி வளர்ச்சி தெரிய ஆரம்பித்து விடும்.

பிளீச் என்றாலே ரசாயனம் என்ற கருத்து உள்ளது. ரசாயனம் இல்லாமல் பழங்கள், மூலிகைகள் ஒட்சிசன் கலவையுள்ள பிளீச்கள் வந்து விட்டன. அலர்ஜி, அரிப்பு போன்ற எந்த பிரச்சினையும் இருக்காத பவுடர், கெமிக்கல் பிளீச் வேண்டாம். அரிப்பு அலர்ஜி ஏற்படுத்தலாம் பிளீச் செய்யும்போது அதில் சேர்க்கப்படும் கலவை சரியான அளவில் இருக்க வேண்டும்.

கொஞ்சம் அதிகமானாலும் முகத்தில் வாயை சுற்றிலும் தீக்காயம் போல் கறுத்து விடும்.எனவே இதை வீட்டில் செய்யக் கூடாது அழகு நிலையங்களில் மாதம் ஒருமுறை செய்து கொள்ளலாம். வெய்யிலில் போகாதவர்களுக்கு இரண்டு மாதம் வரை பிளீச் பயனளிக்கும் நிகழ்ச்சிகளில் மட்டும் பளிச்சென்று இருக்க விரும்புவோர் அப்போது மட்டும் பிளீச் செய்து கொள்ளலாம் தொடர்ந்து பயன்படுத்தாவிட்டால் பாதிப்பு வருமோ என்று பயப்படத் தேவையில்லை.

பிளீச் செய்து முடிந்தவுடனே முகம் வறண்டு போன மாதிரி இருக்கும் அதனைக் குறைக்க முகத்திற்கு ஈரப்பதம் கொடுப்பது அவசியம் அதற்கு பேஷியல் செய்யலாம் அல்லது முகத்திற்கு After Bleach Cream அல்லது ஜெல் பயன்படுத்தி முகத்திற்கு Pack போடலாம் கூடுதல் பொலிவும் பளபளப்பும் பெறும்.



**பிளீச் டிப்ஸ்**

* பிளீச் செய்த 15 நிமிடத்திற்குள் அதனை அகற்றி விட வேண்டும். நிறைய நேரம் விட்டால் முகத்தில் உள்ள முடியெல்லாம் சரும நிறத்திற்கு மாறாமல் வெள்ளையாகி விடும்.
* பிளீச் செய்ததும் அலர்ஜி, எரிச்சல் இருந்தால் அந்த இடத்தில் குளிர்ச்சியான நீர் அல்லது ஐஸ் கட்டிகளை வைக்கலாம்.
* முதல் முறை பிளீச் செய்யும் போது கையில் பிளீச் போட்டு அது அலர்ஜி இல்லாமல் இருந்தால் பின்பு முகத்திற்கு போடலாம்.

**எதற்காகப் பேஷியல் செய்ய வேண்டும்?**

பேஷியல் செய்வதனால் இரத்த ஓட்டம் அதிகரித்து சருமத்திற்கு ஒட்சிசன் குறைத்து முகம் பளபளப்புப் பெறும். சருமத்தின் அடியில் படிந்திருக்கும் அழுக்கு வெளியேறி பளிச்சென்று இருக்கும். அதேபோல அதிகமாக திறந்திருக்கும் சருமத் துவாரங்கள் நெருக்கமாக, லூஸான சருமம் இறுக்கமாகும். பேஷியல் செய்யுமுன் உங்கள் சருமத்தின் தன்மையை அறிந்து சிகிச்சை அளிக்க வேண்டும் வறண்ட சருமம் கொண்டவர்கள் உலர்ந்த பழங்களால் செய்யப்பட்ட கிறீமையும், எண்ணெய் பசையானால் அதனை நீக்கும் கிறீமையும் (Oil Control) பயன்படுத்தலாம்.

இருபது வயதுக்கு மேல் அனைவரும் பேஷியல் செய்து கொள்ள வேண்டும். இருபது வயதிலிருந்து முப்பது வயதுக்குள் முகத்தில் சுருக்கம் இருக்காது ஹேர்பல் அல்லது மைல்டான பேஷியல் செய்து கொள்ளலாம் அதிகமாக மசாஜ் செய்யக் கூடாது.

ஏனெனில் சருமத்தில் எலாஸ்டின் கொலாஜின், புரதம் உள்ளது. சரியாக தெரியாமல் மசாஜ் செய்தால் எலாஸ்டின் கொலாஜின் குறைந்து சருமம் லூஸாகிவிடும்.

முப்பது வயதிற்கு மேல் எலாஸ்டின் கொலாஜின் எண்ணெய் சத்து குறைந்து போகும்.சருமம் லூஸாகி சுருக்கம் விழும். எனவே சுருக்கத்தை நீக்கும் பேஷியல் செய்து கொள்ளலாம். பருக்கள் இருந்தால் பேஷியல் செய்யக்கூடாது.

திருமதி அஜந்தா ராஜேந்திரா
Dip. in Beauty Therapy
& Hair Dressing(India),
City&Guilds(UK)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனிக்காலத்தில் உதடுகளைப் பராமரிக்க



இரண்டு தேக்கரண்டி ரவையுடன் ஒரு கரண்டி தேனைக் கலந்து உதடுகளில் மசாஜ் செய்தால், உதடுகளில் ஏற்பட்ட வெடிப்புகள் நீங்கும்.

நல்லெண்ணெயை வெதுவெதுப்பான சூட்டில் உதடுகளில் தடவலாம்.

பனிக்காலத்தின் போது போதுமான அளவு நீர் அருந்த வேண்டும்.

இளஞ்சூடான வெண்ணெயை பருத்தியிலான மெல்லிய துணியினால் நனைத்து உதடுகளின் மேல் வைத்து 20 நிமிடங்களுக்கு பிறகு எடுக்கவும். இதை வாரத்தில் இரு முறை செய்யலாம்.

உடலில் விட்டமின் பி குறைந்தால் கூட வெடிப்புகள் ஏற்படலாம். அதனால் பால், முட்டை, இறைச்சி, மீன், வாழைப்பழம், கீரை, உருளைக்கிழங்கு, அத்திப்பழம், பாலாடைக் கட்டி, தயிர் போன்ற விட்டமின் பி உள்ள உணவுப் பொருள்களை உண்பதன் மூலம் வெடிப்புகள் ஏற்படுவதை தடுக்கலாம்.

ஒரு துண்டு பப்பாளியை விழுதுபோல் அரைத்து, அவற்றை உதடுகள் மற்றும் உதடுகளை சுற்றியுள்ள பகுதியில் தடவவும். 10 முதல் 15 நிமிடம் வரை ஊறிய பிறகு தண்ணீரால் கழுவவும்.

உதடுகளில் வெடிப்பு ஏற்பட்டு அதிகமான வலி இருந்தால், இரவு தூங்குவதற்கு முன்பு சிறிதளவு நெய் அல்லது வெண்ணெயை தடவி படுத்துவிட்டு, காலையில் தண்ணீரால் கழுவினால், வெடிப்புகள் நீங்கும்.

# மஞ்சளும் அழகுக் குறிப்பும்



மஞ்சளை அதன் இலையோடு சேர்த்து பாசிப் பயிறு மாவோடு கலந்து தினமும் உடலில் பூசிக் குளித்தால் சுருக்கம் நீங்கும். மஞ்சள் இலை மற்றும் குப்பை மேனி இலை இரண்டையும் அரைத்து குளித்த பிறகு உடலில் பூசிக் கழுவுவதை தினமும் செய்தால் பூனை முடிகள் உதிரும். கழுத்து, கணுக் கால்களில் கருமை யைப் போக்க மஞ்சள் தூளை தயிரில் கலந்து தடவி வரவும்.

மஞ்சளுடன் வேப்பிலையை அரைத்துப் பூசி பிறகு குளிர் நீரில் கழுவினால் முகப்பருவில் சீழ் பிடிக்காது.

முகத்தோல் சொரசொரப்பாக இருந்தால் மஞ்சளோடு துளசியை அரைத்துப் பூசி வரவும்.

மஞ்சள் கிழங்கு ஒன்றுடன் ஒரு எலுமிச்சை இலையை சேர்த்தரைத்துப் பூசினால் முகம் பளிச் சென்று மாறும். மஞ்சளை அரைத்துப் பூசத் தேவையில்லை, மஞ்சள் கலந்த நீராவி கூட அழகைக் கூட்டும். குண்டு மஞ்சள் கிழங்கு, கெட்டிக் கிழங்கு முக அழகை கூட்டி அதிக நிறம் கொடுக்கும்.

பாதவெடிப்பிற்கு குண்டு மஞ்சள் கிழங்கை அரைத் துப் பூசி வந்தால் போதும்